22 Years

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

# விளம்பரம்

VLAMBARAM™

416-282-8059 E-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com 416-282-4978

RBC Insurance

இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை

உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்

Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)



அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.

Call: 416.301.1733

Join Our Brokerage - Real Estate Needs

416.315.9397

www.mahendran.ca



Raja Mahendran, P.Eng.
Email: raja@mahendran.ca

நதி 22 பாலம் 04 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் FEBRUARY 15, 2012

# புதிய சட்டம் கடத்தல் காரருக்கு எதிரானதா? அகதிகளுக்கு எதிரானதா?

கனடிய நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள Bill C - 4 ஆள்கடத்தல் காரருக்கு எதிரானதா? அல்லது அகதிகளுக்கு எதிரானதா? இது பற்றி ரொறொன்ரோ ஸ்ரார் பத்திரிகை தனது பெப்ரவரி 13, 2012 இல் வெளிவந்த இதழில் ஆராய்ந்துள்ளது. குடிவரவு மற்றும் குடிவுரிமைக்கான கனடிய அமைச்சர் ஜேசன் கென்னி Bill C - 4 பற்றி கூறுகையில் இப்புதிய சட்டமூலம் கனடாவிற்கு ஆட்களை கடத்துபவர்களுக்கு தண்டனை வாங்கிக் கொடுக்கும் என்றார்.



1939 இல் கனடாவிற்கு MS. St Louis என்ற கப்பலில் வந்த 907 யூத அகதிகளை கனடா திருப்பி அனுப்பியதை நினைவு கூருமுகமாக கடந்த ஆண்டு கனடிய அரசு ஒரு நினைவுச்சின்னத்தை (Wheel of Conscience) கலிபக்ஸ் (Halifax) இல் திறந்து வைத்தது. இத்திறப்பு விழாவில் பேசிய அமைச்சர் ஜேசன் கென்னி, கனடா தங்கள் உயிருக்கு பயந்து ஓடிவரும் உண்மையான எந்த அகதிக்கும் தனது கதவுகளை திறந்தே வைத்திருக்கும் என்றார்.

ஆனால் அறிமுகப்படுத்தப்படும் இந்த புதிய சட்டமூலம் கனடாவரும் அகதிகளை ஒரு வருடம் தடுப்பு முகாமில் வைப்பதன் மூலமும் ஐந்து வருடங்களுக்கு அவர்களை நாட்டை விட்டு எங்கும் செல்லமுடியாமல் தடுப்பதன் மூலமும் அகதிகளை தண்டிக்கிறது. அதாவது 1939 இல் St. Louis கப்பலில் வந்தவர்களுக்கு நேர்ந்த கதியில் இருந்து கனடா இன்னமும் பாடம் படித்ததாக தெரியவில்லை.

புதிய சட்டமூலம் கனடாவிற்கு வரும் அகதிகளை இரண்டு வகையாக பிரிக்கிறது. முதலாவது வகை; கனடிய அரசு தீர்மானிக்கும் உண்மையான அகதிகள். அதாவது அகதிமுகாமில் பல வருடங்களாக இருந்து, அல்லல்பட்டு, கனடிய அரசின் அனுமதியை கோரி, அதன்பின்னர் ஐந்து வருடங்களுக்கு மேல் தமது விண்ணப்பங்கள் கனடிய அரச அதிகாரிகளால் பரிசீலிக்கப்படும் வரை பொறுமைகாத்து இருப்பவர்கள். இரண்டாவது வகை; 'வரிசை தாண்டுபவர்கள்' (Queue Jumpers) இவர்கள் சரியான முறையில் அகதிகளாக விண்ணப்பிப்பதற்கு தங்களது நாட்டில் வசதிகள் இல்லாதவர்கள், (No processing Centre) தங்களது நாட்டு அரசின் கொடுமைகளால் பொறுத்திருக்கமுடியாமல் உயிருக்கு பயந்து ஓடி வருபவர்கள்.

இப்புதிய சட்டமூலத்தின் மூலம் குடிவரவு அதிகாரி ஒருவர், அகதி ஒருவர் குற்றம் செய்தவராக கருதும் இடத்து அவரை குறைந்தது ஒரு வருடகாலமாதல் தடுப்பு முகாமில் தடுத்து வைத்திருக்கலாம். இதற்கு அகதி மீது சட்டப்படி குற்றம் சாட்டப்படத்தேவையும் இல்லை, அந்த அகதி குற்றவாளி என நிரூபிக்கப்படவும் தேவையில்லை. அதாவது ஒரு குடிவரவு அதிகாரி சந்தேகப்பட்டாலே போதும்.

அகதி நிலை கோரி விண்ணப்பிக்கும் எல்லோரையும் தடுத்து வைத்திருக்கும் அவுஸ்திரேலிய அரசு இப்போது இம்முறையை மீள்பரிசோதனை செய்கிறது. ஏனெனில் கடந்த 2010 - 2011 ஆம் ஆண்டில் மட்டுமே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டோரில் 1,100 பேர் தற்கொலை முயற்சி செய்துள்ளனர். இங்கிலாந்திலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள அகதிகள் பலர் தற்கொலை முயற்சி செய்துள்ளனர்.

கனடாவின் குழந்தைகள் நலம் பற்றி வெளிவரும் சஞ்சிகை ஒன்று, இவ்வாறு தடுத்து வைக்கப்படும் அகதிகளின் குழந்தைகள் எவ்வாறு மனஉளைச்சல் அடைந்து நிரந்தரமாக பாதிக்கப்படுகிறனர் என அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்தில் தடுத்து வைக்கப்பட்ட குழந்தைகளுக்கு நடந்ததை உதாரணமாக எடுத்துக்காட்டி எழுதியுள்ளது.

அகதிகளை தடுப்புமுகாமில் தடுத்துவைப்பதால் வரியிறுப்பாளர்களது பல கோடிக்கணக்கான பணம் செலவழிக்கப்படுகிறது என அரச கணக்கு பரிசோதகர் தனது 2008 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கூறியுள்ளார். இவர் 2006 - 2007 இல் நடந்த செலவுகளை கணக்கு பார்த்து வருடம் ஒன்றிற்கு ஒரு அகதியை தடுத்து வைக்க அரசு $86,870 ஐ செலவு செய்வதாக கூறியுள்ளார்.

கனடிய பிரதமர், கனடிய குடிவரவு மற்றும் குடிவுரிமைக்கான அமைச்சர் மற்றும் கனடிய பொதுசன பாதுகாப்பு அமைச்சர் ஆகிய

தொடர்ச்சி 02ஆம் பக்கம்



Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
5215 Finch Ave. E. Suite #203 Scarborough, ON M1S 0C2
*Independently Owned and Operated

உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
RBC Royal Bank®
Gteat Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers. • Pre-approvals.
சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்



Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paski.kanagasabapathy@rbc.com

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200



HomeLife/Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

Sales & LEASING





MARKVILLE TOYOTA
KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி <
9 ஆண்டுகள் அனுபவம்
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

துரித பணமாற்றுச் சேவை
• 54 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 21 ஆண்டு சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்





3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
DR. Iru VIJAYANATHAN, BDS, FAGD
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

# புதிய சட்டம்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

மூவரும் கனடாவிற்கு கப்பல் மூலம் வந்த அகதிகளை 'வரிசை தாண்டுபவர்கள்' என திரும்ப திரும்ப கூறி, அவர்களை அகதிகள் அல்ல ஏதோ சட்டவிரோதமான செயலை செய்தவர்கள் என பொதுமக்களிடம் நிரூபிக்க முயல்கிறனர். ஆனால் அவர்கள் தங்கள் உயிருக்கு பயந்து நாட்டை விட்டு ஓடிவந்த உண்மையான அகதிகள் தான்.

கனடா ஐக்கிய நாடுகளுக்கான அகதிகள் சாசனத்தில் முதலில் கையெழுத்திட்ட நாடுகளில் ஒன்று. அதன்படி அகதிகளை பாரபட்சமற்ற முறையிலும் தண்டனை அளிக்காமலும் விசாரணை செய்ய வேண்டும். இந்த இரண்டுமே இப்புதிய Bill C - 4 சட்டமூலத்தால் மீறப்படுகிறது. கனடா அகதிகளை பராமரிக்கும் ஐக்கியநாடுகள் சாசனத்தில் பங்குபற்றும் 25 நாடுகளில் ஒன்று. இந்த 25 நாடுகளும் சேர்ந்து 2010 ஆம் ஆண்டில் 80,000 அகதிகளை ஏற்றுள்ளன. இதில் 7,000 அகதிகளையே கனடா ஏற்றுக்கொண்டது. அதாவது 9% அகதிகளையே கனடா ஏற்றுக்கொண்டது.

1939 இல் தமது உயிருக்காக அழுது மன்றாடிய 907 யூதர்களையும் எதிர்கொண்ட அப்போதைய கனடிய பிரதமர் மக்கன்சி கிங் கூறியது; யூதர்களது அகதிப்பிரச்சினை கனடாவின் பிரச்சினை அல்ல என்பதே. அன்றில் இருந்து கிட்டத்தட்ட 70 வருடங்களுக்கு பின்னர் கப்பலில் வந்த 492 தமிழ் அகதிகளும் கனடிய எல்லையினுள் வந்ததும் தற்போதைய கனடிய பிரதமர் ஸ்ரீபன் காப்பர் கூறியது 'நாங்கள் எமது நாட்டின் எல்லைக்காவலிற்கு பொறுப்பு. அகதிகளை வரவேற்பதோ இல்லையோ என்பதை அங்கே வைத்தே முடிவு செய்வோம்' என்றார். நாங்கள் கனடிய கடல் எல்லைக்குள் தமது உயிரை பணயம் வைத்து வந்த அகதிகளுக்கு இப்போதும் 1939 இல் கூறிய மாதிரி, 'இது எங்கள் பிரச்சினை இல்லை என்று அவர்கள் வேறுவிதமாக (கப்பலில்) எமது நாட்டிற்குள் நுழைந்ததை காரணம்காட்டி கூறலாமா?' இவ்வாறு அகதிகளாக எம்மிடம் பாதுகாப்பு கேட்டுவரும் குடும்பங்களையோ குழந்தைகளையோ தண்டிக்கலாமா? நாங்கள் Bill C - 4 யை சட்டமாக்கினால் இப்படியான ஒரு குற்றத்தை செய்ய உடந்தையாக இருந்தவர்கள் ஆவோம்.

நன்றி: ரொறொன்ரோ ஸ்ரார்

# ஐக்கியநாடுகள் சபையை நோக்கி நீதிக்கான நடை பயணகள்!

பெல்ஜியத்திலிருந்து, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை நோக்கி நீதிக்கான நடை பயணம் மேற்கொண்டுள்ள மூவர், வெட்டவெளிப் பிரதேசங்கள் ஊடாக கடும் குளிர் மற்றும் எதிர்காற்றுக்கு மத்தியில் பல கிலோமீற்றர் தூரத்தை கடந்து நடந்து கொண்டிருக்கின்றனர். இதேவேளை லண்டனிலிருந்தும் இருவர் நடைபயணத்தை பல கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்து நடந்துகொண்டிருக்கின்றனர். ஐரோப்பிய நாடுகளில் கடந்த சில நாட்களாக நிலவும் கடும் குளிரான காலநிலையை தமிழ் மக்கள் நன்கு அறிந்திருந்தும் தமிழீழ மக்களின் விடிவுக்காக, ஐரோப்பிய நாடுகளின் அரசியல் தலைவர்கள், மக்கள், மற்றும் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக இந்த இலட்சியப் பயணதை மேற்கொண்டுள்ளனர்.

இவர்கள் மனம் தளராது உறுதிநடை மேற்கொள்ளும் அதேநேரத்தில் அனைத்துலக போர்க்குற்ற விசாரணைக்குழு அமைக்கப்பட வேண்டும் என்ற செய்தி தாங்கிய அஞ்சல் அட்டைகள் ஊடாகவும், துண்டுப்பிரசுரங்கள் மூலமாகவும் தமிழீழ உணர்வாளர்களால் விழிப்புணர்வுப் போராட்டமும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஈழத்தமிழ் மக்களின் இலட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் நீதிக்கான நடை பயணத்தின் நோக்கத்தையும், தமிழ் மக்கள் மீது சிறீலங்கா அரசாங்கம் மேற்கொண்ட இன அழிப்பு, அதன்போது இழைக்கப்பட்ட போர்க்குற்றங்களை அம்பலப்படுத்துவதன் மூலமே வெளிநாடுகளின் ஆதரவையும், வெளிநாட்டு மக்களின் ஆதரவையும் நாம் பெற்றுக்கொள்ள முடியும் என நடை பயணத்தை மேற்கொள்ளும் உறவுகள் சுட்டிக்காட்டுகின்றனர்.





# கனடாவின் கடந்தாண்டு சனத்தொகை 33.5 மில்லியன்!

கனடாவின் சனத்தொகை 33.5 மில்லியன். கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட சனத் தொகை கணக்கெடுப்பின் விபரங்கள் வெளியிடப்பட்டன. ஏற்கெனவே 2006 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் போது இருந்த தொகை தற்போது 5.9 வீதத்தினால் அதிகரித்துள்ளது. ரொறொன்ரோ, கியூபெக், வன்கூவர் போன்ற நகர்ப் புறங்களிலேயே சனத்தொகை அதிகள வில் பெருகி வருவதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இவர்களுள் பெரும்பாலானோர் கியூபெக், அட்லான்டிக் மாகாணங்களை விடுத்து ஒன்ராறியோவின் மேற்குப் புறத்திலேயே வாழ்ந்து வருகின்றனர். G8 பொருளாதார அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகளில் கனடாவில் மாத்திரமே இவ்வாறு சனத்தொகை அதிகரித்துள்ளது. கனடாவின் ஏனைய மாகாணங்களை விட பெரிய மாகாணமான ஒன்ராறியோவே அதிக சனத்தொகை கொண்ட மாகாணமாகும். கனடாவின் மொத்த சனத்தொகையில் 38.4 வீதமானோர் இங்கு வாழ்ந்து வருகின்றனர். கியூபெக்கிலும் ஏனைய கடலோரப் பகுதி மாகாணங்களிலும் 30.6 வீதமானோரே வாழ்ந்து வருகின்றனர்.

குடிவரவாளர்களைக் கவரும் மாகாணமான ஒன்ராறியோவில் குடிவரவாளர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளி னாலேயே சனத்தொகை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக




அட்லான்டிக் சந்தை ஆய்வு நிலையத்தின் இயக்குநரான டொன் மக்கைவர் கூறியுள்ளார். கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட வேலை வாய்ப்பு இன்மையும் அங்குள்ளோர் வயோதிப நிலையை அடைந்துள்ளதுமே அங்கு சனத்தொகை பெருகாததற்கு காரணம் எனவும் கூறப்படுகின்றது.

தொடர்ச்சி 04ஆம் பக்கம்

## வாசகர்கள் எண்ணங்கள்!

கல்வியங்காடு பற்றிய கட்டுரை ஒன்றை தங்கள் விளம்பரம் பத்திரிகையில் வாசித்தேன். நல்லூர் இராசதானியைச் சுற்றியிருந்த கள்ளியங்காடு நாயன்மார் கட்டு போன்ற அயல் பிரதேசங்களினையும் வரலாற்றில் படித்துள்ளோம். ஞானபாஸ்க ரோதய சனசமூகம் பற்றிய வரலாறு என் கணவரால் அடிக்கடி சொல்லப்பட்டதோடு அங்கே 60 களில் உரையாற்றும் சந்தர்ப்பமும் கிடைத்தது. நூல் நிலையத் தெருவில் தான் எமது புக்ககமும் இருந்தது.

வெள்ளிவிழாக்காலத்தில் 17 வயதான இராமலிங்கம் அவர்கள் எப்படி தாம் ஓடி ஓடி பாடுபட்டதைக் கூறுவார். அப்போது சிதம்பரப்பிள்ளை என்னும் வயதான ஆசிரியர் (பண்டிதர்) பொறுப்பாக இருந்தார். தாங்கள் அவரை அலட்சியம் செய்வதாகக் கருதி கூட்டங்களிலே "கள்ளியங்காட்டை கல்வியங்காடாக்கி வைத்த சிதம்பரி நான்" என மார்தட்டி கூறுவாராம். தங்கள் ஊர் பற்றிக் கூறும்போது இதை அடிக்கடி கூறுவாராம். அந்த ஞானபாஸ்கரோதய சனசமூகம் பற்றிய முழு வரலாற்றையும் அறிந்து அதில் சிறுபங்கு இராமலிங்கம் அவர்களுக்கும் உண்டு என்பதையிட்டும் அவற்றை மீண்டும் எம் நினைவுக்கு தீனி போட்டதற்காகவும் கட்டுரையாளருக்கு எம் நன்றியும் பாராட்டும் உரித்தாகுக.

- வள்ளிநாயகி இராமலிங்கம்

விளம்பரம் பத்திரிகை '**விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்**' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**பதிப்பாளர்:** ராஜா மகேந்திரன்
**பத்திரிகை ஆசிரியர்:** சத்தியா மகேந்திரன்
**ஊடகப்பொறுப்பாளர்:** விஜே பாலன்
**தட்டச்சு:** கலா
**அலுவலக முகாமையாளர்:** நிலானி
**பதிப்பு:** *Can Media Publishing Inc.*

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059* *FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca* *Web: www.vlambaram.com*

# வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. Vlambaram Publications Inc. , 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2
2. Tel.: 416.282.8059
3. Fax: 416.282.4978
4. email: vlambaram@sympatico.ca
5. web: vlambaram.com

# கனடாவில் தற்காலிக தொழில்புரிபவர்களின் விபத்து!

புதன் கிழமை மாசி மாதம் 8ம் நாள் பேருவிலிருந்து தெற்கு ஒன்ராரியோ பண்ணைகளில் வேலைக்கு வந்த 10 தொழிலாளிகள் மோட்டார் வண்டி விபத்தில் பலியாகினர். இது போன்ற இரண்டு விபத்துக்கள் கலிபோர்னியாவிலும், பிரிட்டிஸ் கொலம்பியாவிலும் கடந்த காலங்களில் நடைபெற்றுள்ளன.

### பேரு (Peru) நாடு

| | |
|---|---|
| சனத்தொகை: | 29.5 மில்லியன் (2010) |
| பரப்பு: | 1,285,216 $km^2$ (20ஆவது பெரிய நாடு) |
| தலைநகரம்: | லீமா |
| மொழி: | ஸ்பானிஷ் |
| அமைந்த இடம்: | தென் அமெரிக்கா |

இதனை ஒரு செய்தியாக பார்க்கமுடியாது. இதன் பின்னணியில் பல சோகங்கள் உள்ளன. இந்த தொழிலாளிகளுக்கு தங்களது உரிமைகள் கூடத் தெரியாது. பலர் ஒகிப் அட்டையற்றுள்ளார்கள்.

கனடாவிற்கு பண்ணைகள், பெருந்தோட்டங் களில் வேலை பார்ப்பதற்கு வருடந்தோறும் 25,000 பேர் வருகின்றனர். இவர்கள் இரண்டு விதமான திட்டங்களில் கனடா வருகின்றனர். 1966 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட Seasonal Agricultural Worker Program (SAWP) திட்டத்தின் கீழும், தற்காலிக வெளிநாட்டு தொழிலாளர் திட்டத்தின் கீழும் இவர்கள் கனடா வருகின்றனர். இவர்களில் 66 வீதமானோர் ஒன்ராரியோவிலும், 13 வீதமானோர் கியுபெக்கிலும், 13 வீதமானோர் பிரிட்டிஸ் கொலம்பியாவிலும் வேலை பார்க்கின்றனர். இவர்கள் கனடாவில் 8 மாதங்கள் வரை தங்கியிருக்கலாம். ஒவ்வொரு வருடமும் இவர்கள் வேலை பார்ப்பதற்கு கனடா வரலாம். இவ்வாறு 40



வருடங்கள தொடர்ச்சியாக வேலை பார்ப்பவர்களும் உண்டு. விசேட திட்டங்களின் கீழ் வருபவர்கள் 4 வருடங்கள் வரை மட்டுமே தங்க முடியும்.

ஆரம்ப நாட்களில் மெக்சிக்கோ, ஜமெய்க்கா போன்ற நாடுகளில் இருந்து தான் இவர்கள் வந்தார்கள். 2002 இல் தற்காலிக தொழில-ாளர்கள் திட்டத்தில் பல நாடுகளில் இருந்தும் தொழிலாளிகளை நிறுவனங்கள் பெற அனுமதிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத் தின் திறன் குறைந்த தொழிலாளர்களும் அனுமதிக்கப்பட்டனர். ஜமெய்க்கா, மெக்சிக்கோவுடன், பிலிப்பைன்ஸ், ஐக்கிய அமெரிக்கா, தாய்லாந்து, நிக்கரகுவா, கவுதமாலா, வியட்நாம், யுக்கிரெய்ன் போன்ற நாடுகளில் இருந்து தொழிலாளர்கள் வரவழைக்கப்படுகின்றனர். விபத்தில் அதிகமானோரை இழந்த பேரு நாட்டில் இருந்து தொழிலாளர்கள் கனடா வருவது மிக மிகக் குறைவே.

கனடிய பிரசாவுரிமை, குடிவரவு அமைச்சின் பிரகாரம் வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு உரிய மருத்துவ வசதிகள் அவர்கள் வேலை பார்க்கும் நிறுவனங்கள் ஏற்படுத்த வேண்டும். ஆனால் பெரும்பாலான தொழிலாளர்கள் பல்வேறு விதமான வருத்தங்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்த தொழிலாளர்களில் வெறும் 24 வீதமானோரே Workplace safety and Insurance Board (WSIB) க்கு கூறியுள்ளார்கள். மிகுதி பேர் தங்களை நாட்டை விட்டும் வேலையை விட்டும் வெளியேற்றி விடுவார்கள் என்ற பயத்தில் கூறவில்லை.

கடந்த வருடம் லெமிங்கரனில் இருந்து வின்சர் - ஒன்ராரியோவரை 50 கி.மீ தூரம் 12 மணித்தியாலங்கள் வரை நடந்த 150 வெளிநாட்டுத் தொழிலாளர்கள் தங்களுக்கு நீதி தேவை என குரல் கொடுத்துள்ளார்கள். நீண்ட நேர வேலை, முறையான மருத்துவ வசதிகள், இருப்பிட வசதிகள் இல்லை, அடிமை போல் நடத்துதல் போன்றவற்றிக்கு எதிராகவே குரல் கொடுத்துள்ளனர்.

வெளிநாட்டுத் தொழிலாளர்கள் இலங்கையில் தோட்டத் தொழிலாளர்களைப் போன்றே நடத்தப்படுகின்றனர். செவ்விந்தியரைப் போல் இவர்களும் குரல் கொடுப்பாரின்றி அடிமை களாக தோட்டங்களிலும் பண்ணைகளிலும் வேலை பார்க்கின்றனர்.

# படாத பாடுபடும் 13ஆவது திருத்தச் சட்டமும் அரசாங்கத்தின் பித்தலாட்டப் போக்குகளும்!

**---இலங்கையிலிருந்து மங்களநாதன் அரவிந்தன்---**

இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட 13 ஆவது அரசியல் திருத்தச் சட்டம் இப்போது படாத பாடு படுகின்றது. அந்தத் திருத்தச் சட்டத்தை வைத்துக் கொண்டு இலங்கை அரசாங்கம், அரசியல் தீர்வு விடயத்தில் சித்து விளையாட்டுக்களைக் காட்டிக் கொண்டிருக்கின்றது

இலங்கை இந்திய ஒப்பந்தம் 1987 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டது. இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காண்பதற்காக இந்த ஒப்பந்தத்தின் மூலம் உருவாக்கப்பட்டதே 13 ஆவது அரசியல் திருத்தச் சட்டமாகும். இதில் வடக்கு கிழக்கு இணைப்பு பற்றி குறிப்பிடப்பட்டிருக்கின்றது. மாகாணத்திற்கான பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் பற்றியும் இதில் பேசப்பட்டிருக்கின்றது.

இரு நாட்டு அரசாங்கங்களுக்கும் இடையில் எட்டப்பட்ட இணக்கத்தின் அடிப்படையில் ஒப்புக்கொள்ளப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதாக இலங்கை அரசாங்கம் அப்போது ஏற்றுக்கொண்டது. அவ்வாறு ஏற்றுக்கொண்டு நாட்டின் அரசியல் திருத்ததில் அவை பற்றிய திருத்தங்களைச் செய்த அப்போதைய அரசாங்கம், அதனை நாடாளுமன்றத்தில் சட்டமாக்கியது.

ஆனால் இந்தியாவுடன் இந்த ஒப்பந்தத்தைச் செய்து கொண்ட மறைந்த ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன அரசாங்கமும் சரி, தொடர்ந்து வந்த அரசாங்கங்களும் சரி 13 ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகள் எதனையும் எடுக்கவில்லை. அதற்கு மாறாக அந்தத் திருத்தச் சட்டத்திற்கு முரணான வகையில் இணைந்திருந்த வடக்குக் கிழக்கு மாகாணத்தை உச்ச நீதிமன்றத் தீர்ப்பு ஒன்றின் ஊடாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான இப்போதைய அரசாங்கமே பிரித்துள்ளது.

விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் கடுமையான ஆயுத மோதல்கள் இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளையிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் 2009 ஆம் ஆண்டு மே மாதம் விடுதலைப்புலிகள் அரசாங்கத்தினால் தோற்கடிக்கப்பட்டதையடுத்து, இனப் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காணப்படும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உறுதியளித்திருந்தார்.

அரசியல் தீர்வுக்கு அடிப்படையான விடயங்களில் ஓர் இணக்கப்பாடு எட்டப்பட்டு அதன் அடிப்படையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தப் போவதாக ஒன்றுக்கு மேற்பட்ட தடவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உறுதியளித்திருந்தார். இந்த உறுதி மொழிகள் இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் வழங்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. இவற்றில் இந்தியாவுக்குக் கொடுக்கப்பட்ட உறுதி மொழி குறித்து, அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமாகிய கெஹெலிய ரம்புக்வெல்ல அறிவித்துள்ளார். இதற்கு முன்னதாக, ஜனாதிபதி மகிந்தவுடன் நடத்திய பேச்சுக்களின்போது, 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதுடன் அதற்கும் மேலாக உரிமைகளை வழங்கப்போவதாக அவர் தன்னிடம் உறுதியளித்ததாக இலங்கைக்கு விஜயம்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
• Detailing
• Motor Shampoo
• Interior Shampoo
• Exterior Wash
• Waxing
• Repairs
• Safety Certification
• Overall Maintenance
• Under Coating
• Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL

# ராகிங் - கல்விச் சோலையில் ஒரு முட்புதர்

"ராகிங்"கால் சமீபத்தில் நாட்டின் பல பகுதிகளில் ஏற்பட்ட சாவும் மற்றும் தற்கொலைக்கான முயற்சிகளும் தற்போது நாட்டையே உலுக்கி வருகிறது. துரதிர்ஷ்டவசமாக, இது ஒரு வருடாந்திர சடங்காக மாறி வருகிறது. மாணவர்கள் பல கனவுகளோடு எந்த கல்லூரிகளில் சேர்ந்தனரோ அங்கேயே அவர்களுக்கு மிருகத்தனமான வரவேற்பு கிடைக்கிறது. சில மாணவர்கள் எதிர்த்துப் போராடுகின்றனர், சிலர் புகார் செய்கின்றனர், ஆனால் பெரும்பான்மையோர், உயிருக்குப் பயந்து வெளிப்படையாக எதிர்க்க முடியாமல் துன்பப்படுகின்றனர். சில கொடூரமான சாவுகள் ஏற்படும்போது மட்டும் அங்கங்கே சில எதிர்ப்புகள் தென்படுகின்றன. இதே நிகழ்ச்சிகள் இப்படி ஒவ்வொரு வருடமும் தொடர்ந்தபடியே இருக்கிறது.





நடைபெறும் இடம் - *Scarborough Convention Centre*
*20 Torham Place,*
*Scarborough, ON - M1X 0B3*

இந்த நிகழ்ச்சிகள் நடக்கும்போது குடும்பத்தினர் அடையும் கடுமையான வேதனையும் அதிர்ச்சியும் எதிர்பார்க்கக் கூடியதே. ஏனெனில், குறிப்பாக இந்தியா வில், பெரும்பான்மையான பெற்றோர் தங்கள் குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கைக்கு ஏற்றபடிதான் தங்கள் வாழ்க்கையையே, தங்கள் வேலை தங்கள் இருப்பிடம் உட்பட அமைத்துக் கொள்கின்றனர். தங்கள் வாழ்விலும் அவர்கள் பெரிதாக எந்தக் கொண்டாட்டத்தையும் அமைத்துக் கொள்வதில்லை. தங்கள் குழந்தைகளின் எதிர்காலத்திற்கு என்ன தேவையோ அதைப் பொறுத்தே அவர்கள் தங்கள் விருப்பத்தை மாற்றிக் கொள்கின்றனர். இத்தகைய அர்ப்பணிப்பு பலன் கொடுக்கும் நேரத்தில், தங்களுடைய எதிர்ப்பார்ப்பில் பேரிடி விழும்படியாக சில மனமுதிர்ச்சியற்ற மாணவர்கள் நடந்து கொள்ளும்போது அவர்களின் கனவு தகர்ந்துவிடுகிறது. அரசாங்கம் மற்றும் சமூகம் ஆகியவற்றின் மெத்தனத்தால் இப்படி நடப்பது இதயத்தை நொறுக்குவதாக உள்ளது. மேலும் இந்த மாணவர்கள், எதிர்காலத்தில் மருத்துவராக வந்து தங்கள் உயிரை காப்பார்கள் என்று மக்கள் நம்பிக் கொண்டிருக்கும்போது, அதே மருத்துவ மாணவர்கள் சக மாணவர்களின் உயிருக்கே ஊறு விளைவிக்கிறனர் என்னும்போது இந்தச் செயல் மக்களை மிகவும் அதிர்ச்சிக்குள்ளாக்குகிறது.

மேற்கிலிருந்து பெறப்பட்ட இந்த பழக்கத்தை எந்த வகையிலும் நியாயப் படுத்த முடியாது. ஓர் இடத்திற்கு புதிதாக வருபவர்களை கொடூரமான முறையில் துன்புறுத்துவது என்பது நமது கலாச்சாரத்திற்கே எதிரானதாகும். விருந்தினர்களை கடவுளாகவே பாவித்து, "அதிதி தேவோ பவ" என்று வணங்குவதுதான் நமது கலாச்சாரம். ஏற்கெனவே கல்லூரிகளில் இருக்கும் மூத்தவர்கள் புதிதாக வருபவர்களுக்கு வழிகாட்டிகளாக இருப்பதை விட்டுவிட்டு சித்திரவதை செய்பவர்களாக இருக்கிறனர். எந்த ஒரு இடத்திற்கும் ஒரு நாள் முன்னர் வந்திருந்தாலும் தான்தான் அந்த இடத்திற்கு அதிக உரிமையானவர் என்பது போலவும் புதிதாக வருபவர்களிடம் தன் அதிகாரத்தை செலுத்த முனைவதும் நவீன சமூகத்தின் சாபக்கேடாக உள்ளது.

ராகிங் என்பது புதியவர்களை வரவேற்கும் ஒரு வழி என்று நியாயப்படுத்துபவர்களும் இருக்கிறனர். வரவேற்பது என்றால் வரவேற்கப்படுபவர் தான் வரவேற்கப்படுவ தாக உணர வேண்டுமே தவிர துன்புறுத்தப்படுவதாக உணரக்கூடாது. எந்த செயலுக்கு நீங்கள் முதலில் உட்பட விரும்ப மாட்டீர்களோ அதே செயலை மற்றவர்களுக்கும் செய்யாமல் இருப்பதுதான் பண்பான செயல். புதிதாக சேர்ந்த மாணவர்களை மூத்தவர்களுக்கு எதிராக ஒன்றுபடுத்தி போராட வேண்டும் என்பதாக சிலர் கூறி வருகிறனர். இது, அமெரிக்காவில் மாணவர்கள் சேர்ந்து ஆசிரியரை சுட்டுக் கொலை செய்த நிகழ்ச்சிகளை நினைவுபடுத்துகிறது. அமெரிக்காவில் தற்போது ஆசிரியர்களும் வகுப்பறைகளுக்கு துப்பாக்கியுடன் வருவதுதான் சிறந்தவழி என்று இப்போது சிலர் அங்கு அறிவுறுத்த ஆரம்பித்திருக்கிறர். எனவே இளையவர்களை மூத்தவர்களுக்கு எதிராக போராடத் தூண்டுவது போன்றவை, பள்ளி நிறுவனங்கள் இரத்தக்களறியாக மாறுவதைதான் ஊக்குவிக்கும்.

இந்தக் கலாச்சாரத்தில், எப்போதும், கற்கும் இடங்கள் ஒரு கோவிலாகத்தான் மதிக்கப்பட்டு வந்திருக்கின்றன. நமது கலாச்சாரத்திலும் பள்ளி நிறுவனங்களிலும் புதிதாக நுழைந்திருக்கும் இந்த மனப்பாங்கை சரியாகக் கையாளாவிட்டால், அவர்களுக்குள் எந்த ஒரு கற்றலும் நிகழாது. கல்வி நிறுவனங்களிலிருந்து இந்த ராகிங்கை நாம் களையாவிட்டால், கல்வி என்பது மனித நலனுக்கான அற்புதக்கருவி என்பது மாறி அழிவுக்கான கருவியாக ஆகி விடும்.



## சத்குரு வாசுதேவ்

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

நாட்டை நாம் குழப்பம் மிக்கதாக நடத்திச் செல்கிறோம். தெருவில் யாராவது முட்டாள்தனமாகவோ காட்டுமிராண்டித்தன மாகவோ சிறிய அளவில் தாக்குதல் நடத்தினால் கூட புதிய சட்டங்கள் தேவை என பேச ஆரம்பித்து விடுகிறோம். ராகிங்கை கட்டுப்படுத்த நமக்கு புதிய சட்டங்கள் தேவை என மக்கள் சிந்திக்க ஆரம்பித்து விட்டனர். புதிய சட்டங்கள் துணையிருப்பின் குற்றவாளிகளை எளிதில் தண்டிக்க முடியும் என்பது உண்மைதான். ஆனால் கல்வி நிறுவனங்களில் நிலவும் கொடூரம், கலகம் ஆகியவற்ற நிறுத்த ஏற்கெனவே இருக்கும் சட்டங்களே போதுமானது என்பதை கவனிக்கத் தவறக்கூடாது. அனைத்து நிலைகளிலும் இந்த சட்டங்களை தயவு தாட்சண்யமின்றி அமல்படுத்த வேண்டுவது தான் இப்போதைய தேவை. கடுமையான நடவடிக்கைகள் எடுக்கும்படி கல்வி நிறுவனங்களை அரசும், சமூகமும் வலியுறுத்த வேண்டும். நமது நாட்டில் அடுத்த கல்வியாண்டின் துவக்கத்தில் ஒரு சிறிய ராகிங் நிகழ்ச்சி கூட நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது நம் அனைவரின் இப்போதைய அவசியத் தேவையாக இருக்கிறது.

# கனடாவில் மகாராணி வைர விழா பதக்கம் பெறப்போகும் 60 கனேடியர்கள் பெயர் அறிவிப்பு!



எலி-செபத் மகாராணி 1952 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி பதவி ஏற்று அறுபதாவது ஆண்டினை ஒட்டிய வைர விழா பெப்ரவரி 6, 2012 முதல் கனடாவில் ஆரம்பமாகியுள்ளது. இந்த வருடம் முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட விருக்கும் இந்த விழாவில் சமூகத்திற்கு சிறந்த பணியாற்றியுள்ள கனடியர்களுக்கு பதக்கம் வழங்கப்பட உள்ளது. முதற்கட்டமாக இந்த பதக்கங்களை பெறப்போகும் 60 கனடியர்களின் பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது. வருடம் முழுவதும் ஒட்டு மொத்தமாக 60,000 கனடியர்கள் இந்த பதக்கங்களை பெறப்போகின்றனர் என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

கடந்த 60ஆண்டுகளுக்கு முன் எலிசெபத் மகாராணி பதவி ஏற்ற பின்னரே கனடா வில் பெரும் முன்னேற்றமும், அபிவிருத்தியும் ஏற்பட்டதால் அவரை கௌரவிக்கும் பொருட்டு இந்த விழா நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்

# கனடாவின்...

1666 ஆம் ஆண்டு ஜீன் ரலோன் என்பவரால் முதன் முதலாக கனடாவில் குடிசனக் கணக்கெடுப்பு மேற் கொள்ளப்பட்டது. ஜீன் ரலோன் 1625 ஆம் ஆண்டு பிரான்சில்



பிறந்தார். பிரான்ஸ் 1663 ஆம் ஆண்டு கனடா வை தனது காலனித்துவ நாடாக்கியது. அதன் பின்னர் கனடாவைப் பற்றிய புள்ளி விபரங்களை திரட்டுவதற்காக கிங் லூயிஸ் மன்னன் ஜீன் ரலோனை 1665 ஆம் ஆண்டு கனடாவுக்கு அனுப்பி வைத்தார். நீதித்துறை, பொலிஸ் பாதுகாப்பு, பொருளாதாரம் ஆகியன சம்பந்தமாக அப்போது கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. ஜீன் ரலோனே முகாமையாளராக இங்கிருந்து செயற்பட்டார். அக்காலத்தில் பிரான்சில் இருந்து இங்கு வந்து குடியேறியோருக்கும் ஆதிவாசிகளான செவ்விந்தியர்களுக்கும் இடையே பெரும் எதிர்ப்பு இருந்து வந்தது.

அன்று அவரால் மேற்கொள்ளப்பட்ட குடிசனக் கணக்கெடுப்பு தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## சனிக்கிழமை வோக் - இன் 9.00 am - 5.00 pm வரை

கிரடிட் கார்ட், லயின் ஒப் கிரடிட், அந்த பில், இந்த பில் என்று உந்த கடன் தொல்லையால ஒரே தலையிடியா கிடக்கு ; ? ? ?

உதுக்குத்தானே இப்ப மோட்கேஜ் கிளினிக் நடக்குது. ! அங்க போனால்தான் உந்த தலையிடி மாறும் . ! ! !

வாங்க மோட்கேஜ் பற்றி பேசலாம் ! !

# மோட்கேஜ் கிளினிக்

நல்ல றேட்டில மோட்கேஜ் இருக்கு ஆனால் பிரேக் பண்ணாமல் கொஞ்ச காசு எடுக்கலாமா ?

வேற என்னென்ன கடனை ஒரே பேமன்ராக மோட்கேஜுடன் சேர்க்கலாம் ?

சாமத்திய வீட்டுகடன் சீதனகாசுக்கடன் மகளின்ர அரங்கேற்ற கடன்

வந்துபேசிப்பாருங்கோ ! பிடிச்சிருந்தா ........... மேல பேசுவம் ! ! !

அழையுங்கள்



**416-644-3555**

22 ← Ext → 28



**CENTUM Rapid Mortgages Inc.**

FSCO LIC # 10156

211-80 Nashdene Road, Scarborough ON M1V 5E4

தயா PK கந்தையா BAS, ABR, AMP
**Principal Broker / President**
FSCO License # M 08001083
**T.P : 416-716-8707**

ஜெ. இராசதுரை (Jey) MBA, BBA (Hons), AMP
**Team Leader & Agent**
FSCO License # M 09001428
**T.P : 416-624-4843**

rapid realty inc. ⟹ "Rapid Response; Rapid Results"

# விளையாட்டுத் தகவல்கள் 323

## ஐசிசியின் தரவரிசைப் பட்டியல் வெளியீடு

சர்வதேச கிரிக்கட் கவுன்சில் டெஸ்ட் போட்டியின் அடிப்படையில் வீரர்களின் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது. துடுப்பாட்ட வீரர்களின் வரிசையில் இலங்கை வீரர் சங்ககரா முதலிடத்தில் உள்ளார். அதன் பின் காலிஸ் (தென் ஆப்பிரிக்கா) 2-வது இடத்திலும், கிளார்க் (அவுஸ்திரேலியா) 3-வது இடத்திலும் உள்ளனர். டிவில்லியாஸ் (தென் ஆப்பிரிக்கா), யூனுஸ்கான் (பாகிஸ்தான்), அலிஸ்டர்குக் (இங்கிலாந்து), சமரவீரா (இலங்கை) அம்லா (தென் ஆப்பிரிக்கா) ஆகியோர் முறையே 4 முதல் 9-வது இடங்களில் உள்ளனர். பத்தாவது இடத்தில் இந்திய அணி வீரர் சச்சின் உள்ளார். இதேபோன்று பந்து வீச்சாளரக-ளின் வரிசையில் தென் ஆப்பிரிக்காவின் வேகப்பந்து வீரர் ஸ்டெய்ன் 896 புள்ளிகளுடன் முதல் இடத்திலும், அஜ்மல் (பாகிஸ்தான்) 2-வது இடத்திலும், ஆண்டர்சன் (இங்கிலாந்து) 3வது இடத்திலும் உள்ளனர்.

ஸ்டூவர்ட் பிராட் (இங்கிலாந்து), பீட்டர் சிடில் (அவுஸ்திரேலியா), சுவான் (இங்கிலாந்து), அப்துர் ரகுமான் (பாகிஸ்தான்), ஹில்பென் ஹாஸ் (அவுஸ்திரேலியா), மார்னே மார்கல் (தென் ஆப்பிரிக்கா) ஆகியோர் முறையே 4 முதல் 9வது இடங்களில் உள்ளனர். 697 புள்ளிகளுடன் ஜாகீர்கான்(இந்தியா) பத்தாவது இடத்தில் உள்ளார்.

## யுவராஜ் சிங்கின் சமீபத்திய புகைப்படம்



யுவராஜ் சிங் புற்றுநோய் பாதிப்பில் இருந்து விரைவாக மீள கீமோதெரபி சிகிச்சை மேற்கொண்டு வருகிறார். இதன் பக்கவிளைவு காரணமாக தலைமுடியை இழந்து, உடல் மெலிந்து காணப்படுகிறார். இந்திய கிரிக்கட் அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர் யுவராஜ் சிங். இவரது நுரையீரலுக்கு இடையில் கோல்ப் பந்து அளவுக்கு சிறிய புற்றுநோய் கட்டி இருப்பது கண்டறியப்பட்டது. இதற்காக அமெரிக்காவில் உள்ள பாஸ்டன் புற்றுநோய் ஆய்வு மையத்தில் கீமோதெரபி சிகிச்சை பெற்று வருகிறார். இந்த சிகிச்சையில் பக்கவிளைவுகள் காரணமாக தலைமுடி இழப்பு, உடல் மெலிவது வழக்கம். யுவராஜும் தலைமுடியை முழுமையாக இழந்து, ஆளே மாறிப் போயிருக்கிறார்.

தனது டுவிட்டர் இணையதளத்தில் சமீபத்திய புகைப்படம் ஒன்றை வெளியிட்டு ரசிகர் களுக்கு செய்தி விடுத்துள்ளார். அதில், இறுதியில் எனது தலைமுடி போய் விட்டது. ஆனாலும் வலிமையாக இருக்கிறேன். தேசமே எனக்காக பிரார்த்திக்கும் நிலையில் மிகவும் துணிச்சலாக போராடி, வலுவான வீரராக மீண்டு வருவேன். இது உடலுக்கு நன்றாக இருந்தது. புற்றுநோய்க்கு எதிராக போராடி வெற்றி பெறுவோம் என்பதை வலியுறுத்தி எனக்காக அமுல் நிறுவனம் பிரத்யேகமாக வெளியிட்ட விளம்பரம் மிகவும் சிறப்பாக இருந்தது என்று தெரிவித்துள்ளார்.

## சச்சின் இல்லாமல் வெற்றி வசப்படுமா?

அவுஸ்திரேலிய மண்ணில் இந்திய அணியின் வெற்றிக்கு சச்சினின் பங்கு அதிகம். இவருக்கு முத்தரப்பு தொடரின் அடுத்த போட்டியில் ஓய்வு கொடுத்தால் வெற்றி வசப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. அவுஸ்திரேலியாவில் நடக்கும் முத்தரப்பு தொடரில் ரோகித் சர்மாவுக்கு வாய்ப்பு தருவதில் இந்திய அணித்தலைவர் தோனி உறுதியாக உள்ளார். இவருக்காக முன்னணி வீரர்கள் சுழற்சி முறையில் தெரிவு செய்யப்பட உள்ளனர். இதன்படி முதலிரண்டு போட்டிகளில் சேவக், காம்பிருக்கு ஓய்வு அளிக்கப்பட்டது. அடுத்து அவுஸ்திரேலியா வுக்கு எதிராக நடக்க உள்ள போட்டியில் சச்சினுக்கு ஓய்வு அளிக்கப்படும் என தெரிகிறது. புள்ளிவிவரப்படி பார்த்தால் கடந்த 22 ஆண்டுகளில் இந்திய அணி, ஆஸ்திரேலிய மண்ணில் 5 ஒருநாள் போட்டிகளில் தான் வென்றுள்ளது. இதில் சச்சின் பங்கு தான் அதிகம். கடந்த 1991-92ம் ஆண்டில் பேர்த் போட்டியில் இந்திய அணி, 107 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியாவை வென்றது. இதில் சச்சின் தான் இரண்டாவது. அடுத்து 12 ஆண்டுகளாக 11 போட்டிகளில் தொடர் தோல்வி. 2003-04ல் 19 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா வென்றது. பின் வந்த மூன்று வெற்றிகளும் கடந்த 2007-08 தொடரில் கிடைத்தது. மெல்போர்னில் நடந்த லீக் போட்டியில் 159 ஓட்டங்களை துரத்திய இந்திய அணிக்கு, 54 பந்துகளில் 44 ஓட்டங்கள் எடுத்து வெற்றிக்கு கைகொடுத்தார் சச்சின். பின் நடந்த முதல் இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியாவின் 240 ஓட்டங்கள் என்ற இலக்கை அடைய, சச்சின் சதம் அடித்து உதவினார். தொடர்ந்து இரண்டாவது இறுதிப் போட்டியில் 91 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார்.

கடந்த 2008 தொடரின் முதல் இறுதிப் போட்டியில் ரோகித் சர்மா அரைசதம் அடித்ததுதான் அதிகம். இதன் பின் இந்த அணிக்கு எதிரான 7 போட்டிகளில் மொத்தமே 37 ஓட்டங்கள் தான் எடுத்தார். எனவே சுழற்சி முறையில் வீரர்களை தெரிவு செய்வது குறித்து தோனி சிந்தித்து தான் முடிவு எடுக்க வேண்டும்.

## வரலாற்று சாதனை படைத்த பாகிஸ்தான்

இங்கிலாந்துக்கு எதிராக முதன் முறையாக பாகிஸ்தான் அணி 3-0 என்ற கணக்கில் டெஸ்ட் தொடரை கைப்பற்றி வரலாற்று சாதனை படைத்தது. துபாயில், பாகிஸ்தான்-இங்கிலாந்து அணிகள் மோதும் மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் நடந்தது. முதல் இன்னிங்சில் பாகிஸ்தான் 99, இங்கிலாந்து 141 ஓட்டங்கள் எடுத்தன. இரண்டாவது இன்னிங்சில் பாகிஸ்தான் அணி 365 ஓட்டங்கள் எடுத்தது. மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து அணி, இரண்டாவது இன்னிங்சில் விக்கெட் இழப்பின்றி 36 ஓட்டங்கள் எடுத்திருந்தது. நான்காவது நாள் ஆட்டம் நடந்தது. ஸ்டிராஸ் முதலில் சரிவைத் தொடங்கி வைத்தார். அடுத்து வந்த டிராட், பீட்டர்சன் இருவரும் தலா 18 ஓட்டங்கள் எடுத்து, சயீத் அஜ்மல் சுழலில் பெவிலியன் திரும்பினர். நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திய அலெஸ்டர் குக் அரைசதம் வாய்ப்பை இழந்தார். முன்னணி பந்துவீச்சாளர்களை பாகிஸ்தானின் சுழற் பந்து வீச்சாளர்கள் கவனித்துக் கொள்ள, மிடில் ஆர்டரை உமர் குல் வேகத்தில் சிதைத்தார். இவரது பந்துவீச்சில் முதலில் பெல் சிக்கினார். அடுத்து மார்கன் 31 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். கடைசி நேரத்தில் சற்று அதிரடியாக ஓட்டங்கள் சேர்த்தார் பிரையர். டெயிலெண்டர்கள் சுவான், ஆண்டர்சன் விரைவில் ஆட்டமிழந்தனர். முடிவில் பனேசர் (8) அப்துல் ரெஹ்மானிடம் சிக்க, இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்சில் 252 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளை யும் இழந்து, 71 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்ந்தது. பிரையர் ஆட்டமிழக்காமல் இருந்தார். பாகிஸ்தான் சார்பில் சயீத் அஜ்மல், உமர் குல் தலா 4 விக்கெட் கைப்பற்றினர். முடிவில் 3-0 என டெஸ்ட் தொ-டரை முழுமையாக வென்ற பாகிஸ்தான் அணி கிண்ணத்தை கைப்பற்றி அசத்தியது.

## அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ்: ஜோகோவிச் சாம்பியன்

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் செக்குடியரசின் ஜோகோவிச் சாம்பியன் பட்டம் வென்றார். அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் மெல்போர்னில் நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் செக் குடியரசின் ஜோகோவிச், ஸ்பெயினின் ரபேல் நடாலை எதிர்கொண்டார். இப்போட்டியின் தொடக்கம் முதலே இருவரும் ஒருவருக்கு ஒருவர் சளைக்காமல் விளையா-டியதால் போட்டி விறுவிறுப்பாக இருந்தது. முதல் செட்டை நடால் கைப்பற்றினார். இரண்டாவது மற்றும் மூன்றாவது செட்டை ஜோகோவிச் வென்றார். நான்காவது செட்டைநடால் போராடி வென்றார். சாம்பியனை நிர்ணயிக்கும் இறுதி செட்டை ஜோகோவிச் கைப்பற்றி பட்டம் பெற்றார். அவுஸ்திரேலியா ஓபன் டென்னிஸ்: விக்டோரியா அஸரென்கா சாம்பியன் அவுஸ் திரேலியன் ஓபன் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் இறுதிப் போட்டியில் பெலாரஸ் வீராங்கனை விக்டோரியா அஸரென்கா சாம்பியன் பட்டம் வென்றார்.

அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் இறுதிப் போட்டியில் 3ம் தரவரிசை வீராங்கனையான விக்டோரியா அஸரென்கா, ரஷ்யாவின் மரியா ஷரப்போவாவை எதிர் கொண்டார். விக்டோரியா அஸரென்கா, 4ம் தரவரிசை வீராங்கனையான ஷரப்போவாவை மிக எளிதாக வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றுள்ளார். விக்டோரியா பெற்றுள்ள முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.



**எஸ். கணேஷ்**


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



**Dr. J. Mohan**
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

## தொடர் - 360

# கனடிய ஆதன நிர்மாணம் கடந்த ஆண்டு மேலும் அதிகரிப்பு

இதுவரை யூன் மாதம் 2007ஆம் ஆண்டே அதிகூடிய கட்டிட அனுமதிகளை (Permit) வழங்கிய மாதமாகக் காணப்பட்டது. ஆனால் டிசம்பர் 2011 கனடாவின் மாநகரங்கள், பிரதேசங்கள் வழங்கிய கட்டிட அனுமதிகளின் (Permit) எண்ணிக்கையில் மீண்டும் ஒரு சாதனையாக வந்துள்ளது. பொதுவாக ஆதன வியாபாரத்திலும் டிசம்பர் மாதம் மந்தமாகவே காணப்படுவது. டிசம்பர் 2011இல் 6.8 பில்லியன் பெறுமதியான Permit கள் வழங்கப்பட்டுள்ளன என்பது ஆச்சரியப்படக்கூடிய தகவல். இது இதற்கு முந்தைய மாதம், நவம்பரை விட 11.1% அதிகரிப்பாகும்.

இந்த அதிகரிப்பில் முக்கியமாக ஒன்ராரியோவில் வழங்கப்பட்ட அடுக்குமாடி மனைகளிற்கான Permit மற்றும் அல்பேட்டாவில் வழங்கிய வியாபார நிலையத்திற்கான Permit களே அதிகமாகும். முக்கியமானதாக ஒன்ராரியோவில் கொடுக்கப்பட்ட Permits களே அதிகமாகும். கனடாவின் 34 முக்கிய மாநகரங்களில் 17 மாநகரங்களில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அண்மையில் கனடிய புள்ளிவிபர அறிக்கையின் தகவலிலிருந்து கனடிய மக்கள் தொகை 34.6 மில்லியனாக அதிகரித்துள்ளது. இதில் இதுவரை அதிக வளர்ச்சியை தொடர்ந்து பெற்றுவந்த ஒன்ராரியோவை, அல்பேட்டா தள்ளி விட்டது என்பது கவனிக்கத்தக்கது. ரொறொன்ரோ பெரும்பாகத்திலிருந்து பல வணிகவியல் உற்பத்தி (Manufacturing) நிறுவனங்கள் வேறு இடங்களிற்கு மாறியது, பல நிறுவனங்கள் மூடியவை போன்றவையும் அல்பேட்டா, சஸ்கச்சுவான் போன்றவற்றில் ஏற்படும் தொழில்வாய்ப்பு போன்றவை. ஒன்ராரியோ சனத்தொகை வளர்ச்சியை கட்டுப்படுத்துவது என முடிவிற்கு வரலாம். 2006இலிருந்து 2011 ஆண்டு வரையான மாற்றத்தையே இந்த புள்ளிவிபரம் தெரியப்படுத்தியுள்ளது. இந்நிலைமை எதிர்காலத்திலும் தொடருமா!

கனடிய முக்கிய நிதி நிறுவனங்களின் தலைமையகங்கள் ரொறொன்ரோவின் மத்திய பாகத்தில் அமைந்து இருப்பதாலும் அத்துடன் தொடர்புடைய பல வேறு தொழில் நிறுவனங்கள் தமது தலைமையகங்களை ரொறொன்ரோ விலே வைத்துள்ளன. இப்பொழுது நிதி நிறுவனங்களே அதிகூடிய தொழிலை ரொறென்ரோவில் கொடுத்து வருகின்றது. இந்த காரணங்களால், ரொறொன்ரோவில் அதிக அடுக்குமாடி மனைகள் கட்டப்பட்டு வருகின்றன. இந்தநிலைமை தொடரும் என்று எதிர்பார்க்கமுடியுமா? நிலைமை இவ்வாறு இருந்தபோதிலும் ரொறொன்ரோவின் Vacancy Rate 1.1% ஆகவே காணப்படுகின்றது. அதாவது 100 மனைகளை எடுத்தல் 1-2 மனைகளே வாடகைக்கு கொடுபடாமல் உள்ளது. இது மிகமிகச்சிறிய எண்ணிக்கை.

அண்மைக்காலங்களில் வாடகைக்குரிய வீடுகளோ, அப்பாட்மென்டுகளோ (Apartments) நிர்மாணம் செய்வது மிகக் குறுகி விட்டது. இதனால் புதிதாக உருவாகும் குடும்பங்கள், படித்த இளைஞர்கள், புதிதாக நாட்டிற்கு வருபவர்கள் அடுக்குமாடி கொண்டோ மனைகளையே நாடுகின்றார்கள். இதனாலே Vacancy Rate மிகக்குறைவாகக் காணப்படுகின்றது. கடந்த வருடம் 20,000 வரையிலான புதிய அடுக்குமாடி மனைகள் (High rise) கட்டப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை கடந்த பல வருடங்கள் 12,000 இலிருந்து 14,000 வரையே காணப்பட்டது. இந்நிலைமை எதிர்வரும் 4/5 வருடங்களிற்கு தொடரும் என எதிர்பார்க்கலாம். அத்துடன் தனிவீடுகள், ரவுன் வீடுகள் போன்றவைகளும் (Low Rise) கையளிக்கப்படுகின்றன. இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் ரொறொன்ரோவில் கடந்த இரு வருடங்களில் 5 இற்கு உட்பட்ட புதிய வியாபார நிலையங்கள் (Commercial Projects) நிர்மாணிக்கப்பட்டுள்ளன. எனவே எதிர்காலத்தில் Commercial கட்டிடங்களிற்கு எதிர்பார்ப்பு கூடலாம். தேவைகளும் கூடலாம்.


HomeLife/GTA
Realty Inc. Brokerage*
*Independently Owned & Operated



Raja Mahendran, P. Eng.
Broker/Owner

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

CONDO. FOR RENT
1. One + Den condo. for rent Scaborough Center.
2. 1 Bedroom + 2 Bedroom in West of DownTown.

CONDO. FOR SALE
LAKE SHORE & PARK LAWN



2 Bedroom + 2 Washroom condo. for sale. Close to all facilities. Asking price $389,900.

FOR LEASE
GTA SQUARE MALL
5215 Finch. Ave. East. Renovated Unit on the
* 2nd floor. 2 Rooms. Telephone connected. Starting From $850.

CONDO. FOR SALE
BRIMLEY & ELLESMERE



2 Bedroom + 1 Washroom condo. for sale.
Asking price $290,000

SPACE FOR LEASE
5200 Finch. Ave. East.
1. 300 sq.ft. Rent only $400.
2. 779 sq.ft. Rent Only $1000.
3. 620 sq.ft. Rent $1100.
4. 2000 sq.ft. Available for Flower shop, Salon, Car Rental, Tution Classes. Many more uses. Reasonable Rent.

CONDO. FOR SALE
LAKE SHORE & PARK LAWN



2 Bedroom + 1 Washroom condo. for sale. Asking price 349, 900.

5215 Finch Ave. E, #203, Toronto - Tel: 416.321.6969 & 145 Traders Blvd #29, Mississauga - Tel: 905.712.2666


# எங்கே போகின்றது எங்கள் வருமானம்?

## திரும்பிப் பார்ப்போம்!

சென்றமுறை கூறியவற்றை முதலில் இங்கே நினைவு கூர்வோம். பின் மேலே தொடர்வோம். மனிதன் வாழ்வில் பாதுகாப்பைத் தேடுகின்றான். பாதுகாப்பு நிறைவுற்ற பின் பெரும்பான்மையோர் சேமிக்க ஆரம்பிக்கின்றனர். அதன் தொடர்ச்சி, செல்வத்தைப் பெருக்குவதில் சென்றடைகின்றது.

ஆசைகள் இயல்பானவை, பேராசை ஆபத்தானவை. தன்னம்பிக்கையே மிகப் பெரிய சொத்து. இவற்றிலிருந்து பிறப்பதே வாழ்வின் நோக்கங்களும், குறிக்கோள்களும். நிம்மதியான வாழ்வுக்கு பொருளும் தேவை. அருளும் தேவை. பொருள் ஈட்டும் காலத்தேதான் அருளையும் ஈட்ட வேண்டும். அருளை ஈட்ட என்று மனிதனுக்குத் தனிக் காலம் தரப்படுவதில்லை அல்லது கிடைப்பதில்லை. அறமே அருளின் முதல்படி. பொருள் ஈட்டலும் அறத்தின் வழியேதான் அமைய வேண்டும்.

மேற் சொன்னவற்றை வரைபடத்தின் மூலம் விளக்கியிருந்தோம்.




வாழ்வின் நோக்கம் பலருக்கும் இப்படித்தான் இருக்கின்றது. மகிழ்ச்சியான வாழ்க்கை, நல்ல குடும்பம், நல்ல வாழ்க்கைத்துணை, பிள்ளைகள், நிம்மதியான ஓய்வு காலம், செல்வந்தன் ஆதல், பெரும் பொருள் ஈட்டல் இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். இவற்றின் படிகள் - பாதுகாப்பு, சேமிப்பு, வளர்ச்சி.

## இனி

இம்முறை பாதுகாப்பைப் பற்றி மேல் எழுந்த வாரியாகப் பார்ப்போம்.

பாதுகாப்பு எனும்போது எப்போதும் பொருள் கிடைத்துக் கொண்டே இருக்க வேண்டும். இல்லையா? வேலை இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, சில அடிப்படைச் செலவுகளைச் சந்திக்கப் பணம் தேவை. அப்படியானால் மூன்றிலிருந்து ஆறுமாதம் செலவிற்கான பணம் சேமிப்பில் இருக்க வேண்டும். அந்தச் சேமிப்பு எந்த நேரத்திலும் எடுக்கக் கூடியதாக இருக்க வேண்டும். வங்கிச் சேமிப்புக் கணக்குகளில் அந்தப் பணத்தைப் போட்டு வைத்திருக்கலாம். இல்லை Line of Credit இலிருந்து எடுக்கக் கூடிய வசதி இருந்தால் அதையும் அவசரத்தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். Line of Credit என்று சொல்லப்படும் வங்கிக் கடன் வசதியில் ஒரு சிக்கல் உண்டு. தேவையான நேரத்திற்கு கிடைக்காமலும் போகலாம். ஏதோ ஒரு காரணத்திற்காக வங்கி அந்த Line of Credit என்று சொல்லப்படும் கடன் வசதியை ரத்து செய்தால் ஒன்றும் செய்ய இயலாது. ஏன் ரத்து செய்ய வேண்டும்? எத்தனையோ காரணங்கள் வரலாம். உதாரணத்துக்கு ஒன்று. உங்கள் கடன் சரிதம் மோசமானால் அல்லது நீங்கள் சக்திக்கு மீறி கடன் வாங்குவதாக வங்கி கருதினால் உங்கள் கடன் வசதியை ரத்து செய்ய முடியும். அந்தக் கால கட்டத்தில் பணம் தேவைப்பட்டால், உங்கள் நிலைமை என்ன?.... சற்றே யோசியுங்கள். எனவே கொஞ்சம் சேமிப்பை, கடனுக்கு வெளியில் வைத்திருத்தலே புத்திசாலித்தனம்.

அடுத்த பாதுகாப்பு, காப்புறுதிகளின் மூலம் வருகின்றது. மனிதனின் மிகப் பெரிய சொத்து தன்னம்பிக்கையும், சம்பாதிக்கும் திறனுமே. அதை காப்புறுதியின் மூலம் உறுதிப் படுத்திக்கொள்ள வேண்டும். சட்டப்படி வாகனத்துக்கு காப்புறுதி வைத்திருக்கவில்லை என்றால் குற்றம் என்றாகின்றது. ஆனால் உங்கள் உயிருக்கோ, உடமைகளுக்கோ காப்புறுதி வைத்திருக்கவில்லை என்றால் குற்றம் ஆகாது. பத்தாயிரம் அல்லது முப்பதாயிரம் காரையும், அதனால் வரும் இழப்புக்களையும் சரி செய்ய சட்டம் பாதுகாப்பை, காப்புறுதியை கட்டாயம் ஆக்குகின்றது. ஆனால் அதைவிட மிகப்பெரிய சொத்தான உங்கள் உறவுகளையும், உங்களையும், உங்கள் சம்பாதிக்கும் திறனையும் பாதுகாப்பதைப் பற்றிப் பலபேர் காலம் கடந்த பின்னரே சிந்திக்கின்றனர். கண் போனபின் சூரியனைப் பார்க்க ஆசைப்பட்ட கதை தான். கண் இருக்கும் காலத்தே சூரியனை வணங்க வேண்டும். அதேபோல காப்புறுதிகளும் நல்ல ஆரோக்கியமும், உடல் நிலையும் உள்ள காலத்தே தான் குறைந்த செலவில் (பிரீமியத்தில்) கிடைக்கும். ஆரோக்கியம் கெட்ட பின் ஒன்று கிடைக்காது. அல்லது கிடைத்தாலும் பிரீமியம் கூடுதலாக இருக்கும்.

ஆயுட் காப்புறுதிகளில் அடிப்படையில் இரண்டு வகைதான் உள்ளது.

1. தவணைக் காலம். 2. நிரந்தரம்.

தவணைக் காலம் என்பது 10, 20 அல்லது 30 வருடங்களுக்கு காப்புறுதி எடுத்தல் ஆகும். குறைந்த பிரீமியமே இதன் சிறப்பு. காப்புறுதியின் தேவை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே என்றால் இத்தகைய காப்புறுதிக்குப் போகலாம். ஒரு குறிப்பிட்ட காலத்தேவைக்கு உதாரணம். பிள்ளைகள், பெரியவர்கள் ஆகும் வரை உள்ள பணத்தேவை. வீட்டுக்கடனைக் கட்டி முடிக்கும் வரை உள்ள பணத்தேவை போன்றவற்றைச் சொல்லலாம்.

நிரந்தர காப்புறுதிகளின் பிரீமியம் மிகக் கூடுதலாக இருக்கும். ஆனால் அவற்றின் பயன் கால வரையறைக்குட்பட்டது அல்ல. பத்து, இருபது, முப்பது என்று காலவரையறை கிடையாது.

இதேபோல அங்கவீனம் அடைந்தாலோ, கொடிய நோய்களினால் பாதிக்கட்டாலோ பயன் பெறவும் காப்புறுதிகளைப் பயன்படுத்தலாம். இவற்றின் பிரீமியமும் மிகக் கூடுதலாக இருக்கும். உங்கள் தேவை மற்றும் சக்திக்கு ஏற்ப தகுந்த காப்புறுதிகளை உங்களுக்கும், உங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கும் எடுத்திருத்தல் திட்டமிட்ட புத்திசாலித்தனமான வாழ்வின் அடையாளம்.

வீட்டுக் கடன் வாங்கியிருந்தால் கடன் கொடுத்த நிறுவனம் வீட்டைப் பாதுகாக்க காப்புறுதி எடுக்க வலியுறுத்துகின்றது. இந்தக் காப்புறுதி இல்லாமல் கடன் தொடர முடியாது. இந்தக் காப்பறுதி ஆயுட்காப்புறுதியினின்றும் மாறுபட்டது. வங்கிகளும் ஆயுட்காப்புறுதியை வீட்டுக் கடனுடன் விற்பனை செய்கின்றன. ஆயினும் நாம் அத்தகைய ஆயுட் காப்புறுதியைப் பற்றி இங்கு குறிப்பிடவில்லை. வீட்டை நெருப்பிலிருந்து குறிப்பாகப் பாதுகாக்க எடுக்கப்படும் காப்புறுதியையே இங்கு குறிப்பிடுகின்றோம்.

சிலசில சூழ்நிலைகளுக்கு சிலசில காப்புறுதிகள் நன்மை பயக்கும். உங்கள் சூழ்நிலைக்கு ஏற்ற ஆலோசனைகளை தகுந்த ஆலோசகர்களிடம் பெற வேண்டும்.

இதன் தொடர்ச்சியை இனிவரும் இதழ்களில் பார்ப்போம். இதற்கிடையில் உங்களுக்கு உள்ள கேள்வி களையும் ஆசிரியருக்கு எழுதி அனுப்பலாம். அடுத்து வரும் கட்டுரைத் தொடர் களில் பதில் தரப்படும்.



**பெரி. முத்துராமன்**

இக்கட்டுரை ஆசிரியரிடம் ஆலோசனை பெற தொலைபேசி எண் - 416.473.6100 மின் அஞ்சல் - perriidreamsandmoney.com, இணைய தளம் முகவரிகள்
www.perrii.com
www.dreamsandmoney.com

**தாரணி சட்ட அலுவலகம்**

* சட்டத்துறையில் 20 வருடங்களுக்கு மேலான அனுபவம்
* இலவச ஆரம்ப ஆலோசனை

- *Real Estate Law* வீடு, காணி, வர்த்தக நிலையம் உரிமைச் சட்டம்.
- *Family Law* குடும்பச் சட்டம்.
- *Wills & Estate* இறுதி விருப்பாவணமும், மரணச் சொத்தும் சட்டம்.
- *Power Of Attorney & Affidavit* தத்துவப் பத்திரம் & சத்தியக்கடதாசி
- *Immigration Law* குடிவரவுச்சட்டம்



**தாரணி தர்மலிங்கம்,** LLB
Barrister Solicitor & Notarypublic

**GTA Square**
5215 Finch Avenue East ,
#213
Tel: 416.291.4900
Fax: 416.291.4901
Email: contact@tharanilawoffice.com

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு www.vlambaram.com

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

**Buying or Selling**

Relocation Service
Ottawa> > > < < < GTA



நந்தா ஐயாத்துரை

Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# கடன் தொல்லையினால் வருந்துகிறீர்களா ?
# GET OUT OF DEBT WITHOUT BANKRUPTCY
# வங்குரோத்துக்கு செல்லாமல் கடன்களிலிருந்து விடுதலை
# GET OUT OF YOUR DEBT SYNDROMME

WE Settle your debts without bankruptcy



We Work for you, Trusty work for your creditors

உங்கள் அனைத்து கடன்களில்லிருந்தும் 80% வரையிலான கழிவை பெறுவதற்கும்

உங்கள் வீடு, வாகனம், மற்றும் சொத்துக்கள் அனைத்தும் சட்டமுறையில் பாதுகாப்பதற்கும்

கடன் கொடுத்தோரின் தொலைபேசி மிரட்டல்களையும், கடன் வட்டிகளை நிறுத்துவதற்கும்

மாதாந்தம் உங்கள் வருமானத்தில் இருந்து ஒரு பகுதியை கடன்காரர்கள் வசூலிப்பதை நிறுத்துவதற்கும்

ஓர் சிறிய மாதாந்தகட்டணத்தினூடாக எல்லா கடன்களையும் தீர்க்கும் வசதி செய்வதற்கும்

சகல கடன் பிரச்சனைகளிலிருந்து தீர்வுகாண சிறந்த நிபுணத்துவ வழிமுறைகளுக்கும்

உங்கள் மாதாந்த வருமானம் அரசாங்க அட்டவனைக்குட்பட்டிருந்தால்
இலவச ஆலோசனைகளையும், இலவச சேவைகளையும் பெறுவீர்கள்.................

## ARE YOU CONCERNED ABOUT YOUR DEBTS ? ABOUT YOUR HOUSE HOLD DEBTS ?

உங்கள் இறுதி முடிவை எடுக்கும் முன்னர் ஒரு தடவை எங்களை அழையுங்கள்

## இத்துறையில் பல வருட அனுபவமிக்க ARU KRISH ஐ
## இன்றே அழையுங்கள்

இலவச ஆலோசனைகளுக்கு

# (416) 556-9287

PEACE OF MIND
CREDIT REVOLVING CENTRE

**Credit Revolving Center**
**(GTA Square )**
5215 Finch Ave.E, Suite #223, Scarborough, ON M1S0C2

# பெற்றோரை, பேரன்மாரை கனடாவுக்கு அழைக்க அரசு அறிமுகப்படுத்தியுள்ள புதிய 'சுப்பர் விசா'

## PARENT & GRAND PARENT "SUPER VISA"

தாயக மண்ணிலிருந்து கனடாவுக்கு தங்கள் பெற்றோரை அழைக்க விரும்புபவர்கள் அதற்குரிய தகைமைகள், நிபந்தனை களுடன் முன்னர் விண்ணப்ப படிவங்களை எடுத்து நிரப்பி அனுப்பியிருந்திருப்போம். 'நிரந்தர வதிவுரிமை' (Permanent Canadian Resident) என்னும் அந்தஸ்துடன் கனடாவுக்குள் அவர்களும் வந்து சேர்ந்தனர். சில வருடங்களின் பின்பு அவர்களில் பலர் கனேடிய குடியுரிமை யினையும் பெற்றனர். அவர்கள் நிரந்தரமான கனேடிய வாழ்வும், கனடாவின் பல சலுகைகளையும் பெற்றனர். இது யாவரும் அறிந்த விடயம்.

ஆனால்! இப்போது கனடிய அரசு அந்த நிலைமையினை திடீர் என மாற்றி விட்டது. அதற்கு பதிலாக புதிய 'சுப்பர் விசா' என்னும் புதிய முறையினை கடந்த டிசம்பர் 01. 2011 இலிருந்து அறிமுகப்படுத்தியுள்ளது. (இவ்வாறு புதியமுறை அறிமுகப்படுத்தி யிருந்தாலும் நவம்பர் 05. 2011 க்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட நிரந்தர வதிவுரிமை விண்ணப்பங்கள் மட்டும் காலங்களை இழுத்து, இழுத்து பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.) இனிவரும் காலங்களில் தாயகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் நம் பெற்றோரை கனடாவுக்கு அழைப்பதற்கு இருவழிகள்!

- புதிய சுப்பர் விசா முறை (New Super Visa Method)

அல்லது

- சாதாரண உல்லாச பிரயாணிகளுக்கு ஆறுமாதம் வழங்கும் விசா முறை (Visitors Visa Method)

இந்த இருவழிமுறைகள் தவிர மற்றவர்கள் வேறு வழியில் கனடாவுக்குள் வர முடியும். அவையாவன பின்வருமாறு.

1. துறைசார்ந்த திறமைசாலிகள் & துறைசார்ந்த நிபுணர்கள் (Skilled Workers & Professionals)

2. முதலீட்டாளர்கள், தொழில் அதிபர்கள், பாரிய வர்த்தகர்கள் (Investors, Entrepreneurs and Self Employed People)

3. கியூபெக் மாகாணத்திற்கு தெரிவு செய்யப்படும் துறை சார்ந்த திறமைசாலிகள் (Quebec Selected Skilled Workers)

4. கனடாவில் குறிப்பிட்ட மாகாணங்களில் மட்டும் குடியேற விண்ணப்பிக்கும் நிரந்த வதிவுரிமை! (Provincial Nominees)

5. கனேடிய அனுபவம் உள்ள வகுப்பினர் (Canadian Experience Class) ஏனைய நாட்டவர்கள் கனடாவுக்கு மாணவர் விசாவில் வந்து குறிப்பிட்ட காலம்வரை படித்து விட்டு, சில காலங்கள் தொழில் புரிந்துவிட்டு போயிருப்பர். அவர்கள் மீண்டும் கனடாவுக்கு நிரந்தர வதிவுரிமை பெற்று நிரந்தரமாக குடியேற விரும்பினால் ஏற்கெனவே கனடாவில் வாழ்ந்த அனுபவம் உள்ள வகுப்பினர் என்ற இவ்வழி மூலம் அணுகலாம் என கனடிய குடிவரவு அமைச்சு அறிவிக்கின்றது.

6. மாணவர் விசாவில் படிப்பதற்கு அனுமதி பெற்று வருவது (Student Permitted Visa)

7. அகதியாக வந்து சேர்ந்து நிரந்தரவதிவுரிமையாகுதல் (Refugee Claims in Canada)

8. ஐந்து பேர் சேர்ந்து அகதியாக இன்னொரு நாட்டில் தவிப்பவரை ஸ்பொன்சர் செய்வது. (Group of Five Sponsorship)

9. அகதிகளை ஸ்பொன்சர் செய்யும் நிறுவனங்கள்! (Community Sponsors of Refugees)

10. கூட்டாக நிறுவனங்களும், கனடிய பிரஜைகளும் சேர்ந்து அகதி என்ற நிலையிலுள்ளவரை ஸ்பொன்சர் செய்வது. (Joint Assistance Sponsoring Refugees)

11. குறிப்பிட்ட காலங்களுக்கு தொழில் செய்யும் வாய்ப்பு பெற்று வருவது (Working Visa Temporarily in Canada)

12. இன்னொரு நாட்டில் பிள்ளைகளை தத்து எடுத்து கனடாவுக்குள் எடுப்பது (Inter country adoption Child)

13. மனைவி, பிள்ளைகளை ஸ்பொன்சர் செய்வது! (Family Class Sponsors)

(பதின் மூன்று வழிகளையும் சாதாரணமாக கனடாவுக்கு வருவதற்கு குறிப்பிட்டுள்ளேன். ஆனால் ஒவ்வொரு வழி பாதைகளிலும் ஏராளமான நிபந்தனைகள் உண்டு.)

மேல் குறிப்பிட்ட பல்வேறு வழிகளில் கனடாவினுள் பலரும் வந்து சேர்ந்திருந்தாலும், கனடாவில் வசிப்பவர்கள் தங்கள் பெற்றோர் (Parents) பேரன்மாரை (Grand Parents) கனடாவுக்கு அழைக்க வேண்டுமாயின் தற்போது இலகுவானதும், துரிதமானதும் என கனடிய குடிவரவு அமைச்சு குறிப்பிடும் 'சுப்பர் விசா' முறையே சிறந்தது.




## கனடிய தகவல் தொடர் 166

**சரி! இந்த புதிய 'சுப்பர் விசா' என்றால் என்ன? அதில் உள்ள நிபந்தனைகள் யாது?**

- கனடாவில் வசிக்கும் நாம் எங்கள் பெற்றோர் அல்லது பேரன்மார்களுக்கு ஸ்பொன்சர் செய்ய மட்டுமே இந்த திட்டம் அனுமதிக்கும். இத்திட்டம் சகோதரர்களுக்கு ஸ்பொன்சர் செய்து அழைக்க வேண்டுமாயின் அனுமதிக்காது.

- முன்னைய ஸ்பொன்சரில் வழங்கப்பட்டது போல நிரந்தர வதிவுரிமை என்ற சொல்லுக்கு சாதாரணமாக பெற்றோரை அழைக்கும் விடயத்தில் இனிவரும் காலங்களில் இடமில்லை. இவ்விசா பத்து வருடங்களுக்கு மட்டுமே வழங்கப்படும். இரு வருடங்களுக்கு ஒருமுறை அதனை புதுப்பித்தல் வேண்டும். இக்குறிப்பிட்ட பத்து வருடங்களுக்குள் விரும்பினால் தாயகத்துக் கோ அல்லது ஏனைய நாடுகளுக்கோ பலமுறை போய் வரலாம்.

- கனடாவிலிருந்து பெற்றோருக்கு ஸ்பொன்சர் செய்பவர்களுக்கு நிரந்தர தொழில், ஒரு குறிப்பிட்ட எல்லைவரை நிரந்தர வருமானம் உள்ளவர் என்பது நிரூபிக்கப்படல் வேண்டும். அந்த எல்லை எவ்வளவு என்பது கனேடிய குடிவரவு தகவல் பிரிவுகளில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

- கனடாவில் உள்ள காப்புறுதி கம்பனிகளில் குறைந்தது ஒரு வருடத்திற்கேனும் மருத்துவ காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றினை இங்கு அழைப்பவர் தமது சொந்த பணத்தில் கைச்சாத்திட்டு எடுத்து சமர்ப்பித்தல் வேண்டும். ஏனெனில் அவர்கள் ஒன்ராரியோ மாகாண அரசின் இலவச மருத்துவ காப்புறுதியை (OHIP Health Card) பெற முடியாது. அதேபோல கனடாவிற்குள் வந்த பின்பு அரசின் இலவச பண உதவியும் பெறமுடியாது. இவர்களுக்கு என்றும் ஸ்பொன்சர் பண்ணியவரே பொறுப்பானவர் ஆவார்.

- தாயகத்தில் கனேடிய தூதராலய நேர்முக விசாரணையில் திருப்தியாக பதில் அளித்திருத்தல் வேண்டும். முக்கியமாக மருத்துவ பரிசோதனை பூரணமானதாக இருத்தல் வேண்டும்.

- துரிதகதியில் அதாவது இரு மாதங்களுக்கிடையில் சகல நிபந்தனை களும் திருப்தியாக இருந்தால் விசா வழங்கி விடுவர் என குடிவரவு தகவல் பிரிவுகளின் செய்திகளில் குறிப்பிட்டுள்ளனர்.

டிசம்பர் 01. 2011 இலிருந்து ஆரம்பித்த இவ்விசா திட்டத்தில் கடந்த டிசம்பர் 15. 2011இல் பிலிப்பைன்ஸ் நாட்டின் தலை-நகரமான 'மணிலா' நகரின் கனடிய தூதராலயம் இவ்விசாவினை முதல் நபருக்கு வழங்கி விட்டது என கனடிய குடிவரவு அமைச்சர் அறிவித்திருந்தார்.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

# உடல் - மன சோர்வு நீங்க!

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

'சோர்வு' என்பது சிறுவர்கள் முதல் முதியவர்வரை அனைவருக்கும் பொதுவாக ஏற்படுவதுண்டு. இவை உடல் சோர்வாகவும் மனச் சோர்வாகவும் வெளிப்படும். உடல் சோர்வை பயிற்சிகள் மூலமும், ஓய்வின் மூலமும் போக்கலாம். மனச் சோர்வை தியானம், யோகா மூலம் போக்கலாம்.

**சோர்வடைய காரணங்கள்** சோர்வு என்பது உடலின் சக்தியற்ற தன்மை தான். இந்த சோர்வுக்கு காரணம் உடலிலுள்ள செல்கள் சுறுசுறுப்பாக இயங்குவதற்குத் தேவையான சக்தியை உணவின் மூலம் பெற இயலாமல் போவதேயாகும். இவை தவிர இரத்த சோகை, மந்தம் போன்றவை இருப்பின் அடிக்கடி உடலில் களைப்பு தோன்றும். சிலருக்கு சிறிது தூரம் நடந்தாலோ மாடிப்படி ஏறினாலோ களைத்துவிடுவர். இரத்தக்குறைவு காரணமாக மிகக் குறைந்த அளவே பிராணவாயு திசுக்களுக்கு செல்கிறது. இதனால் திசுக்கள் போதுமான அளவு சக்தியைப் பெற முடியாமல் உடலும், மனமும் களைத்து விடுகிறது.



குடல் பூச்சிகள் இருந்தாலும் சோர்வு உண்டாகும். ஏனெனில் அவை சத்துகளை உறிஞ்சி விடுவதால் உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் கிடைக்காது போய்விடும். இதுபோல் குறைந்த இரத்த அழுத்தம், இரத்தத்தில் சர்க்கரையின் அளவு குறைதல், கல்லீரல் பாதிப்பு போன்ற காரணங்களாலும் சோர்வு உண்டாகும்.

**மனச் சோர்வு** - மனம் சோர்ந்து போனால் உடலும் சோர்வுறும். மனதை ஆரோக்கியமாக வைத்திருந்தால் தான் உடல் ஆரோக்கியத்தைப் பேணமுடியும். மனச்சிக்கல், மன இறுக்கம், கோபம் இவைகளால் உடலில் இரத்தத்தின் வேகம் அதிகரித்து இரத்தம் சூடேறுவதால் பித்த நீர் அதிகம் சுரந்து இரத்தத்தில் கலந்து அது உடல் உறுப்புகளுக்குச் சென்றடைவதால் உடல் உறுப்புகள் சோர்வு நிலையை அடைகிறது. நாளடைவில் இந்த சோர்வானது மன நோய்களுக்கு வழியாக அமையும். அத்துடன் உணர்வுகளைக் கட்டுப்படுத்துவதால் அதன் விளைவு மனச் சோர்வை அதிகமாக்கும்.

சோர்வு என்பது நோயல்ல. அது நோயின் அறிகுறியாகும். இந்த சோர்வை நீக்கினால் தான் உடல் மன ஆரோக்கியம் நிலைத்திருக்கும்.

**சோர்வை நீக்க** - இதற்காக சில நடைமுறைகளை நாம் கடைப்பிடிக்க வேண்டும். சோர்வு வரும்போது சிறிது ஓய்வெடுத்துக் கொள்வது நல்லது. எந்த செயலில் ஈடுபடும்போதோ அல்லது எதனைத் தொடர்ந்து நினைக்கும் போதோ சோர்வு ஏற்படுமானால் அதனை நிறுத்தி விட்டு வேறு வேலைகளிலும், வேறு நல்ல சிந்தனைகளிலும் நம் கவனத்தைத் திசை திருப்பினால் சோர்வு நீங்கும். பின் நிறுத்தி வைத்த வேலையை உற்சாகமாகச் செய்யலாம்.

அதிக நேரம் ஒரே இடத்தில் அமர்ந்திருத்தல், கம்யூட்டர், தொலைக் காட்சி அதிக நேரம் பார்ப்பது அல்லது தனிமையில் அமர்ந்து தேவையற்ற சிந்தனைகளில் ஈடுபடுவது போன்றவற்றை தவிர்த்தால் சோர்வு வராது. உடல் சோர்வை போக்க எளிய வழி உணவு முறைதான். சிலர் மூன்றுவேளை உணவு உண்பர். ஆனால் இடையில் எதையும் சாப்பிடமாட்டார்கள். இதனால் இவர்களுக்கு உணவு உண்ட பின்பு சோர்வு ஏற்படும். ஆனால் இடைக்கிடை சிறிதளவாக உண்ணும் பழக்கமுள்ளவர்களுக்கு உடலுக்குத் தேவையான சத்துக்கள் கிடைத்துக் கொண்டேயிருக்கும். இதனால் இவர்கள் எப்போதும் புத்துணர்ச்சியுடன் காணப்படுவர். சோர்வைப் போக்க தினமும் உணவில் காய்கறி, கீரை வகைகள் சேர்க்க வேண்டும். பழங்கள், சூப் வகைகள், சலாட் என்பனவற்றை சாப்பிட லாம். ஒருபோதும் வயிறு புடைக்க உண்ண லாகாது. வலி மாத்திரைகள், தூக்க மாத்திரைகள், காப்பி, மது, புகை பிடித்தல் போன்றவற்றை முடிந்தவரை தவிர்ப்பது சிறந்தது.

**சோர்வைப் போக்க யோகா - சுவாசப்பயிற்சி**
அமைதியிழந்த மனதுக்கு சுவாசப்பயிற்சி முறைகளில் சரசுவாசமே சிறந்தது. இதுவே மனதைச் செம்மைப்படுத்தி புத்துணர்வு பெற உதவுகின்றது. இதனால் இரத்த ஓட்டம் சீராகி சோர்வைப் போக்குகின்றது. அத்துடன் சில யோகாசனங்களைத் தேர்ந்தெடுத்து தினமும் 20 நிமிடங்களாவது செய்து வந்தால் உடலிலுள்ள நரம்பு மண்டலங்கள் அனைத்தும் இழுக்கப்பட்டு உள்உறுப்பு களுக்கு சுத்த ரத்தம் சென்றடைவதால் அவை அனைத்தும் புத்துணர்ச்சி பெறுகிறது. இதனால் சோர்வும் களைப்பும் நீங்குகிறது. மேற்கூறிய முறைகளை விடுத்து மருந்து மாத்திரைகளை உட்கொள்வது தற்காலிக நிவாரணமாக இருக்குமே தவிர நிரந்தர தீர்வாக அமையாது.



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721

NetTek Training & Solutions Inc
WORRIED about..
No Jobs? Laid Off? EI Ran Out? Part-time?
"You May Qualify for Second Career Free Funding up to $28,000"
Change Your Career! By Second Career!!



SECOND CAREER FREE FUNDING
For Eligible Clients*
UNEMPLOYED?
* Laid off after 2005 or Working less than 20 Hours
MATERNITY BENEFIT?
(Received clients within 5 years)
* Tuition/Books/Living/Daycare/Transportation Expenses
ALL FREE
Continue SERVING THE COMMUNITY FOR 14 YEARS
CAREER DIPLOMAS
* BUSINESS ADMINISTRATION
* COMPUTERIZED ACCOUNTING
* NETWORK MANAGEMENT
JOBS READY
- Bank Teller
- Accounts Clerk
- Documentation Clerk
- Administrative Clerk
- Bookkeeper
- Help Desk Support
- Technical Support Analyst
- Inventory Clerk
- Hardware Installation
- and More...
416-431-4545
TORONTO CAMPUS
(Markham Rd./Lawrence Ave.)
868 Markham Road #104,
Scarborough, ON, M1H 2Y2
MARKHAM CAMPUS
(Markham Rd./Denison Rd.)
20 New Delhi Road #97
Markham, ON, L3S 0B5
OPENING SOON
nettek-training@rogers.com www.nettek-training.com
PRIVATE CAREER COLLEGE
(Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005)
New Career Will Change Your Future!

# படாத பாடுபடும்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

செய்த இந்திய வெளிநாட்டமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணா கொழும்பில் தெரிவித்திருந்தார்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்புடனான பேச்சுக்களில், தமிழ்த்தேசிய கூட்டமைப்பு காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என முன்வைக்கப்பட்டிருந்த கோரிக்கையானது நிறைவேற்றப்பட முடியாது என்று, இந்திய வெளிநாட்டமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு முந்திய வாரத்தில்தான், ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும், அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களும் பகிரங்கமாகக் கருத்துக்களை வெளியிட்டிருந்தார்கள்.

இந்திய வெளிநாட்டமைச்சர் வந்து சென்ற பின்பும் இதே கருத்துக்களைத்தான் ஜனாதிபதியும், அமைச்சர்களும் மீண்டும் கூறியிருக்கின்றார்கள். இருந்தபோதிலும், இலங்கைக்கு எதிரான போர்க்குற்றச் சாட்டுக்களை ஐநாவின் மனித உரிமைகளுக்கான பேரவையில் ஆதரிக்கப் போவதாக அமெரிக்கா உறுதியாகத் தெரிவித்திருக்கின்றது.

இதற்கு முன்னதாக போர்க்குற்றங்கள் தொடர்பில் அமெரிக்க வல்லுநராகிய ஸ்ரீபன் ரெப் தொடக்கம் அமெரிக்க வெளியுறவுத் துறையின் பொதுமக்கள் பாதுகாப்பு, ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்கான சார்நிலைச் செயலர் மரியா ஒட்ரோ பல அமெரிக்க இராஜதந்திரிகள் இலங்கைக்கு விஜயம் செய்து, போர்க்குற்றங்கள் தொடர்பான அடிமட்ட நிலைமைகள் தொடக்கம் அரச மட்டம் வரையிலான உண்மையான நிலைமைகளை நேரடியாக விசாரித்தும் நேரடியாகப் பார்த்தும் அறிந்துள்ளார்கள்.

தனக்கு எதிராக அமெரிக்கா எடுத்துள்ள கடும் போக்கு ஒன்றைத் தெளிவாக இலங்கை அரசு முன்கூட்டியே உணர்ந்திருந்தது. எந்த வகையிலும் ஐநாவின் மனித உரிமைகளுக்கான அவையில் தனக்கு எதிராக எடுக்கப்படப் போகின்ற நடவடிக்கைகளில் இருந்து தப்பிவிட வேண்டும் அல்லது நழுவி விட வேண்டும் என்பதில் இலங்கை அரசாங்கம் மிகவும் உறுதியாக இருக்கின்றது.

இது விடயத்தில் அரசு இரண்டு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றது. முதலாவது நடவடிக்கையாக, கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையைத் தொடர்ந்து இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் விடயத்தில் தமிழர் தரப்புடன் ஓர் இணக்கப் பாட்டிற்கு ஏற்கெனவே வந்துவிட்டதாகக் காட்டுவதற்கு முற்பட்டுள்ளது.

அதேவேளை, தடைபட்டுள்ள பேச்சுவார்த்தைகளை உறுதியான ஜனநாயக வலுவுள்ள ஒரு தளத்தில் தொடர்ந்து மேற்கொள்வதற்காகத் தமிழ்த்தேசிய கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது என்பதை வெளிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

இந்த அடிப்படையில், தமிழ்த்தேசிய கூட்டமைப்புடன் இரகசிய பேச்சுவார்த்தையொன்றை நடத்தி, அதன் மீது அழுத்தங்களைப் பிரயோகித்துள்ளது.

இதற்கு ஆதரவாக அதன் நட்பு நாடு ஒன்றையும் அது இணைத்துக் கொண்டுள்ளது.

பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப் போவதாக அரசு இந்த இரகசிய சந்திப்பின்போது உறுதியளித்திருக்கின்றது. அது மட்டுமன்றி பதின்மூன்று பிளஸ் தொடர்பாக நடவடிக்கைகளை எடுத்து அவற்றை நடைமுறைப்படுத்தப் போவதாகவும் அரசாங்கம் உறுதியாகக் கூறியிருக்கின்றது.



பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் அடிநாதமாக விளங்கும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை ஒருபோதும் விட்டுக்கொடுக்க முடியாது. அதுபற்றி பேசவே முடியாது. கடந்த 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இந்தியாவின் முன் முயற்சியின் ஊடாக ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தையானது தமிழ்த்தேசிய கூட்டமைப்புடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியே பேச்சுகள் நடத்தியது. அரசாங்கம் இந்தப் பேச்சுக்களில் கலந்து கொள்ளவில்லை. அது ஓர் இரகசியமான பேச்சுவார்த்தை. அதற்கு சட்ட அங்கீகாரமோ, அரச அதிகாரமோ கிடையாது. அந்தப் பேச்சுவார்த்தை செல்லுபடியாகாது. எனவே, அதிகார பலமுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்குபற்றி தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டும் என்று மூச்சுவிடாமல் அரச தரப்பினர் கருத்துக்களையும் நிலைப்பாடுகளையும் தெரிவித்திருந்தனர். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு கட்டாயம் பங்குபற்ற வேண்டும். அதற்கான பெயர்களை உடனடியாகத் தரவேண்டும் என்று வலியுறுத்தி வந்தது. வலியுறுத்திக் கொண்டிருக்கின்றது.

இவ்வாறு முன்னுக்குப் பின் முரண்பட்ட கருத்துக்களையும் நிலைப்பாடுகளையும் வெளியிட்டு 13 ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தைப் படாத பாடுபடுத்திய அரசாங்கம் தனது தில்லுமுல்லுகளை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலம் மீண்டும் மேடையேற்றுவதற்கான முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளது.

அரசாங்கத்தின் இந்த காய் நகர்த்தலைத் தமிழ் மக்களின் அரசியல் நலன்களை வென்றெடுப்பதற்கான ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தும் வகையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பயன்படுத்துவதற்கு முயன்றிருக்கின்றது. அரசாங்கத்தின் அழைப்பையேற்று நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வருவதற்குத் தாங்கள் தயார். அதற்கான பெயர்களையும் தரலாம் என அரச தரப்பினரிடம் தெரிவித்துள்ள தமிழ்த்தேசிய கூட்டமைப்பு, வாய்மொழி மூலமாகக் கூறுகின்ற உறுதி மொழிகளை மூன்றாந் தரப்பு ஒன்றின் உத்தரவாதத்துடன் எழுத்து வடிவில் அரசாங்கம் ஆவணமாகத் தர வேண்டும் எனவும் தெரிவித்திருக்கின்றது. இந்த விடயத்தைத் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அதிகாரபூர்வமாக இன்னும் வெளியிடவில்லை.

அரசாங்கத் தரப்பினருடனான இந்தச் சந்திப்பும் அதில் பரிமாறப்பட்டுள்ள கருத்துக்கள் பற்றிய விடயங்களும் இன்னும் இரகசியமாகவே இருக்கின்றது. இதுபற்றி தமிழ்த்தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவர்களா என்பதுகூட தெரியாமல் இரகசியமாகப் பேணப்பட்டுள்ளது. அரசல் புரசலாகக் கூட தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் முக்கிய தலைவர்களும் சரி, நாடாளுமன்ற உறுப்பினர்களும்சரி வாய் மூடி மௌனமாக இருக்கின்றனர்.

அரசாங்கத்திற்கு எதிராக ஐநாவின் மனித உரிமைகள் பேரவை கூடுவதற்கு முன்னர் அரசாங்கம் கோரியிருப்பது போல, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கான பெயர்களைத் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு வழங்குமானால், மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்படவுள்ள மோசமான சர்வதேச நெருக்கடியைத் தணிப்பதற்குப் பெரிதும் உதவும் என்று கருதப்படுகின்றது.

அதேவேளை, தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் இத்தகையதொரு நிலைப்பாடானது, சர்வதேசம் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வருகின்ற போர்க்குற்றச்சாட்டில், அரசாங்கத்தின் போர்க்குற்றங்களினால் பாதிக்கப்பட்ட தரப்பினராகிய தமிழ் மக்களே சர்வதேசத்திற்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்ததாக முடியும். இது சர்வதேச ரீதியில் தமிழர் தரப்பிற்கு எதிர்காலத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைந்துவிடலாம்.

ஐநாவின் மனித உரிமைகளுக்கான பேரவைக் கூட்டத் தொடர் என்ற கண்டத்தில் இருந்து தப்பிக்கொள்வதற்காகத் தமிழ்த்தேசிய கூட்டமைப்பைத் தன்பக்கம் இழுப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள வலைவிரிப்பை, இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காண வேண்டிய புள்ளியை நோக்கி நகர்த்திச் செல்வதற்கான முயற்சியைத் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மேற்கொண்டிருப்பதாகவே தெரிகின்றது.

பதின்மூன்றாவது அரசியல் திருத்தச் சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தாமல் இருக்கின்ற அதிகாரப் பகிர்வை வழங்க மாட்டோம் என்று பிடிவாதமாக இருக்கின்ற அரசாங்கத்தைக் கொண்டு நடைமுறைப்படுத்தச் செய்யும் உத்தியைக் கையாண்டுள்ளது. மூன்றாந்தரப்பின் உறுதிப்பாட்டுடன் எழுத்து மூலமான உத்தரவாதம் ஒன்றைப் பெறுவதன் ஊடாக இதனைச் செய்யலாம் என்பது தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் எதிர்பார்ப்பாகத் தெரிகின்றது. அத்துடன் மூன்றாந்தரப்பாக வாய்மொழி மூலம் அரசாங்கத்தின் உறுதிமொழிகளை உத்தரவாதப்படுத்துவதற்கு முன்வந்துள்ள நாட்டின் ஆதரவை இழந்துவிடக் கூடாது என்பதையும் கவனத்திற்கொண்டு, தமிழ்த்தேசிய கூட்டமைப்பு முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றது.

அரசாங்கம், ஒரு வெளிநாட்டுத் தூதுவர், தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஆகிய முத்தரப்பினருக்கும் இடையில் இடம் பெற்றுள்ள இந்த இரகசிய சந்திப்பில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு கோரியிருப்பதைப் போன்று அரசாங்கமோ, ஜனாதிபதியோ, அரசியல் தீர்வுக்கான அதிகாரப் பகிர்வு தொடர்பில் எழுத்து மூலமான உத்தர வாதத்தை வழங்க முடியுமா என்பது கேள்விக்குறியே.

ஏனெனில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ச விளங்குகின்றார். நாடாளுமன்றத்தின் மூன்றிலொரு பெரும்பான்மைப் பலம் அவருக்கு இருக்கின்றது. அந்த நாடாளுமன்றத்தின் தலைவராக, சபாநாயகராக அவரது மூத்த சகோதரர் செயற்பட்டு வருகின்றார். நாட்டில் தேசிய பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியே இருக்கின்றார். அதற்கு உறுதுணையாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக, மிகுந்த அதிகார பலமுள்ளவராக அவரது சகோதரர் கோட்டாபாய ராஜபக்ச இருக்கின்றார். நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதாரம், பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றிற்குப் பொறுப்பான அமைச்சராக மற்றுமொரு சகோதரர் பசில் ராஜபக்ச செயற்பட்டு வருகின்றார். இவ்வாறு பரந்து விரிந்த வகையில் நிறைவேற்று அதிகாரமும், எத்தகைய எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் நடைமுறையில் காரியங்களை ஆற்றக்கூடிய வலிமை உடையவராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச திகழ்கின்றார். ஆயினும் இனப்பிரச்சினைக்குத் தனியொருவராகத் தான் அரசியல் தீர்வு ஒன்றைக் கொண்டு வந்தால், தனது சொந்த ஊருக்கே திரும்பிச் செல்ல முடியாது என்று அவரே வாய்விட்டு ஒன்றுக்கும் மேற்பட்ட தடவைகளில் அதிகாரபூர்வமாகத் தெரிவித்திருக்கின்றார்.

தென்னிலங்கையின் சிங்களப் பேரினவாதப் பிடிக்குள் சிக்கி, அதன் வாக்குபலத்தில் அரசியல் நடத்தி வருகின்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு அரசியல் ரீதியாக ஆப்பு வைக்கின்ற ஒரு நகர்வையே தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அரசாங்கத் தரப்பினருடனான இந்த இரகசிய சந்திப்பின் போது மேற்கொண்டிருக்கின்றது.

அதிகாரங்களைப் பரவலாக்குவேன் என்று துணிந்து பகிரங்கமாக ஓர் ஆவணத்தில் வெளிநாடு ஒன்றின் உத்தரவாதத்தோடு எழுத்து மூலமாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கையெழுத்து இடுவாரா என்பது சந்தேகமே.

இருப்பினும் அயல்நாடாகிய இந்தியா

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# எது ஒழுக்கம்? ஏன் இந்தக் குழப்பம்?

## ஓடும் நீர் உறைவதில்லை 138

ஒழுக்கம் என்றால் என்ன என்பதற்குப் பலதரப்பட்ட விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன. அகராதிகளில் ஒழுக்கத்திற்கான விளக்கத்தைத் தேடாதீர்கள். அது உங்களை ஒழுக்கம் என்பது ஒரு புரியாத புதிர் என்று குழப்பிவிடும். அகராதிகளில் ஒழுக்கம் என்பதற்கு 'ஒரு விதி முறை' என்றும் 'கட்டுப்பாடு' என்றும் விளக்கங்கள் தரப்படுகின்றன. எந்த விதி முறையை அல்லது எந்தக் கட்டுப்பாட்டைக் குறிப்பிடுகின்றன என்பது தெளிவாகத் தரப்படுவதில்லை. தரவும் முடியாது. அதற்கான காரணம், இது தான் ஒழுக்கம் அறுதியிட்டுச் சொல்ல முடியாத அளவிற்கு மனிதன் தடுமாறிப் போயிருப்பதுதான். ஏன் இந்தத் தடுமாற்றம்? முதலில் தடுமாற்றத்தை ஆய்வு செய்வது அவசியமாகின்றது.

ஒழுக்கம் என்றால் என்ன என்பதற்கு ஒவ்வொருவரும் தமது அறிவுக்கெட்டிய வரையில் அவரவர் விளக்கங்களைக் கொடுக்கின்றனர். ஒருவர் திருவள்ளுவர் சொன்னதைச் சொல்வார். இன்னொருவர் கம்பராமாயணம், பாரதம் என்பவற்றில் அவரால் ஒழுக்கம் என்று புரிந்துகொள்ளப்பட்ட விடயத்தைக் கூறுவார். வேறு சிலர் யாரோ ஒருவருடைய சுய சரிதையை உதாரணம் காட்டி அதில் உள்ளது தான் ஒழுக்கம் என்பார். இன்னும் சிலர் மத நூல்களில் சொல்லப்பட்டவற்றை தான் ஒழுக்கம் என்பார். இவ்வாறாக அவரவர் எதையெல்லாம் ஒழுக்கம் என்று புரிந்துகொண்டார்களோ அதை எல்லாம் ஒழுக்கம் என்பர்.

ஒழுக்கம் பற்றி நாம் இதுவரையில் அறிந்து கொண்ட விடயங்களைப் பற்றி சிறிது அலசிப் பார்ப்போம். ஒழுக்கம் பற்றி வள்ளுவர் கூறியதை கல்லூரிகளிலும், கருத்தரங்குகளிலும், கவிதைப் போட்டிகளிலும், பட்டிமன்றங்களிலும் எத்தனை தடைவைகள் நாம் கேட்டிருப்போம். சில சமயங்களில் நாங்களே பார்வையாளர்களாக அல்லாமல் அவற்றில் பங்காளிகளாகவும் ஈடுபட்டிருப்போம். அனால் நடைமுறை வாழ்க்கையில் என்ன நடந்துகொண்டிருக்கின்றது. வாய் கிழியக் கிழிய பேசிய வள்ளுவரின் வழிகாட்டல் எல்லாம் என்ன ஆயிற்று? ஏன் இந்த மாறுபாடு? தடுமாற்றம் வேண்டாம். விளக்கம் மிகவும் இலகுவானதும் தெளிவானதும் தான். திருக்குறளில் கூறப்பட்டிருக்கும் பெரும்பாலான விடயங்கள் கட்டளைகளாகவும், நிபந்தனைகளாகவும் அமைக்கப்பட்டிருப்பதற்குக் காரணமே, இதுதான் ஒழுக்கம் என்று அறுதியிட்டுக் கூற முடியாது என்பதனால் தான். தெய்வத்தைத் தொழாது கணவனைத் தெய்வமாகத் தொழுபவள் "மழையே! பெய்" என்று சொன்னால் மழை பெய்யும் என்கிறார் வள்ளுவர். இங்கே கணவனைத் தெய்வமாகத் தொழுதால் மழை அவளது சொல்லுக்குச் செவி சாய்க்கும் என்கிறார். அதாவது கணவனைத் தெய்வமாகத் தொழும் ஒரு பெண்ணுக்கு இயற்கையைக் கட்டுப்படுத்தும் அளவுக்கு வலிமை கிடைக்கும் என்கிறார் வள்ளுவர். இதுவும் ஒரு ஒழுக்க விதிதான். ஆனால் இதுவரையில் எந்த ஒரு பெண்ணும் மழையைப் பெய்ய வைத்ததாக நான் அறியவில்லை. ஏனெனில் எந்த ஒரு கணவனும் தன் மனைவியிடம் தெய்வத்தின் தன்மையை (கருணையை) தன் மூலம் வெளிப்படுத்த முடியாமல் இருப்பது தான் காரணம். ஒரு சிலர் தெய்வத்தன்மை உள்ளவர்களாகக் கருதப்பட்டிருந்தாலும் தெய்வத்தன்மையை உணர்ந்தவுடன் மனைவியையும் குழந்தைகளையும் விட்டுவிடு ஓடியவர்களாக இருக்கிறார்கள். எப்படி இவர்களின் மனைவியால் மழையை வருவித்திருக்க முடியும்?

ஒழுக்கத்தில் கூட பாரபட்சம். ஆணுக்கு ஒருவகையான ஒழுக்க விதிகள். பெண்களுக்கு இன்னொரு வகையான ஒழுக்க விதிகள். மதத்திற்கு மதம் வெவ்வேறு ஒழுக்க விதிகள். ஒரு மதம் 'புலால் உண்ணாதே' என்கிறது. இன்னொன்று கொன்றால் பாவம் தின்றால் போகும் என்கிறது. உணவுக்காக உயிரைக் கொல்லுவது தப்பு என்கிறது ஒன்று. உயிருள்ளதை உணவாக்கினால் தான் உயிர் வாழ முடியும் என்கிறது இன்னொன்று. மதங்கள் மட்டும் எம்மைக் குழப்பவில்லை. மரபுகளும் எம்மைக் குழப்புகின்றன. வயதிலோ, கல்வியிலோ, வாழ்க்கை அனுபவத்திலோ முதிர்ச்சி பெற்றவர்களுடன் பேசும் போது முகத்துக்கு முகம் - கண்ணுக்குக் கண் பேசக் கூடாது என்கிறது ஒரு மரபு. முகத்துக்கு முகம்-கண்ணுக்குக் கண் பேசத் தயங்குபவன் களவு செய்பவன் என்கிறது இன்னொரு மரபு. குழப்பமாக இல்லையா வாசகர்களே? குழப்பம் வேண்டாம். முதலில், ஒரு மனிதனின் வாழ்க்கை எப்போதோ, எவராலோ உருவாக்கப்பட்ட விதிகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டதாக அமைய வேண்டுமா என்பது பற்றிப் பார்ப்போம். மனிதனைத் தவிர ஏனைய உயிரினங்கள் அனைத்தும் இயற்கையின் ஒழுங்குகளை உள்வாங்கி வாழ்க்கையை மகிழ்ச்சியாக நகர்த்தும் போது எமக்கு மட்டும் ஏன் விதிமுறைகளும் கட்டுப்பாடுகளும்? இந்த விதிமுறைகளும் கட்டுப்பாடுகளும் ஒட்டுமொத்த மனித குலத்துக்கும் ஏற்புடையதாக அமைக்கப்பட முடியாமைக்குக் காரணம் என்ன? ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு மரபும் மனித இனத்தைக் கூறு போட்டதைத் தவிர வேறு எதைச் சாதித்திருக்கிறது? அது மட்டுமல்ல. இந்த மதங்களாலும், மரபுகளாலும் நாம் மந்தைகளாகப் போனது ஏன்? எப்படி நாம் மந்தைகளாக்கப்பட்டு விட்டோம் என்பதை ஒரு காட்சியாகப் பார்ப்போம்.



இந்தக் காட்சியின் பாத்திரங்கள், ஒரு இடையன், ஒரு கைத்தடி, மந்தைக்கூட்டம். இங்கே கால மாற்றத்துக்கு இடமளிக்காத மதக் கோட்பாடுகளையும், மரபுகளையும் சுமந்து திரிபவன் தான் இடையன். மதமும் மரபும் உருவாக்கியுள்ள ஒழுக்க விதிகள் தான் கைத்தடி. இடையனின் வழிகாட்டலை ஆய்வுக்கு இடமின்றி ஏற்றுக்கொள்ளும் கூட்டம் தான் மந்தைக்கூட்டம். இடையனின் தொழில் தனது தேவைக்கு ஏற்ப மந்தைகளை மேய்ப்பதும் பின்னர் பண்ணைக்கு அழைத்துச் செல்வதும் தான். ஏற்கெனவே இந்தச் சுழற்சிக்குப் பழக்கப்பட்டுள்ள மந்தைகளை மேய்ப்பது இடையனுக்கு மிகவும் சுலபம். தற்செயலாக, அந்த மந்தைக் கூட்டத்தில் இருக்கும் ஒன்று ஏதோ ஒரு விழிப்புணர்வால் இடையனுடைய செயற்பாட்டில் மாற்றம் வேண்டும் என்று கேட்டாலோ அல்லது ஒரு புதிய பாதையைத் தெரிவு செய்யவேண்டும் என்ற நோக்கில் அந்தக் கூட்டத்தில் இருந்து வேறுபட முயற்சித்தாலோ இடையனால் அதைத் தாங்க முடியாது. தன்னிடமுள்ள கைத்தடியால் அந்த ஒற்றைக்கு ஒரு அடி. அத்துடன் இடையனின் சுழற்சிக்குப் பழகிப் போய் அதுதான் உலகம் என்று தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் அந்த மந்தைக் கூட்டத்தில் இருக்கும் ஏனையவைகூட ஆத்திரமடைந்து "இன்னுமொரு அடி போடுங்கள்! இன்னுமொரு அடிபோடுங்கள்!!" என்று இடையனை உற்சாகப்படுத்தும், பாவம், அந்த ஒற்றைதான் என்ன செய்யும்?

மந்தையால் முடியாது வாசகர்களே! ஆனால் மனிதனால் முடியும்! எப்படி முடியும் என்று கேட்கிறீர்களா? ஒழுக்க விதி என்று சொல்லப்படுகின்ற ஒன்று, ஒரு இனத்தையோ, மதத்தையோ, கலாச்சாரத்தையோ அல்லது ஒரு மரபையோ ஏனையவற்றை விட உயர்ந்தது என்று பறை சாற்றுகிறதோ அதைக் குழி தோண்டிப் புதைத்து விடுங்கள். வேண்டாம்! வேண்டாம்!! குழிதோண்டிப் புதைத்துவிட்டால் பிறிதொரு காலத்தில் புதைபொருள் ஆராய்ச்சிக்குள் அகப்பட்டு மீண்டும் மனிதர்களை மந்தைக் கூட்டங்களாக்கிவிடும். எனவே எரித்துவிடுங்கள். மதங்களும், மரபுகளும், கலாச்சாரங்களும் மனிதன் மனிதனாக வாழவேண்டும் என்பதற்காகத் தரப்பட்டவையே அன்றி மனிதனை மந்தைகளாக்குவதற்கு அல்ல. உண்மையில் ஒரு மனிதன் ஒழுக்கமாக வாழ்வதற்கு மதமும் தேவையில்லை, மரபும் தேவையில்லை. விதிமுறைகளும் தேவையில்லை, கட்டுபாடுகளும் தேவையில்லை. உணர்வுள்ள மனிதனாக இருந்தால் போதும். ஏனெனில் ஒழுக்கம் என்பது உணர்வுள்ள மனிதன் வாழுகின்ற முறை. அதாவது உணர்வுள்ள மனிதனின் வாழ்க்கைப் பாணி தான் ஒழுக்கமே அன்றி வேறு எதுவுமேயில்லை.

KG Master-kgmaster@rogers.com

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகை யிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமான வரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- நன்றியுடன் KG Master

அமைதியின் குரல் - Words of Peace

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி

1-877-707-3221 / தமிழில் - 416.431.5000

- MAHARAJI -

மஹாராஜியின் உரைகள்



On DVD: இலவச DVDக்கு அழையுங்கள் (416) 431-5000 1 877 707 3221

On TV: Saturdays at 11:00 am
Rogers Cable Channel - 20
Bell Express vu Channel - 219

# மனதுக்கு வயதில்லை!

சந்திர முகத்தில் அழகாக மின்னும் அந்தச் செங்கீறல் ...
என்னைக் கண்டால் களிப்பால் நெளியும் ...
நெருங்கினால் நாணத்தால் குழையும் ...
ஏதாவது கேட்டால் ஒன்றை ஒன்று கவ்வும் ...
சிரிப்புக் காட்டினால் சற்றே விரியும் ...
அதிலே முத்து வரிசை மெதுவாய்த் தெரியும் ...

ஒவ்வொரு அசைவும் ஒவ்வொரு நாடகம் ...

நாடகம் நிசமானபோது கவ்விக் கவ்வச் சுவைத்தபொழுதெல்லாம் அவை சொர்க்கத்தைத் தந்தன!

அந்தக் கொவ்வை இதழ்கள் ...
சொந்த அமுதச் சிமிழ்கள் ...
இப்படிக் குறுகிக் கறுத்து மாங்காய்
வத்தலாகுமெண்டு நான் கனவிலும் நினைக்கேல்லை!

சிரிப்பிலைதான் முதலில் மயங்கினன் ...
இப்பெல்லாம் இவள் சிரியாமல் இருந்தால் சந்தோசம் என்னும் அளவுக்கு வந்தவிட்டது ...

வெள்ளைப் பல் வரிசையில் காவி ஏன் வந்ததெண்டு தெரியாது ...
ஆனால் ஒறுவாய்கள் விழுந்தது தெரியும் ...
பல்லைக் கட்டன் எண்டால் இன்னும் இரண்டொண்டு விழட்டும் எண்டு சொல்லிக் கொண்டிருக்குது ...

கொழுத்துப் பழுத்துக் குளுகுளுத்த தக்காளிக் கன்னங்களைச் சிவக்கச் சிவக்கக் கொஞ்சிக் குலவிய நாட்கள் ...
நேற்றுப்போல கிடக்கு!
அதற்குள்ளாகப் பேரப் பிள்ளைகள் கீறி விளையாடும் கடதாசியாய்க் கிழிஞ்சுபோய்க் கிடக்கு ...
நான்தான் பழுதாக்கிப் போட்டன்போல ...

சிரிச்சாள் எண்டால் இரண்டு கன்னங்களிலும் சின்னக் கவர்ச்சிக் குழிகள் விழும் ...
நான் சிலிர்த்துப்போய் நிற்பன் ...
அந்த அற்புதக் குழிகள் கிள்ளிக்கூட விளையாட முடியாத அளவுக்கு இப்ப பாத்திப் படுத்திய பள்ளங்களாய்ப் போச்சு ...

சீராகவும் நேராகவும் நமிர்ந்து நிற்கும் மூக்குமட்டும் மிஞ்சிக் கிடக்கு ...
எண்டாலும் அதிலும் ஏதோ சின்னச் சின்ன உண்ணிகள் மாதிரி கறுத்தப் புள்ளிகள் ...
பார்க்க முடியேல்ல ...

கண்களைப்பற்றிச் சொல்லத் தேவையில்லை ...
வெட்டி வைத்த தேங்காய்ப் பாதியளவு பெரிய வட்டக் கண்கள் ...
அந்த மாதிரி வடிவான கண்கள் எனக்குத் தெரிஞ்ச பெண்டுகள் எவருக்கும் இல்லை ...
உருண்டு மருண்டு அடிக்கடி என்னை வெட்டி வீழ்த்திய காந்தக் கண்கள் ...
நிமிர்ந்து பார்த்தாள் எண்டால் ...
அப்பாடா ... ! என்ரை கண்கள் கூசும்!
அப்படிப் பார்க்காதே! அப்படிப் பார்க்காதே எண்டு துரத்தித் துரத்தி இவளைக் காதலிச்சதை நினைக்க நினைக்க ...

வாலிப காலம் மீண்டும் வந்தால் நல்லது போலக் கிடக்கு ...

இந்தப் பெரிய கண்கள் இப்ப கண்ணாடியைக் கழட்டினால் என்னையே தெரியாத அளவுக்குக் குருடாகிக் கொண்டு ...

உம் ...

மார்கழிக் காலத்து மழை முகிலைப் போலத் திரண்டு குவிந்து நீண்டு நெளிந்து ...
நடக்க நடக்க ...
அசைந்து ஆடி முழங்காலின் பின்பக்கத்தில் தாளம் தட்டும் கூந்தல் ...

இப்ப பஞ்சுபத்தி வெள்ளாட்டு வாலைக் குஞ்சு பொரிச்சிருக்கு ...
நடந்தாள் எண்டால் ...



இஞ்சாருங்கோ! இஞ்சாருங்கோ! எழும்புங்கோ!

எவ்வளவு நேராமாய் உந்தச் சார்மனைக் கட்டிலுக்கை சுருண்டு கிடக்கிறியள்? உப்பிடி இந்த வயதான காலத்திலை நெடுக ஒரு இடத்திலை இருக்காதையுங்கோ எண்டு எத்தனை நாள் சொல்லியிருக்கிறன்!

அண்டைக்கு டாக்குத்தருமல்லே சொன்னவர்! இரத்த ஓட்டத்துக்கு இடைக்கிடை எழும்பி நடக்க வேணும் அப்பா!

எழும்புங்கோ எண்டல்லே சொல்லுறன்!

அவற்றை மூஞ்சையும் முகரக் கட்டையும் ... எழும்பிச் சவரத்தை எடுங்கோ!
முகத்தைக் கழுவிச் சட்டையையும் மாத்திக் கொஞ்சம் கோலம் குறியாய் நில்லுங்கோ!

மகளும் மருமோனும் பிள்ளையளும் வருகினமாம்!
கேக்குதே? மருமோன், மருமோன் வருகிறாராம்!



**கவிஞர் வி. கந்தவனம்**

# படாத...

12ஆம் பக்கத்தொடர்ச்சி

இலங்கைக்கான தூதுவரின் ஊடாக தம்மீது அழுத்தமாகக் கொண்டு வந்த இந்த இரகசிய சந்திப்பைப் புறந்தள்ளிவிடாமல் இராஜதந்திர முறையில் கையாண்டிருப்பதாகவே தெரிகின்றது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு கோரியிருப்பது போன்று எழுத்து மூலமான உத்தரவாதத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வழங்கினாலும், இந்தியாவுடன் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜயவர்தன செய்து கொண்ட ஒப்பந்தத்தின் மூலம் நாட்டின் அரச-ியலமைப்பில் செய்யப்பட்ட பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தையே ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனா, அவருக்குப் பின்னர் மாறி மாறி வந்த ஜனாதிபதிகள் மற்றும் ஐக்கிய தேசிய கட்சி உட்பட்ட பெரும்பான்மை கட்சிகள் இரண்டையும் சேர்ந்த அரசியல் தலைவர்கள் தூக்கி கிடப்பில் போட்டுவிட்டார்கள். அதை அவர்கள் கண்டுகெள்ளவே இல்லை. இந்த நிலைமைதான் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கிறேன் என உறுதியளித்து கையெழுத்திடுவார் என எதிர்பார்க்கப்படுகின்ற ஆவணத்திற்கும் நேரிடாது என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் கிடையாது. ஏனெனில் சிங்கள அரசியல் தலைவர்களின் போக்கு என்பது தில்லுமுல்லுகள் நிறைந்தது. சொன்னதைச் செய்ய மாட்டார்கள். உறுதி மொழிகளைக் காற்றில் பறக்கவிடுவதில் வல்லவர்கள் என்பது அடுத்தடுத்த பல நிகழ்வுகளின் மூலமாக வரலாற்றில் உத்தரவாதப்படுத்தப்பட்டிருக்கின்றது.

எனினும் இதையும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மிகவும் அவதானமாகத் தனது கவனத்திற் கொண்டிருப்பதாகவே தெரிகின்றது. இந்த இரகசிய சந்திப்பின் ஊடாக எழுந்துள்ள நிலைமைகளை இந்திய அரசாங்கத்தின் உயர் மட்டத்தில் இருப்பவர்களின் ஊடாக உத்தரவாதப் படுத்திக் கொள்வதற்கான ஒரு நகர்வையும் அது மேற்கொண்டிருக்கின்றது. இந்த நோக்கத்தின் அடிப்படையிலேயே இந்த மாத இறுதியில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் புதுடில்லிக்குப் பயணமாக இருக்கின்றார்கள். இந்த விஜயத்தின்போது இந்த விடயம் தொடர்பாக இந்திய அரசாங்கத்தின் உயர்மட்டத்தினருடன் பேசி அவர்களையும் உள்ளீர்ப்பதற்கான காய்நகர்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

எனவே, தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கான அடுத்த கட்ட நடவடிக்கையானது, தமிழ்த்தேசிய கூட்டமைப்பு, ஜநாவின் மனித உரிமைப் பேரவை கூட்டத்திற்காக எடுக்கப் போகின்ற நிலைப்பாட்டிலேயே தங்கியிருக்கின்றது. இலங்கையை ஆதரிக்குமா அல்லது அமெரிக்காவின் பின்னால் சர்வதேசத்தை ஆதரிக்குமா என்பதிலேயே அரசியல் தீர்வின் முன்னேற்றமும் முடக்கமும் அடங்கியிருக்கின்றது.

தமிழ் மக்களும், புலம்பெயர்ந்துள்ள தமிழர்களும் நம்பிக்கை வைத்துள்ள தமிழ்த்தேசிய கூட்டமைப்பு இந்த விடயத்தில் இராஜதந்திரத்துடன் கூடிய சரியான முடிவையே மேற்கொள்ளும் என்ற நம்பிக்கை பரவலாக இருக்கின்றது. இருப்பினும் என்ன நடக்கப் போகின்றது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

# வெகுளாமை (Calm) - 8

'சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும்: ஏமப் புணையைச் சுடும்' (குறள் 306, அதிகாரம் 31 வெகுளாமை) என்ற திருவள்ளுவரின் திருக்குறளுடன் இன்றைய உரையாடலை ஆரம்பிப்போம். 'சினங்கொண்டவரை அழிக்கக் கூடியதாகச் சினமென்னும் தீயே இருப்பதால், அது அவரை மட்டுமன்றி, அவரைப் பாதுகாக்கும் தோணி போன்ற சுற்றத்தையும் அழித்துவிடும்' என்பது இதற்கான பொருளாகும். சினத்தினால் தீங்கு ஏற்படாது இருப்பதற்கும், சினத்தினை நெறிப்படுத்தும் நோக்கிலும் வெகுளாமை என்ற தலைப்பில் நாங்கள் இந்தத் தொடர்கட்டுரையில் உரையாடி வருகின்றோம். கோபத்தினால் ஏற்படும் பாதிப்புக்களை நாம் நாளாந்தம் முகம் கொடுத்து வருவதினால், இந்த விடயம் பற்றி நாங்கள் முழுமையாக ஆராய்ந்து கொள்வதன் முக்கியத்துவம், எனது இந்த முயற்சிக்கான அடிப்படைக் காரணமாக உள்ளது.

கடந்த இதழில் கோபத்தினைத் தவிர்த்துக் கொள்ளுதல் அல்லது நெறிப்படுத்துதல் செய்வதற்கு, மனத்தில் ஏற்படும் வலி, பயம், சுய பெறுமதியின்மை என்பவற்றை நீக்கிக் கொள்வது அவசியமானவை என்று அறிந்து கொண்டோம். நாங்கள் இந்தப் பிரபஞ்சத்தில் ஒருவராக பிறக்கும் பொழுது இயற்கையாகவே சுயபெறுமதி (self-worth) கொண்டவர்களாகப் பிறக்கின்றோம். இந்தச் சுயபெறுமதி நாளடைவில் மறைக்கப்படுகின்றது. இதனைச் சீராக வைத்திருப்பதில் ஆன்மீகப் பயிற்சி முக்கிய பங்கை வகிக்கின்றது. சுயபெறுமதி என்பது ஒரு ஆழமான உள்ளுணர்வு ஆகும். ஒருவரின் சுயபெறுமதி சீராக இருப்பது வெகுளாமைத் திறமை இருப்பதற்கு மிகவும் முக்கியமானதொன்று. பல சந்தர்ப்பங்களில் சுயகௌரவம் (self-esteem), சுயபெறுமதி (Self Esteem) இரண்டுமே ஒன்றெனக் கருதிக் கொள்வதுண்டு. ஆனால் இவை இரண்டும் வேறுபட்டவை என உளவியல் துறை சார்ந்த அறிஞர்கள் தெளிவாகக் கூறியுள்ளனர். சுயகௌரவம் என்பது தற்காலிகமானது. நேரத்திற்கு நேரம் மாறுபட்டுக் கொண்டேயிருக்கும். ஒரு குறிக்கப்பட்ட நேரத்தில் எங்களைப்பற்றி நாம் என்ன நினைக்கின்றோம் என்பதுதான் சுயகௌரவம். மனஅழுத்தங்கள் பற்றிய பட்டறைகளை



கடந்த இருபது வருடங்களாக நடத்தி வருகின்ற ஒருவரின் கருத்துப்படி '99 வீதமானவர்கள் தங்கள் சுயகௌரவத்தை அதிகரிக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர்' என அறியப்படுகின்றது. உண்மையில் சுயகௌரவம், சுயபெறுமதி இரண்டுமே வெகுளாமை என்ற திறமைக்கு வேண்டியவையாக உள்ளன. சுயபெறுமதியை அதிகரிப்பது, சுயகௌரவத்தை அதிகரிப்பதை விடக் கடுமையானது என்பதும் பொதுவான கருத்து. மன அழுத்தம், கோபம் போன்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அளிக்கப்படும் பயிற்சிகளின் மூலம் சுயகௌரவம் அதிகரிக்கின்றது. ஆனால் சுயபெறுமதியினையும் சீராக்க வேண்டியது அவசியம் என்பதை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இதற்குகந்த வழிமுறை ஆன்மீகப் பயிற்சிதான். மேலும் எங்களை நாங்கள் நேசித்தல், கண்ணாடிக்கு முன்னால் நின்று எங்களை நாங்கள் விரும்புவதாகக் கூறிக் கொள்ளும் பயிற்சி, தொண்டர் முறையில் சேவை களைச் செய்தல், தொடங்கும் பணியைச் செய்து நிறைவேற்றிக் கொள்ளுதல் போன்ற செயற்பாடு களும் சுயபெறுமதியை அதிகரிக்கச் செய்கின்றன. வேன் டயர் என்பவரின் ஆங்கில முதுமொழி: 'நீங்கள் பெறுமதியானவர் என நினைத்துக் கொள்வதில்தான் சுயபெறுமதி கிடைக்கின்றது (Self Worth come from one thing- thinking you are worthy)'. ஒவ்வொரு மாதமும் ஒரு குறிக்கப்பட்ட பணியைத் திட்டமிட்டுச் செய்து நிறைவேற்றிக் கொள்ளும் பொழுது சுயபெறுமதி



- அகணி -
authorakani@yahoo.com

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

Train to be a ...
**Community Service Worker** With CO-OP



citi COLLEGE

Other Diploma Programs:
Computerized Accounting
THE CANADIAN PAYROLL ASSOCIATION CPA ACP L'ASSOCIATION CANADIENNE DE LA PAIE
Network Engineering
Microsoft | IT Academy Program
Business Administration
Medical Office Assistant

EI, WSIB, ODSP Clients and New Immigrants welcome

Customized Corporate Training available for:
MS-Office 2003, 2007, 2010
Upgrade MS-Office 2003 to 2007 or 2010
Microsoft server 2003 and 2008 Subjects
A+ Certification / Cisco CCNA

OACC PROUD MEMBER ontario association of career colleges

You may qualify for
SECOND CAREER
If you are laid off after January 2005
Working less than 20 hours / week
Call us now for details
(416) 840-9179

Call Now: (416) 840-9179
Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005

www.CitiCollege.ca
Financial Assistance may be available to those who qualify

# தொழில்நுட்பம் - வருங்கால தொலைநோக்கு

## இன்றில் இருந்து 2500 வருடம் வரை என்ன நடக்கும்?

## ஒரு அறிவுபூர்வமான தொழில்நுட்ப அலசல்:

**பகுதி 04**

**இது ஆங்கில மூலத்தின் சுருங்கிய தமிழ் வடிவம்**



**- ஆக்கம்: செல்லத்துரை சந்திரகாசன் -**
*santhira_gasan@Yahoo.com.au*

**கடந்த இதழ் தொடர்ச்சி...**

### 4. மனித அறிவாண்மை:

உண்மைகள் சில:
மனிதன் குரங்கிலிருந்து தோன்றி, பலவிதமான பரிணாம வளர்ச்சியினூடாகச் சிறந்த உணவு, குடும்பம், உறைவிடம் முதலியவற்றின் தேடுதலோடு, மேலும் மேலும் சிறந்த வாழ்க்கைத் தரத்தைக் கூட்டும் பல அரிய புதிய சாதனங்களைக் கண்டு பிடித்துக் கொண்டே இருக்கிறான். இத்தீவிர தேடுதல் முயற்சியினால், நினைத்தே நாம் பார்க்க முடியாத அளவில் மாபெரும் அறிவு வளர்ச்சியினை எதிர்கால மனிதன் பெறுவான்.

### புலன்கள் பெருகும்: 6 வது, 7 வது, 8 வது புலன்கள்:

தற்சமயம் மனிதன் 5 அறிவை மட்டும்தான் கொண்டிருக்கிறான். இல்லை, இல்லை 6 ஆம் அறிவாகிய பகுத்தறிவு இருக்கிறதே என்று கூறுவது தெரிகிறது. பகுத்தறிவினால் மனிதன் உயர்ந்து இருக்கிறான் என்று சந்தோசப்படுவோருக்கு ஒரு சிறு தகவல். அநேகமான மிருகங்கள், பறவைகள், பூச்சிகள் எங்களிலும் பார்க்க சிறந்த சக்திகள் கொண்டவையாக இருக்கின்றன. இவை, கூரிய தொலைப்பார்வை, சிறிய, பெரிய சத்தங்களைத் துல்லியமாகக் கேட்கும் காதுகள், எந்தச் சிறு மணங்களையும் நுகர்ந்தறியும் திறன், இரவிலும் பார்க்கும் கண்கள், சிறு அலைகளையும் உணரும் உணர்விகள், பறக்கும் ஆற்றல், வியக்க வைக்கும் கலைத்திறன் என்பனவற்றைக் கொண்டன. இவைக்கு முன்னால், அவற்றின் பார்வையில் நாங்கள் ஒரு ஜடங்கள், குருடர்கள், செவிடர்கள், வாசனை தெரியாதவர்கள், நொண்டிகள், அத்தோடு முழு அறிவிலிகள். இவ்வுலகில் எவ்வளவோ விடயங்கள் இருந்தும் அவை எல்லாம் மனிதனால் உணரப்படாமல் இருக்கின்றன. ஏன்? மனிதனுக்கு ஒரு சத்தமே கேட்கவில்லை என்பதற்காக பூமி என்ன படு நிசப்தமாகவா விரைந்துகொண்டு இருக்கிறது? கோடியில் ஒருவருக்கு இந்த விலங்கினத்தின் ஆற்றல்களில் ஒன்று மட்டுமே கிடைத்து விட்டால், அதை வைத்து அவர் ஒரு கடவுளாகவே மக்களுக்கு அதிசயங்களைக் காட்ட விழைந்து விடுவார். ஆனாலும், வருங்கால மனிதன் படிப்படியாக, இத்தகைய ஆற்றல்களைப் பெறுவான்.

6 வது அறிவாகிய, தற்போது telepathy என்று சொல்லப்படும் உளம் அறிதல் சக்தியானது, ஒருவர் மற்றவரின் சிந்தனை அலைகளை உணர்ந்து, அவர் மனத்தில் உண்மையில் என்ன எண்ணுகின்றார் என்பதைக் கண்டுபிடித்துவிடுவார். இருவர் சந்தித்தால் பேசவேண்டும் என்றில்லை. சிந்தனாசக்தி அலைகளின் அதிர்வினை வைத்தே ஒருவருக்கொருவர் உணர்ந்து கொள்வர். இதே சக்திதான், பொருட்களின் சக்தியலைகளை வைத்து அந்தப் பொருட்களையும் உருவாக்குவதற்குப் பிரயோகிக்கப்படும்.

7 வது புலனாக முன்னொலி அறிதல் திறமையைப் பெறுவான். இப்புலனை அடைவதால், சமீப காலங்களின் முன்னர், பெரியோர்கள் மற்றும் சாதாரண மக்கள் பேசிய பேச்சுகளின் அலைவடிவுகளைச் சுற்றாடலில் இருந்து பகுத்தறிந்து, அப்பேச்சினையே, அப்படிப் பேசியவாறே, சீரோடு திரும்பப் பெற்று, சாதாரணமாகக் கேட்கச் செய்வான்.

8 வது அறிவாகிய dara எனப்படும் ஓரிடத்தில் மறைந்து வேறிடத்தில் தோன்றும் அபார திறனைப் பெற்று விடுவான். இதற்கு, முன்னர் குறிப்பிட்ட சக்தி சொட்டு தத்துவமே மூல காரணியாக இருக்கும்.

### இயந்திர மனிதர்களும், மனித இயந்திரங்களும் :

மனிதன் தன்னுருவில், நற்குணம் கொண்ட, ஆனால் உலகின் சகல அறிவு நுட்பங்களும் கூடிய இயந்திர மனிதர்களை உருவாக்கி, இதுவரை காலமும் தான் செய்து வந்த, செய்ய முடியாத, செய்ய அஞ்சிய செயல்களை எல்லாம் இந்த இயந்திர மனிதர்களிடம் விட்டு விடுவான். இவர்கள் படுபயங்கர வேக வேலைக்காரர் மட்டுமல்ல, பிழையே விடாத, ஓய்வே தேவையற்ற, கீழ்ப்படிவான ஊழியர்கள். உபகரணங்கள் ஏதாவது திருத்த வேண்டிவரின், தங்களுக்குள்ளேயே கருத்துப் பரிமாறிச் சில வினாடிகளிலேயே சரிபார்த்து விடுவார்கள். கடைசியில், உலகில் தொழிலாளர், விவசாயிகள், ஓட்டுனர்கள், பொறியியலாளர் கள், வைத்தியர்கள், தாதிகள், சுத்திகரிப்பாளர்கள், அரசாங்கங்கள், கச்சேரிகள், தொழிலகங்கள், கடைகள் எல்லாமே இவர்கள்தான். அதே நேரம், மனிதனோ, தனது தலையில் பொருத்தப்பட்ட நுண் சிம்புவின் கட்டளைகளுக்கு அமைய ஒரு இயந்திரம்போல அங்கும் இங்கும் உலாவி வருவான்.

### மரபுவழிப் பொறியியல் - விரும்பிய வடிவில் பிள்ளைகள்:

மரபு அணுக்களை மாற்றியமைப்பதன் மூலம், மூளையின் குறிப்பிட்ட கலங்களைத் திருத்தியமைத்து, செப்ரோ நுண் சிம்பு பதிக்கப்பட்டு, மனிதனின் தோற்றம் மாற்றியமைக்கப்படுவதோடு, நோயற்ற வாழ்வும், ஆயுள் நீடிப்பும் கிட்டும். அத்தோடு தேவையான நற்குணங்களை மட்டும் கிரகிக்கக் கூடியதாக மூளை திருத்தி அமைக்கப்படும். தேவையான உருவம், நிறம், குணம், உயரம் கொண்ட குழந்தைகள் உருவாக்கப்படும். விரும்பினால், என்னைப்போலவும் ஒரு மனிதனை உருவாக்க முடியும். வர்த்தகப் பெயர்கள் கொண்ட தனித்துவமாக வடிவமைக்கப்பட்ட குழந்தைகள் விற்பனைக்கு இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

### இறந்தோர் உயிர்த்து எழுவர்:

முன்னர் பாதுகாத்து வைக்கப்பட்ட பூதவுடல் உயிர்த்தெழும் நுட்பம் மிகப்பிந்திய காலங்களில் ஆராயப்படும். (தொடரும்)



# வெகுளாமை...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

அதிகரிக்கின்றது. எங்களைப் பற்றி நாமே எதிர் மறையாகக் கருதி நாங்களே எங்களுக்கு எதிரியாகி விடுவதுண்டு. இந்தப் பழக்கத்தை நாங்கள் முற்றாகக் கைவிடவேண்டும். இதனால் சுயபெறுமதி அதிகரிக்கும். சுயபெறுமதி அதிகரிக்கப்பட்டு மனதில் உள்ள மன வலி, பயம் என்பனவும் நீங்கி விட்டால் கோபம் ஏற்படுத்தும் பாதிப்பில் தொண்ணூறு வீதத்தை நீக்கி விட்டோம் என அர்த்தப்படும். நாங்கள்





வெகுளாமை கொண்டவர்களாக மாறி விடுவோம். சுயபெறுமதி என்பது எங்கள் உள்ளுணர்வில் ஆழமாக வீற்றிருந்து எங்களின் வெற்றி, தோல்வி களில் பாதிப்புக்களை ஏற்படுத்து கின்றது. எங்கள் சுயபெறுமதி குறையும் பொழுது சிந்திப்பதற்கு சக்தி அற்றவர்கள் போல் முயற்சியின்றி இருப்போம். சுயகௌரவம் குறைவடை வதனால் மன அழுத்தம் ஏற்பட வாய்ப்புள்ளதாக ஆய்வுகள் தெரிவிக் கின்றன. சுயகௌரவம், சுயபெறுமதி இரண்டும் ஒருவர் தன்னைப் பற்றி நேர் மறையாக அல்லது எதிர் மறையாக நினைப்பதற்கு காரணமாகின்றன என ஆய்வுகள் தெரிவிக்கின்றன (Science Daily Mar. 1, 2011). சுயகௌரவம் பற்றிய உளவியல் ரீதியாக அறியப்பட்ட தற்கும், ஆய்வு முடிவுகளுக்கும் இடையில் பல வேறுபாடுகள் உள்ளதாகவும் இந்த ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்பொழுது எவ்வாறான வழிமுறை களால் எங்களின் சுயகௌரவத்தை அதிகரிக்கலாம் என்று கவனிப்போம். நாங்கள் ஒருவரைச் சந்திக்கும் பொழுது புன்முறுவலுடன் அவரின் கண்ணை உற்று நோக்கியபடி பேச வேண்டும். புன்முறுவலும் (Smile), நேரடியான கண் தொடர்பும் (Eye contact) சுய கௌரவத்தை அதிகரிக்கச் செய்யும். நாங்கள் அணியும் உடைகளும் முக்கியமாகின்றது. எங்களுக்கு ஒருவர் பரிசுப்பொருட்கள், அல்லது பாராட்டு வழங்கும்பொழுது பதிலுக்கு நாங்கள் நன்றி கூறி உரிய முறையில் பதிலளித்துக் கொள்ளுதலும் எங்கள் சுயகௌரவத்தை அதிகரிக்கச் செய்யும். மற்றவர்களைக் குறை கூறுவதையும், எங்களை அதிகம் முன்னிலைப் படுத்தி பேசிக் கொள்வதையும் தவிர்க்க வேண்டும். மனதைப் பாதிக்கும் அல்லது கடுமையான சூழ்நிலைகளில் மனதைத் திடப்படுத்தி எங்கள் முயற்சியைக் கூட்ட வேண்டும். தோல்விகளை வெற்றியின் படிகளாக எடுத்துச் செயற்பட வேண்டும். எங்களில் உள்ள எதிர்மறையான விடயங்களை அறிந்து அவற்றை அகற்றிக் கொள்ளல் வேண்டும். எங்களால் நிறைவேற்றக் கூடிய விடயங்களைத் திட்டமிட்டு அவற்றை மன உறுதியுடன் நிறைவேற்ற வேண்டும். எங்கள் செயலுக்கான முழுப்பொறுப்பையும் நாங்கள் ஏற்றுச் செயற்பட வேண்டும். படைப்புத்தன்மை சார்ந்த (creative) விடயங்களில் ஈடுபடுதல் வேண்டும். மன்னித்துக் கொள்ளும் பழக்கத்துடன் பொ-றாமை, பழிக்குப் பழி செய்தல் போன்ற தீய குணங்களைத் தவிர்த்தல். எங்களில் நாங்கள் கவனம் எடுத்தலும் அவசியம். மேலும் உடற்பயிற்சி, பொழுது போக்குகள், ஆரோக்கியமான உணவு, தியானம், யோகா போன்ற செயற்பாடு கள், ஆன்மீக ஈடுபாடு, போதிய நித்திரை போன்றவையும் சுயகௌரவம் அதிகரிக்க வழி செய்யும். வெகுளாமை கொண்டு வாழ்வதற்கு மனத்தில் ஏற்படும் வலி, பயம் போன்றவற்றை முறியடிப்போம். இயற்கைச் சொத்தான சுய பெறுமதியைப் பேணிப் பாதுகாத்துக் கொள்வோம். அத்தோடு சுயகௌரவம் அதிகரிக்கச் செய்வதற்கு வேண்டிய வழிமுறைகளை அறிந்து நடைமுறைப்படுத்துவோம். சொல்வது சுலபம். செய்வதே கடினம். அறிந்து கொள்ளும் விடயங்களை செயற்படுத்து வதனால் மட்டுமே வெற்றி கொள்ள முடியும் என்பதையும் கவனத்தில் கொள்வோம் என்று கூறி விடைபெறு கின்றேன். அன்பான வாசகர்களே! உங்கள் எண்ணங்களை எழுதி அனுப்புங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். தொடரும்.



YOGA - MEDITATION CLASSESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



**GTA Square Mall** இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: ***Scarborough - Markham -*** செல்வ சோதி - ***416.289.2033***



TBC Toronto Business College

PSW

PERSONAL SUPPORT WORKER

உடனடி வேலை வாய்ப்பையும் உயர்ந்த ஊதியத்தையும் வாழும் சமூகத்திற்கு சிறந்த சேவையையும் ஆற்றக் கூடிய இலகுவான கற்கை நெறி

Certified by the National Association of Career Colleges.
Certificate recognized by Hospitals, Nursing Homes, Etc.
100% Co-op Placement
26 Weeks Program



CLASSES STARTING SOON

SECOND CAREER

- EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
- 4 வருடங்களுக்குள் EI பெற்றவர்கள்
- 5 வருடங்களுக்குள் Maternity Benefits பெற்றவர்கள்

அரசாங்க நிதி உதவியில் இலவசமாகக் கற்று உங்கள் எதிர் காலம் மிளிர்வதைக் காண்பீர்கள்.
Tuition Fees, Books, Living Expenses, Daycare, & Transportation up to $28,000 Free Funding.

ODSP, WSIB Recepients & New Immigrants Welcome

COMPUTERIZED ACCOUNTING DIPLOMA
26 WEEKS



JOB OPPORTUNITIES
- Accounts Clerk
- Accounts Receivable
- Accounts Payable
- Bookkeeper
- Payroll Clerk

MEDICAL OFFICE ADMINISTRATOR DIPLOMA
32 WEEKS



- Computer Skills
- Office Systems
- Medical Terminology
- Medical Billing
- MO Adminstrative Procedure
- Co-op Available

Come Visit our Facility and Sit in One of Our Classes. Call Now to Make an Appointment!

Ample Free Parking
Small Class Size

4465 Sheppard Avenue East, Suite 208
Toronto (Sheppard & Brimley)
info@tbcollege.com www.tbcollege.com

416-291-5155

Registered as a Private Career College under the the Private Career College Act 2005

# எத்தனை கட்டுமரங்களும் மீன் பிடிக்கலாம் என்றால்தான் அது கடல்

## நேர்காணல்: கவிஞர் வைரமுத்து


சென்ற இதழ் தொடர்ச்சி...

உங்கள் இளமைக்காலப் பாடல்களுக்கும் இப்போதைய பாடல்களுக்குமிடையே வெளிப் பாட்டு முறையில், உணர்ச்சி வேகத்தில் வித்தியாசங்களைப் பார்க்கிறீர்களா?

“இளமைக் காலம் என்று நீங்கள் வரையறுப்பது எதை என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை! என் மனசிலும் உடம்பிலும் செயலிலும், தமிழிலும் உள்ள இளமையின் அளவு ஒரு சதவீதம்கூடக் குறையவில்லை. நான் முன்னைக்காட்டிலும் இப்போது இன்னும் வேகமாக இயங்கிக் கொண்டிருக்கிறேன் என்பதுதான் உண்மை. எனக்குள்ள இந்த வீச்சுகளை வாங்கி வைத்துக்கொள்கிற அளவுக்கு சினிமா அன்றைக்கு இருக்கிறதா என்பதுதான் கேள்வி. அன்றைக்கு ஒரு பக்கம் இலக்கியப் பாடல்கள், இன்னொரு பக்கம் சமூக மேம்பாட்டுப் பாடல்கள் என ஆரோக்கியமான தளம் இருந்தது. இன்றைக்கு, பாடல் என்பது படத்துக்குள் கதையை நகர்த்துகிற கருவி என்று இல்லாமல் நேரத்தை நகர்த்துகிற கருவி ஆகிவிட்டது. அது தாளக்கட்டுக்குள் இருக்க வேண்டிய விசயம் என்று ஆகிவிட்டது. பாட்டு என்பது செவிக்கான ஒரு நுண்கலை என்பது மாறி ஆட்டத்துக்கான தனிக்கலை என்று ஆகிவிட்டது. இப்போதெல்லாம் இயக்குநர்களும் இசையமைப்பாளர்களும் ஆட்டத்துக்கான பாடல்களை உற்பத்தி செய்கிற இடத்துக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள். இதனால் பாடலாசிரியர் வர்க்கம் தவித்துப் போயிருக்கிறது. இவ்வளவுக்கும் மத்தியில்தான் ‘தென்மேற்குப் பருவக்காற்று’, ‘ஒன்பதுரூபாய் நோட்டு’, ‘பெரியார்’, ‘மொழி’ போன்ற படங்கள் வந்திருக்கின்றன. இந்தமாதிரி இடங்கள் கிடைக்கிறபோது அதைத் தடம் மாறாமல் பயன்படுத்த, வீரியம் குறையாமல் இயங்க வேண்டி இருக்கிறது. ஒவ்வொரு பத்தாண்டுகளும் ஒரு தலைமுறை மாறுகிறது என்பார்கள். நான் முப்பது ஆண்டுகளைத் தாண்டி நாற்பதாவது ஆண்டுக்குள் நுழைந்திருக்கிறேன். நான் நினைக்கிற பல்லவிகளை, நான் நினைக்கிற உள்ளடக்கங்களை வாங்கி வைத்துக் கொள்கிற தமிழ் சினிமா இன்றைக்கும் இல்லை. நாளை வரும் என்கிற நம்பிக்கையோடு இருக்கிறேன்.”

நீங்கள் எழுதுவதற்கு மனோரீதியான உந்துதல், இசையா கதையா அல்லது உங்களுக்குள் இருக்கும் கவித்துவ ஊற்றா?

“கதைதான். அது சரியாக இருந்தால் உற்சாகம் வருகிறது. அது உள்ளடக்கம் தருகிறது. எழுதுவதற்கு எளிமையாக இருக்கிறது. கதை இல்லாத இடங்களில் மெட்டுக்குள் வார்த்தைகளை நிரப்புவதற்குள் நான் தவித்துப் போகிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் ஒரு பால்காரன், ஒரு ஆட்டோக்காரன் பாத்திரங்களுக்குப் பாட்டெழுதுவது எளிது. அதேமாதிரி ஒரு காதல் தோல்வி என்றால் அதற்கு உள்ளடக்கம் இருக்கிறது. இப்படி உள்ளடக்கம் உள்ள பாட்டு பிடிமானத்தோடு இருக்கிறது. அப்படி உருவான பாட்டுக்கு உதாரணமாக, சிந்துபைரவியில் இடம்பெற்ற ‘நானொருசிந்து காவடிச்சிந்து’ பாடலைச் சொல்லலாம். குப்பைத்தொட்டியில் வீசி எறியப்பட்ட ஒரு பெண், தன் தாயைக் கண்டுபிடித்த பிறகு பாடுகிறாள். தாயென்று மகளுக்குத் தெரியும், மகளென்று தாய்க்குத் தெரியாது. அந்தச் சூழலில் ஒரு பாட்டு என்கிறபோது இதில் மனவியல்ரீதியான உறவுகளும் பின்னல்களும் அதிகம். இம்மாதிரி சந்தர்ப்பங்கள் கவிஞனுக்குப் பெரிய உற்சாகம் கொடுக்கும். இதுபோல் நூற்றுக்கணக்கான பாடல்களைச் சொல்லலாம்.”



சந்திப்பு: அன்பன்

திரைபடப் பாடல்களை இலக்கிய அந்தஸ்துக்கு உயர்த்தியவை உங்கள் வரிகள். அவை நியாயமான முறையில் அடையாளம் காணப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருப்பதாக நீங்கள் உணருகிறீர்களா?

“திரைப்பாடல்களை இலக்கிய அந்தஸ்துக்கு உயர்த்தியவை உங்கள் வரிகள் என்று நீங்கள் சொல்வதைக் கேட்டு நான் முழுமையாக மகிழ்ச்சியடைய முடியாது. எனக்கு முன்பு என்னுடைய முன்னோடிகள் அதைச் செய்திருக்கிறார்கள். உதாரணமாக ‘பூம்புகார்’ படத்தில் சிலப்பதிகார வரிகளையே கையாண்டிருந்தார் உடுமலை நாராயணகவி. மாசறு பொனே, வலம்புரி முத்தே, காசறுபிறையே, கரும்பே, தேனே என்கிற வரிகளெல்லாம் சிலப்பதிகார வரிகளே. திருவருட்செல்வரில், திருமால் பெருமையில் ஆழ்வார்களின் பாசுரங்களையும் நாயன்மார்களின் பதிகங்களையும் பதியமிட்டிருந்தார் ஏ.பி.நாகராஜன். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரமும் கவியரசர் கண்ணதாசனும் நல்ல இலக்கிய வளத்தைக் கொண்டு சென்றிருந்தார்கள். இவர்களின் தொடர்ச்சியாக, கவிதையைக் கவிதையாகவும் கவிதையின் உள் உறுப்புகளோடு பாடல்கள் உள்ளே கொண்டுவருகிற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவற்றை நீங்கள் அடையாளம் கண்டுகொண்டிருப்பதில் எனக்கு மகிழ்ச்சி. அவை போதிய அங்கீகரத்தைப் பெற்றிருக்கிறதா என்கிற கேள்விக்கு தேசிய விருதுகளே பதிலாக இருக்கும். ஆறு தேசிய விருதுகள் மற்ற மொழிகளில் இல்லை என்பதிலிருந்து இவற்றுக்கான அங்கீகாரத்தை நீங்கள் உணரலாம். ஆனாலும் கூட என் உழைப்புக்கு, முயற்சிக்கு, என் கனபரிமாணத்துக்கு ஏற்ற இந்திய அளவிலான அங்கீகாரம் இன்னும் வரவில்லை என்றே நினைக்கிறேன். குல்சார், ஜாவீத் அக்தர் ஆகியோரின் பாடல்கள் இந்தியா முழுவதும் பாடப்படுகிற மாதிரி வைரமுத்துவின் தமிழ்பாட்டு இந்தியாவின் மற்ற மாநிலங்களில் இன்னும் அடையாளம் பெறவில்லை என்றே கருதுகிறேன். இந்தியிலும் கூட திரையுலகினர் வரை என்னைப் பற்றித் தெரிகிறது. அண்மையில் ‘ரா ஒன்’ படத்தை தமிழில் மொழிமாற்றம் செய்யவேண்டும் என்று விரும்பிய ஷாருக்கான், “மற்ற தொழில்நுட்பக் கலைஞர்கள் யார் வேண்டுமானாலும் இருக்கட்டும், பாடல்களை மட்டும் வைரமுத்துதான் எழுதவேண்டும்” என்று சொல்லியிருக்கிறார். அந்த அளவில் அடையாளம் காணப்பட்டிருக்கிறேன். தென்னிந்திய மாநிலங்களிலும் என் பாடல்களை ரசிக்கிறார்கள். மற்ற மாநிலங்களில் இன்னும் மக்களைச் சென்றடையவில்லை என்கிற வருத்தம் இருக்கிறது.”

கண்ணதாசனும் நீங்களும் இணையும் புள்ளி எது? விலகும் புள்ளி எது?

“இணையும் புள்ளி தமிழ்மரபு. நானும் ஒரு மரபுரீதியான மனிதன்தான். விலகும் புள்ளி காலம், காலத்தால் நாங்கள் விலகி இருக்கிறோம்.”

இன்றைய பாடல்களில் தமிழ் வாழ்க்கையும் அதன் வேர்களும் இருக்கின்றனவா? தமிழ்மரபை விட்டு விலகிய பாடல்கள் குறித்த உங்கள் கருத்து?

“தமிழ் மரபை விட்டுவிலகிய கதைகள் இன்றைக்கு வந்துவிட்டன. அதற்குக் காரணம் உலகமயமாதல். அண்மையில் ஒரு பேட்டியில் ஷாருக்கான் சொல்லியிருக்கிறார், “பத்தாண்டுகளுக்குப் பிறகு இந்திப் பாடல்கள் பார்க்க ஆள் இருக்கமாட்டார்கள்” என்று. எனக்குப் பெரும் வியப்பாக இருந்தது. அவர் சொல்கிறார்: ஜெர்மனியில் யாரும் இந்தியப் படங்களைப் பார்ப்பதில்லை. கேட்டால், “அதைத் திறந்தவுடன் யாரோ இரண்டு பேர் அழுது கொண்டிருகிறார்கள்”

தொடர்ச்சி 39ஆம் பக்கம்


Ontario Vegetarian Food Bank

Employment Training & Skills Resource Centre

Certified Food Handlers

Ontario Vegetarian Food Bank works in partnership with the City of Toronto Public Health Fully Accredited Agency to provide Food Handlers Certification Program. Our Certification Training Program is valid throughout Ontario and meets all mandatory Provincial Food Safety Training requirements. This means that our Food Handler Certificate is recognized by all health units throughout Ontario.



Food Handler Training available for:
PSW's, Food service Workers, ECE /ECA Workers, Day Care Providers, Dietary Aides, Cooks, , Home Care Workers, Nannies, Restaurateurs.
*Financial assistance may be available to those who qualify

CALL TO REGISTER:
(416) 744 (HELP) 4357

Winter Food and Fund Drive
"No One Should Go Hungry"
Started from Nov.15, 2010 Mar.15, 2011

HELP US TO HELP THE HELPLESS!
North York: 3005 Islington Ave. (Islington / Steeles)
Scarborough: B5 - 2370 Midland Ave (Midland / Sheppard)

# HomeLife/GTA Realty Inc. Brokerage*

5215 Finch Ave E, #203 Toronto - **416.321.6969** 145 Traders Blvd # 29, Mississauga - **905.712.2666**

* INDEPENDENTLY OWNED AND OPERATED

AVANI AT METROGATE

Live life beautifully




TRIDEL® BUILT FOR LIFE

## NEW RELEASE

### Three New 1 Bedroom + Den Suites from $248,000*

Visit Presentation Centre For Details




**1D1+Den • $291,000***

## Feature Suite



**Homelife/GTA Realty Inc.** Brokerage*

5215 Finch Avenue East #203
Toronto, ON. M1S 0C2

**For More Information Call**

**416-321-6969**

*Independently Owned and Operated

TRIDEL BUILT GREEN

*Prices and specifications subject to change without notice. Tridel®, Tridel Built For Life®, and Tridel Built Green. Built For Life.® are registered trademarks of Tridel and used under license. ©Tridel 2012. All Rights Reserved. E. & O.E. January 2012.

# இயற்கை பூமி - வயநாடு



## கேரளா சுற்றுலா இடங்கள் - 5

வயநாடு இயற்கை ஆர்வலர்களுக்கு ஒரு சொர்க்க பூமிதான்! பேகர் வனவிலங்கு சரணாலயம், நாகர்ஹோல் வனவிலங்கு சரணாலயம், முத்துங்கா வனவிலங்கு சரணாலயம், செம்ப்ரா உச்சி, கரலாட் ஏரி, சிப்பாரா அருவி, சோச்சிப்பாரா நீர்வீழ்ச்சி, சென்டினல் ராக் அருவி, மீன்முட்டி அருவி, காட்டாறுகள், எடக்கல் குகை... என திரும்பிய பக்கமெல்லாம் ஆக அகன்ற, வனப்புப் பொங்கும் இளமைதான். இந்த இடங்களுக்குச் சென்றால், எவருக்கும் திரும்பி வரவே மனமிருக்காது. அவ்வளவு அற்புதமும் ஆச்சரியமும் கொண்ட இடங்கள். நீங்கள் பார்க்கத்தானே போகிறீர்கள்!

எடக்கல் குகைகள் என்பது கல்பேட்டாவிலிருந்து 32 கிலோமீட்டர் தொலைவில் அம்பலவாயலுக்கு அருகில், அம்புக்குட்டி மலையில் 1000 மீட்டர் உயரத்தில் காணப்படும் இரண்டு குகைகள் ஆகும். இக்குகைகளில், வரலாற்றுக் காலத்துக்கு முன்பிருந்தே மனிதர்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. இக்குகைச் சுவர்களில் காணப்படும் சித்திர எழுத்துக்கள் கி.மு. 5000 ஆண்டைச் சேர்ந்தவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதுபோன்ற செதுக்கல்கள் மிக அபூர்வம். இது குரும்பர்கள் எனப்படும் பழங்குடி மக்களின் வேலைப்பாடுகளாக இருக்கும் என்கின்றனர். இக்குகையின் சுவர்களில் செதுக்கப்பட்டுள்ள, மனித மற்றும் மிருக உருவங்கள் மற்றும் அவர்கள் பயன்படுத்திய உபகரணங்களின் உருவங்கள் ஆகியவை இங்கு சுமார் 8000 ஆண்டுகளுக்கு முன்பே மனிதர்கள் வாழ்ந்ததற்கு ஆதாரமாக உள்ளது என்கிறார்கள். இந்த இடம் தற்செயலாக 1890 ஆம் ஆண்டு மலபார் ஸ்டேட்டில் பணிபுரிந்த ஒரு ஆங்கிலேய போலீஸ் அதிகாரி பேசட் என்பரால் கண்டு பிடிக்கப்பட்டு வெளியுலகின் பார்வைக்கு வந்தது.

எடக்கல் குகை மலைமீது இருக்கிறது. பாதி தூரம் வரையில் ஜீப்பில் செல்லலாம். குறிப்பாக சுத்தான் பத்தேரியில் இருந்து சுமார் 10 கி.மீ. பயணம் வரை களைகட்டும். அதன்பிறகு நடக்கதான் வேண்டும். இந்தக் குகைக்கான மலைப்பாதையில் ஏறுவது சற்று கஷ்டம்தான். ஏற ஏற வந்துகொண்டே இருக்கும் மலை. இருப்பினும் ஆங்காங்கே அமர்ந்து மூச்சு வாங்கிக்கொண்டு, காட்டின் அடர்த்தியையும் அழகையும் பார்த்துக்கொண்டே இளைப்பாறிவிட்டு, சற்றே சிரமப்பட்டால் சென்றுவிடலாம். அதன்பிறகு ஆனந்தமும் தென்றலும்தான். மலை மீது அவ்வளவு அருமையான அற்புதமான காட்சிகள். மேலே குகை பராமரிப்புப் பணியாளர்கள் குகையின் வாயிலில் நம்மை வரவேற்பார்கள். வரலாற்றாய்வாளர்களுக்கு மிக விருப்பமான இடமாக இது இருக்கும்.

இந்த மலையை பற்றி நிறைய கதைகள் கூறப்படுகின்றது. ராமனின் பிள்ளைகள் லவா குசா இருவரும் எய்த அம்பில் உருவானதே இந்த மலை என்கின்றனர் சிலர். ராமன் சூர்பனகையை கொன்றதும் இங்கு தான் என்கின்றனர் சிலர். சுத்தான் பத்தேரியில் இருந்து 15 கி.மீ. தொலைவில் முத்தங்கா வனவிலங்கு சரணாலயம் அமைந்துள்ளது. எங்கும் ரம்மியமான காட்சிகள். யானை, புலி, சிறுத்தை, கரடி, காட்டெருமை, மான் போன்றவை இங்கு உள்ளன எனச்

**- வழிப்போக்கன் -**

தொடர்ச்சி 40ஆம் பக்கம்


Canadian Tamils' Chamber of Commerce
CTCC

**14th ANNUAL ENTREPRENEUR AWARDS GALA TO BE HELD ON April 28th, 2012**

**NOMINATION PACKAGE IS AVAILABLE NOW**

Awards being nominated for (please choose one):

> **Best Entrepreneur Award**
> **Best Young Entrepreneur Award**
> **Best Woman Entrepreneur Award**
> **Best Marketing Award**
> **Most Outstanding Professional Award**
> **Most Outstanding Community Service Person Award**




Send an email to info@ctcc.ca to get a copy of the nomination package

OR VISIT OUR WEBSITE TO DOWNLOAD THE DETAIL. www.ctcc.ca

**Nomination Deadline: 5:00 P.M., March 9th, 2012**

Mike: 416.220.1184 Santha: 416.200.5470 info@ctcc.ca



நிகழ்ச்சிகளுடன் நீங்கள் இரண்டறக் கலந்துவிடுங்கள்.
நீங்கள் விரும்பியபடி $462[1] ஐயும் சேமியுங்கள்.

தொடர் நாடகங்கள். விறுவிறுப்பான நிகழ்ச்சிகள். செய்திகள். பாடல்கள். கிரிக்கெட். திரைப்படங்கள்.

கீழே காணப்படும் அலைவரிசைகளில் குறைந்தது ஏதாவது ஒன்றை $10.10 அலைவரிசை ஒன்றிற்கு/மாதம்[2] தெரிவு செய்வதன் மூலம் றோஜேர்ஸ் டிஜிட்டல் TV ஐ சிறந்த விலைக்குப் பெறுங்கள்.

$21.29 / மாதம்
2 வருட ஒப்பந்தத்துடன்*
(மாதந்தக்கட்டணம் மற்றும் நியமத்தரமான டிஜிட்டல் பெட்டி வாடகையும் உட்பட)[3]

*மாதக் கட்டணம் வரும் மார்ச், 1, 2012 முதல் $23.32/மாதம் ஆக உயர உள்ளது.

றோஜேர்ஸ் டிஜிட்டல் அடிப்படை TV வாடிக்கையாளரான நீங்கள் பின்வருவனவற்றை மகிழ்ச்சியாக அனுபவிக்கலாம்:

- 170 இற்கும் மேற்பட்ட டிஜிட்டல் அலைவரிசைகளுடன் வருடம் முழுவதும் இலவசமாக அலைவரிசைகளின் முன்னோட்டங்களையும் பார்க்கலாம்
- பிரபலமானவர்களின் பேட்டிகள் மற்றும் பல்சுவை நிகழ்ச்சிகளை Rogers On Demand Online இல் பாருங்கள் (RogersOnDemand.com)[4]



குறிப்பிட்ட காலத்துக்கு மட்டுமே இந்த சலுகை. மாற்றுங்கள் அத்துடன் இன்றே சேமியுங்கள்! அழையுங்கள் **1 866 622-7542**

ROGERS™

Offer available to new Rogers Digital TV customers for a limited time and subject to change without notice. Basic Cable and Digital/HD Box required to receive Digital/HD programming. Channel availability may vary by region. Taxes extra. **1** Savings of $462.72 over two years is based on Digital Basic regular monthly service fee of $40.57/mo. as compared to $21.29/mo. promotional rate for 2 years (including CRTC Local Programming Improvement Fund Fee, monthly Digital Service Fee and standard digital box rental). Effective March 1, 2012, savings of $462.72 over two years is based on Digital Basic regular monthly service fee of $42.60/mo. as compared to $23.32/mo. promotional rate for 2 years (including CRTC Local Programming Improvement Fund Fee, monthly Digital Service Fee and standard digital box rental). **2** Includes where applicable, CRTC Local Programming Improvement Fund Fee of 1.5% of the recurring TV monthly service fee. **3** Includes monthly Digital Service Fee of $2.99 and SD box rental of $4.49 and, where applicable, CRTC Local Programming Improvement Fund Fee of 1.5% of the recurring TV monthly service fee. Regular monthly rates apply after promotional period. 2-year term required for Digital TV. Early Cancellation Fee applies. Monthly service fee varies by channel subscription. **4** Charges apply to some On Demand programming content. Rogers On Demand Online only available in Canada with an Internet connection. © 2012

# திரை விமர்சனம் - உச்சிதனை முகர்ந்தால்

இலங்கை இராணுவத்தால் கூட்டு பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட ஒரு ஈழச் சிறுமியின் கதைதான் 'உச்சிதனை முகர்ந்தால்'. தென் தமிழீழப் பகுதியான மட்டக்களப்பில் பதின்மூன்று வயது சிறுமிக்கு நடந்த உண்மைச் சம்பவத்தைத் தழுவி இத்திரைப்படம் எடுக்கப்பட்டி ருக்கிறது! ஏற்கெனவே வெளியாகிய படம்தான் என்றாலும், இப்பொழுது இரண்டாவது வெளியீடாக மீண்டும் திரைக்கு வருகிறது.

ஈவு இரக்கம் இல்லாத சிங்கள ராணுவ வீரர்களின் காமப் பசிக்கு இரையாகி, கருகி போன ஒரு இளம் மொட்டு புனிதவதி (நீநிகா). ஈழத்தில் நடக்கும் அவலங்களை உடனுக்குடன் இந்தியச் செய்தியாளர்களுக்குத் தெரிவிக்கும் சமூக ஆர்வலர், பேராசிரியர் நடேசனுக்கு (சத்தியராஜ்) வரும் தொலைபேசி அழைப்பொன்றின் மூலம் கதைக்குள் நுழைகிறாள் சிறுமி புனிதவதி. தாயுடன் களவாக இந்தியாவுக்குள் நுழைய இருக்கும் புனிதாவுக்கு ஆதரவு தருவதுடன், கர்ப்பமாக இருக்கும் அவளது கருவைக் கலைத்து, அவளது எதிர்காலத்தைச் சீர்படுத்த உதவுமாறு வேண்டி நிற்கிறது அந்த தொலைபேசி அழைப்பு. இந்தியா வந்து சேரும் புனிதாவையும் அவளது தாயாரையும் தங்கள் வீட்டிலேயே வைத்துப் பராமரிக்கிறார்கள் நடேசனும் அவரது மனைவியும் (சங்கீதா).

இராணுவத்தாரால் குழுவாக வன்புணர்வுக்குட் படுத்தப்பட்ட புனிதா, தான் கர்ப்ப முற்றிருப்பதைக்கூட அறியாமல் பால்யத்தின் குட்டிக் குட்டிக் கனவுகளுடனும் ஆசை களுடனும் தன் வாழ்வை எதிர்கொள்ள முயற்சிக்கிறாள். பறவைகளுக்குத் தண்ணீர் வைத்து, பூக்களுடன் பேசி, நாயிற்கு தமிழ்ப் பெயர் வைத்து அழைத்து என்று தன்னைச் சார்ந்தவற்றை எல்லைகளற்று நேசிக்கிறாள். கள்ளங்கபடமற்று சிரிக்கும் அவளது ஆழ்மனக் கனவு களில் அவளது ஊர் படர்ந்து கிடக்கிறது. போராளிகளுடன் சிரித்து விளையாடிய, உணவு பகிர்ந்துண்ட பொழுதுகளும், மருத்துவ வசதி கிடைக்காது குண்டடிபட்டு மரணித்த நண்பியும், இறுதியாக விடைபெற்றுப் போன மனதுக்குப் பிடித்த போராளியும் அவளது நினைவுகள் முழுக்க நிறைந்து கிடக்கிறார்கள்.

புனிதா கர்ப்பக் கலைப்புக்காக தங்கள் குடும்ப மருத்துவர் ரேகாவிடம் (லட்சுமி ராமகிருஷ்ணன்) அவளை அழைத்து செல்கின்றார் நடேசன். ஆனால், அதற்குள் கர்ப்பம் ஐந்து மாதத்தை நெருங்கி விட்டிக்கிறது. இதனாலும் புனிதா பதின்மூன்று வயதேயான சிறுமி என்பதாலும், அவளது உடல் நிலை மிகவும் பலவீனமாக இருப்பதாலும் கர்ப்பத்தைக் கலைப்பது அவளது உயிருக்கே ஆபத்தாக முடியலாம் என்கிறார் மருத்துவர். எனவே, குழந்தையைப் பிரசவிப்பதே புனிதாவைக் காப்பாற்றும் என்று சொல்லிவிடுகிறார். தனது மகளின் எதிர்காலத்தை எப்பாடுபட்டாவது சீரமைத்து விட வேண்டுமென்ற எதிர்பார்ப்பில் கடல் கடந்து வந்திருக்கும் புனிதாவின் தாய் வேறு வழியின்றி இந்த முடிவுக்கு சம்மதிக்கிறார். இந்நிலையில் ஈழத்தில் விசாரணைக்கென்று அழைத்து செல்லப்பட்ட புனிதாவின் தந்தை வேறு சில தமிழ்க் கைதிகளுடன் சேர்த்து



சிங்கள இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்படுகிறார். இதனை ஒரு இணையத்தளத்தில் பார்த்து, தகவலை உறுதிப்படுத்தும் புனிதாவின் தாய் மேலதிக அலுவல்களின் பொருட்டு புனிதாவை நடேசன் வீட்டில் விட்டுவிட்டு ஊர் திரும்புகிறார். புனிதாவுக்கு கடுமையான காய்ச்சல் வருகிறது. தீராத காய்ச்சலின் போது செய்யப்பட்ட பரிசோதனைகளில் அவளுக்கு எய்ட்ஸ் இருப்பது தெரிய வருகிறது.

தன்னை வன்புணர்ந்தவனின் கருவை சுமந்துகொண்டு தன் தந்தை இறந்தது தெரி யாமல் ஊருக்குப் போன தாயாருக்கு என்ன நடந்தது என்று அறியாமல் இருக்கும் புனிதாவுக்கு என்ன நடந்தது? அவள் குழந்தை என்னவாயிற்று? தாயார் என்னவானார்? போன்ற பல கேள்விகளுக்கு பதில் சொல்லி முடிகிறது படம்.

முதன் முறையாக தமிழ்த் திரைப்படங்களில் ஈழ தமிழ் செயற்கைத்தன்மை இன்றி இப்படத்தில் பேசப்பட்டுள்ளது. சனல்-4 தொலைக்காட்சி வெளியிட்ட ஆவணப் படத்திலுள்ள, கண்கள் கட்டப்பட்ட தமிழ்ப் போராளிகளை இலங்கை இராணுவம் சுட்டுக்கொல்லும் காட்சிகள், மீள் உருவாக்கம் செய்து இப்படத்தில் காண்பிக்கப்படுகின்றது. ஒருமுறை வழி தவறி செல்லும் புனிதாவை காப்பாற்றுகிறார் ஒரு திருநங்கை. பொதுவாக தமிழ்த் திரைப்படங்களில் கேலியும் கிண்டலுமாகச் சித்திரிக்கப்படும் திருநங்கைகளை, அவர்களும் மனுஷிதான், மனிதநேய முள்ளவர்கள்தான் எனக் காட்டுகிறது இப்படம். இப்படி பல பாராட்டத்தக்க அம்சங்கள் உள்ளன. புனிதா பாத்திரம் ஈழத்தில் சீரழிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான இளம்பெண்களின், சிறுமிகளின் ஒரு பிரதி நிதியாக படைக்கப்பட்டிருக்கிறது. அவ்வகையில் பேரினவாத வன்மத்தின் தாக்குதலுக்கு உள்ளான பெண்ணாக, அதன் குறியீடாக, தன் பாத்திரத்தை நன்கு உணர்ந்து இப்பாத்திரத்தில் நடித்திருக்கிறார் நீநிகா. விமானத்தின் ஓசை கேட்டு அலுமாரிக்குள் ஒளியும் புனிதாவின் கை பங்கருக்குள் ஒளியும் பள்ளிக்கூட மாணவர்களை நினைவுபடுத்துகிறது.

பேராசிரியர் நடேசனாக சத்தியராஜ், அவரது மனைவியாக சங்கீதா, எய்ட்ஸால் பாதிப்புற்றவர்களுக்கு சிறப்பு வைத்தியம் தரும் வைத்திய நிபுணராக நடிகர் நாசர், இன்ஸ்பெக்டராக இயக்குனரும் 'நாம் தமிழர்' அமைப்பின் தலைவருமான சீமான் என நிறைய பிரபல நட்சத்திரங்கள் நடித்திருக்கிறனர். வசனம்: தமிழருவி மணியன். ஒரு ஈழத்தவரே எழுதியது போல் அத்தனை கச்சிதமாக பொருந்தியிருக்கிறது. ஒரு வசனம் வருகிறது: "அவள் செத்துக்கொண்டே இருந்தா, நாங்கள் பார்த்துக்கொண்டே இருந்தம்". நிச்சயம் பார்ப்பவர்கள் நெஞ்சை சுரீர் என்று சுடும் இந்த வசனம். "என் வயிறு பெரிதாகி விட்டதால் என்னை பள்ளிக்கூடத்திலிருந்து நிற்பாட்டிவிட்டார்கள்" என்று புனிதவதி கூறும் போதும், இவளின் கடந்த காலத் துயரங்களைப் புரியாமல் "பதின்மூன்று வயதில் எவன் கூடப் படுத்தாய்" என்று மிகக் குரூரமான வார்த்தைகளில் ஆச்சி வசைபாடும் போதும், மணியனின் இயல்பான மொழி ஆளுமை வெளிப்படுகிறது.

படத் தொகுப்பாளர்: லெனின். சென்னை திரைப்பட தணிக்கையாளர்களின் வெட்டுக்களையும் மீறி, படத்தில் ஒரு சீரான கதை நகர்வு இருப்பதற்கு, லெனின் பணியும் அனுபவமும் காரணம். இசை: டி. இமான். 'உச்சிதனை முகர்ந்தால்...', 'சுட்டிப் பெண்ணே...', இருப்பாய் தமிழா நெருப்பாய்...' போன்ற பாடல்கள், கதைக்கு எவ்வித இடையூறையும் விளைவிக்காமல், மிகைப் படுத்தல் இல்லாமல் இணைக்கப்பட்டுள்ளன. காசி ஆனந்தனின் கவிதைகள் மண்ணின் பெருமூச்சாகவும் மீண்டும் எழுவதற்கான ஊன்றுகோலாகவும் இருக்கிறது. அவரின் கவிதை வரிகளை இசை வடிவத்துள் கச்சிதமாகப் பொருத்தியிருக்கிறார் இமான். இந்தத் திரைப்படத்தை புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஸ்ரீவன் புஸ்பராஜா, ஸ்ரீ பாலசுந்தரம், சிவகணேசன் தில்லையம்பலம், ரமணன் கந்தா, விஜயசங்கர் அசோகன் இணைந்து குளோபல் மீடியா நிறுவனத்தின் சார்பில் தயாரித்திருக்கிறனர்.

இயக்கம்: புகழேந்தி தங்கராஜ். ஏற்கெனவே, 'காற்றுக்கென்ன வேலி' என்ற படத்தின் மூலம் நன்கு அறியப்பட்டவர். இந்தியத் திரைப்படத் துறையினரின் தணிக்கைக் குழுவிற்கு பயந்து படம் உருவாக்கப்பட்டிருப்பது தெரிகிறது. ஆனாலும், கதை ஈழப் பிரச்சனையை மற்றப் படங்களிலும் பார்க்க மிக ஆழமாகத் தொட்டிருக்கிறது. மற்றப் படங்களிலும் பார்க்க இது அதிகம் கண்கலங்கவும் வைக்கிறது. திரைக்கதையை மிகவும் கவனமாகவும் நேர்த்தியாகவும் கட்டமைத்துள்ளதன் மூலம் இதனை சாதித்துள்ளார் புகழேந்தி. ஒரு நடனக் குழு பின்னணியில் நடனமாடுவது போல சிறுமியை மையப்படுத்தி பெண் போராளிகள் நடனமாடும் காட்சி போன்ற வியாபாரத்துக்காக திணிக்கப்பட்டுள்ளவற்றை தவிர்த்திருக்கலாம்.

**- ஃபிலிம்நியூஸ் கிருஸ்ணன் -**

இப்படத்தை பார்க்கும் ஒவ்வொரு ஈழத் தமிழருக்கும், ஆழ்மனதில் பதிந்து கிடக்கும் வலிமிகுந்த நினைவுகள், மனவெளியில் மீண்டும் மிதக்க ஆரம்பிக்கும். மற்ற தமிழர்களுக்கு நிச்சயம் கண்ணீர் ஆறாக பெருக்கெடுக்கும். இதயம் கனத்து போகும். இந்த அளவுக்கா நம் இனத்தவர்கள் கொடுமை படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்று எண்ணி மனது கலங்கும். இந்த மொட்டு போல் எத்தனை ஆயிரம் மொட்டுக்கள் கருகிப் போயிருக்குமோ என்று எண்ணி மனது பாறாங்கல்லாகி விடும்.

உச்சிதனை முகர்ந்தால் - கட்டாயம் பார்க்க வேண்டும்!







# காதலுக்கு முதல் மரியாதை செலுத்துவீர்!

பற்று, பாசம், நேசம், அன்பு இவை முடிசூடும் போது காதல் கனிகின்றது. இரு உள்ளங்கள் இணையும் இனிப்பான, இறுக்கமான நிலையே காதல். ஒருவரை ஒருவர் அறிந்து, தெரிந்து, தெளிந்து கொள்ளும் போதுதான் உண்மைக் காதல் பிறக்கின்றது. அத்தகைய காதல் வாழ்நாள் முழுவதும் வலுப்பெறும் போது அது வாழ்வின் ஜீவநாடியாகி விடுகின்றது. வாழ்வின் சுகத்திற்கும் சுவைக்கும் வகை செய்வது காதல். எனவே காதல் நல் வாழ்க்கையின் ஊற்று. இதனால்தான் காதல் செய்வீர். அது தவறும் நிலையில் காலன் வாய்ப்படுவீர் என்கின்றார் பாரதியார்.






காதல் காதல் காதல்
காதல் போயின் காதல் போயின்
சாதல் சாதல் சாதல்!

உருவ, உறுப்பு எழிலால் ஏற்படும் காதல், கண்டதும் காதல் உண்மைக்காதலாகாது. இது நிலையற்ற காதல். உள்ளத்தின் எழிலால் எழும் காதல் தான் உறுதியான காதலாகும். இதுவே வாழ்நாள் காதல். காதல் அசாதாரண சக்தி வாய்ந்தது என்பதனை 'காற்றில் ஏறி அவ்விண்ணையும் சாடுவர் காதற் பெண்கள் கடைக்கண் பணிப்பிலே' என்று பாரதியாரும் 'கண்ணின் கடைப் பார்வை காதலியர் காட்டி விட்டால் மண்ணில் குமரர்க்கு மாமலையும் ஒரு கடுகாம்' என்று பாரதிதாசனும் கூறிப் போந்துள்ளமை நினைவிற்குரியது.

ஒத்த வயதும், ஒத்த படிப்பும், ஒத்த அழகும், ஒத்த குலமும், உடைய காளையும், கன்னியும் காதலிப்பதில் தவறில்லை. இதுவே முறையான காதல், முற்றுப் பெறும் காதல். ஆனால் முறையற்ற காதலினால் குடியே முழுகிப் போவதுண்டு. இது உடன் போக்கில் முடிந்து ஊரார் பழிப்புக்கு இடமாகின்றது. காதல் தெய்வத் தன்மை உடையது. இது கவிஞர் கண்ணதாசன் கருத்து.

காதலே தெய்வம் அந்தக்
கருணையே சொர்க்கம் என்பேன்
ஆதலால் சாதல் செய்வீர்!

காதல் தீ உண்மையான தீயிலும் மாறுபட்டது. உண்மையான தீ நெருங்கினால் சுட்டுவிடும். விட்டு விலகினால் சுட்டுவிடாது. ஆனால் காதல் தீ தொட்டால் சுகம் தரும். விட்டால் சுடும். காதல் வயமுற்ற பெண் பின்வருமாறு வர்ணிக்கப்படுகின்றாள். 'நீங்கித் தொறும் உம் குறுகுங்கால தன்னென்றும் தீயாண்டுப் பெற்றாள் இவள். காதலுக்கு கண்களே சாளரம். இதனை 'அண்ணலும் நோக்கினாள் அவளும் நோக்கினாள்' என்று கம்பரும், 'கண்ணொடு கண்ணினை நோக்கு ஒக்கின் வாய்ச் சொற்கள் என்ன பயனுமில' என்று வள்ளுவரும் கூறிப் போந்துள்ளனர்.

## பலவகைக் காதல்

கண்டதும் காதல், கல்லூரிக் காதல், காரியாலயக் காதல், இளமைக் காதல், இல்லறக் காதல், உறவினர் காதல், மாற்றார் காதல், முதுமைக் காதல், ஒரு தலைக்காதல், ஓரினக்காதல், தெய்வீகக் காதல் என்பனவே அவையாம். மேற்குலகில் பரவியுள்ள புதுவித புதிரான காதல் ஓரினக் காதலாகும். இது குலவி மகிழவா, குலம் விளங்கவா காதல் என்தனை கேள்விக் குறியாக்கியுள்ளது.

காட்சி, வேட்கை, ஒருதலை உள்ளுதல், மெலிதல், ஆக்கம் செப்பல், நாணும் வரையிறத்தல், நோக்குவது எல்லாம் அவையே போறல், மறத்தல், மயக்கம், சாக்காடு என்று இச்சிறப்புடை மரபினவை களவு என மொழிப. காதல் தோன்றுதற்கு பத்து செயல்கள் காரணமாகின்றன என்று தொல்காப்பியர் மேலே உள்ள பாடலில் தெரிவித்துள்ளார். அவையாவன காட்சி என்பது ஒருவரை பார்க்க முற்படுவது. வேட்கை என்பது மீண்டும், மீண்டும் பார்க்க விருப்பப்படுவது. ஒருதலை உள்ளுதல் என்பது ஐயப்படுவது. அதாவது தான் மட்டும் நினைக்கிறோமா? அவர் நினைக்கவில்லையா? பார்க்க விரும்பவில்லையா? என ஐயப்பட்டு தனக்குத் தானே பேசிக் கொள்ளுதல். மெலிதல் என்பது அவரையே நினைந்து சரியாக உண்ணாமல், உறங்காமல் உடலை கெடுத்துக் கொண்டு மெலிந்து போதல். ஆக்கம் செப்பல் என்பது தன் காதலை ஏதேனும் ஒருவழியில் அவருக்குத் கூற முற்படுவது. நாணும்வரையிறத்தல் என்பது அவர் சரியாகப் புரிந்து கொள்ளாவிட்டால் நாணத்தை மறந்து அவரிடமே சென்று தன் காதலை வெளிப்படையாகக் கூறுவது. நோக்குவது எல்லாம் அவையே போறல் என்பது காதலை அவர் ஏற்றுக்கொண்டு விட்டால் பார்க்கும் பொருளிலெல்லாம் அவரைக் காணுதல், கேட்கும் சொல் எல்லாம் அவராகவே நினைத்தல், அனைத்தும் அவராகவே எண்ணல்.

மறத்தல் என்பது இந்த உறவுநிலை உற்றார்க்கும் ஊரவர்க்கும் தெரிந்துவிட்ட பின்னர் திருமணத்திற்கு அவர் மறந்துவிட்டால் தன்னைத்தானே துன்புறுத்திக்கொண்டு அவரை மறக்க முயலுதல். மயக்கம் என்பது அவரை மறக்க முடியாத நிலையில் தன்னை மறந்த நிலையில், கனவிலும் அவர் பெயரைக் கூறிப்பிதற்றுவது. சாக்காடு என்பது திருமணத்திற்கு இசைவு கிடைக்காது என்று தெளிவாக தெரிந்த பின்பு தன்னை அழித்துக்கொள்ளவது.

காதலுக்காக முடிதுறந்த மன்னரும் உண்டு. கொலை செய்யப்பட்ட இளவரசியும் உண்டு. பெற்றோரை, உற்றாரை பிரிந்து சென்ற பிள்ளைகளும் உண்டு. தற்கொலை செய்து கொண்ட சாமான்யர்களும் உண்டு.


ஒருபொழுதேனும் உன்னுடன் நான்
உயிராய் இணைந்திருப்பேன்
இறப்பினும் மறுபிறப்பினும்
என்றும் நினைத்திருப்பேன்.

என்று பாடும் காதலன் நினைவுச் சின்னம் ஒன்றை நிச்சயமாக நிறுவுவான். தாஜ்மகால் காதலுக்கு ஒரு மாளிகை.



நா. க. சிவராமலிங்கம்

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

Professional Pest Control
Elimination of Roaches & Mice
Call Kanthan :
416-895-4283 / 416-291-3997

• Cockroaches • Rats & Mice
• Wasps & bees • Birds
• Ants & Spiders

# BASEMENT RENT

**NEILSON & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.282.7436

**BELLAMY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. March 01, 2012.
416.438.2626 / 647.286.7687

**BRIMLEY & HUNTINGWOOD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to TTC, school. Avail. Couple or ladies preferred. Avail. immediately.
416.335.3460 / 647.710.2301

**MARKHAM & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately. 1 Bedroom also avail. in main floor. வயது முதிர்ந்தவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.822.5654

**NEILSON & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, mall, school. Avail. Anytime.
416.332.3624 / 416.898.1242

**MCCOWAN & ELLESMERE**
1 Bedroom for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.290.1637

**DONMILLS & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC. No smoking & No drink Very strictly. Rent $325. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.855.2148

**MIDLAND & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. Anytime.
416.750.9138 / 647.401.9423

**SCAR.GOLF GLUB & LAWRENCE**
1 Or 2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, cable, laundry, livingroom. No pets & No smoking. If you like we can offer sofa and single bed. Close to all facilities. Avail. March 01, 2012.
647.286.7584 / 647.718.9292

**FINCH & TAPSCOTT**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.321.4900 / 647.856.5303

**MCCOWAN & 16TH AVE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to YRT, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.294.4143

**MORNINGSIDE & LAWRENCE**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.888.0633

**MCCOWAN & FINCH**
1 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.998.3535

**TAPSCOTT & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. No pets & No smoking.
தொடர்புகளுக்கு: 416.829.9797

**BRIMORTON & MCCOWAN**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to school, park, TTC, Scarborough Town. Avail. immediately.
416.439.1570 / 416.431.5195

**PHARMACY & EGLINTON**
Newly renovated clean & spacious 1 bedroom bsmt for rent. Sep. entrance. Close to all amenities. $650 + utilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.200.0042

**NEILSON & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.564.4200

**MCCOWAN & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail.immediately.
தொடர்புகளுக்கு: 905.209.0876

**TAPSCOTT & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Everything include. Close to school, TTC, malvern mall. No pets & No smoking. Ladies preferred. Avail. immediately.
647.294.9120 / 416.358.7265

**ELSON & MCCOWAN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail.immediately.
தொடர்புகளுக்கு: 416.569.7882

**NEILSON & MORNINGSIDE**
Newly renovated 3 bedroom bsmt fro rent. parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.998.4960 / 416.299.5125

**9TH LINE & 14TH AVE.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, 2 washroom. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.828.6278

**WARDEN & LAWRENCE**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, HWY 401. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.267.0161

**BRIMLEY& LAWRENCE**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.299.0423 / 647.328.1545

**NEILSON & FINCH**
Rooms for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.843.1568

**MARKHAM & PAINTED POST**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, bank, school. Avail. immediately.
416.716.6422 / 647.427.5469

**MCCOWAN & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Livingroom, kitchen, full washroom, sep. entrance. Close to TTC School, Town Center and all amenities. Quiet place. Avai. immediately.
416 265 9138 / 416 271 8467

**MARKHAM & BUR OAK**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, YRT, go station, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.844.8692

**SCAR.GOLF CLUB & BRIMORTON (MARKHAM & ELLESMERE)**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.278.0349

**BIRCHMOUNT & SHEPPARED**
Newly 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, mall, school, hwy. Avail. immediately.
647.401.1646 / 416.723.6236

**MCCOWAN & DENISON**
Bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to school. Avail. immediately.
416.538.6768 / 647.234.1316

**MARKHAM & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, YRT, mall, SpiceLand. No Pets & No Smoking. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.732.5949

**MIDDLEFIELD & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. April 01, 2012.
தொடர்புகளுக்கு:416.717.8979

**MIDDLEFIELD & DENISON**
1 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.908.1250

**MCCOWAN & DENISON**
1 Bedroom walk-out bsmt for rent. Parking, laundry. Close to TTC, mall. Avail. February 01, 2012.
647.706.4922 / 416.522.3314

**WARDEN & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, kitchen, living room, laundry, cable & internet including. Close to TTC, hwy (401, DVP). Avail. immediately. Ladies or couple only.
தொடர்புகளுக்கு: 416.997.6575

**MARKHAM &SCAR.GOLF CLUB**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.454.9986 / 416.219.4936

**9TH LINE & 14TH AVE.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to YRT, bank, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.560.4152

**MARKHAM & 14TH AVE**
Newly 1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school, bank. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.315.5256

**MCCOWAN & STEELES**
Newly 2 bedroom bsmt for rent. Sep. entrance, 2 car parking, laundry full washroom, kitchen. Close to 24 hrs. bus service, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.272.4921

**MARKHAM & ELSON**
1 Bedroom walk-out bsmt for rent. Parking, laundry. Close to TTC, mall. Avail. immediately. Also 3 bedroom house for rent. No pets & no smoking.
905.472.1370 / 647.500.4564

**MCCOWAN & DENISON**
1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC. Single girl or single boy preferred. Avail. immediately.
416.587.5843 / 905.472.1454

**MIDLAND & KINGSTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.875.6869

**WARDEN & SHEPPARD**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, laundry, cable. Close to TTC, mall. Avail. immediately.
416.795.7321 / 416.419.7545

**MEADOWVALE & KINGSTON**
1 Bedroom bsmt for rent. Parking, laundry, full washroom. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.344.0585

**VICTORIAPARK & ELLESMERE**
1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, laundry, utilities inclu. Close to TTC, mall & more. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.576.2655 / 416.444.2655 / 416.844.2655

**BIRCHMOUNT & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, mall. Avail. immediatelty. 647.783.4850 / 905.294.2674 / 416.293.6211

**WARDEN & SHEPPARD**
ஒரு அறை basement மூன்று நேரச் சாப்பாட்டுடன் வாடகைக்கு உண்டு. எல்லா வசதிகளும் அண்மையில் உண்டு. பெண்கள் அல்லது வயோதிபப் பெண்கள் விரும்பத்தக்கது. Avail. immediately.
416.299.4895 / 416.201.1222

**MCCOWAN & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, kitchen, livingroom. Close to school, hospital, TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.431.7570

## SAREE BLOUSE

**தையல் தேவைகளுக்கு**
சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும். சாறி Blouse ஒன்று தைப்பதற்கு $20.
தொடர்புகளுக்கு:905.492.0259

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு **www.vlambaram.com**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 25, 26

# ROOM RENT

### MARKHAM & ELLESMERE

ஆண்கள் மட்டுமே தங்கியுள்ள 3 bedroom bachelor apt. இல் 1 bedroom வாடகைக்கு உண்டு. Internet, cable உட்பட சகல வசதிகளும் உண்டு.
தொடர்புகளுக்கு: 647.524.2999

### BRIMLEY & SHEPPARED

4 அறைகள் கொண்ட வீட்டில் upper level room for rent. Start immediate occupancy. Close to mall, park, TTC, school, bank.
Also house avail. for family.
தொடர்புகளுக்கு: 647.824.7725

### BASEMENT APARTMENT / ROOM FOR RENT

Newly renovated bsmt / room available for rent. Close to TTC, Cedarbrae mall, schools, shopping. தொடர்புகளுக்கு:
647.706.4881 / 416.439.4076

### MARKHAM & EGLINTON

1 Bedroom for rent. Kitchen, laundry, parking. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.303.1666

### CORNALL CENTER BLVD & NORTH OF HWY 7

1 Bedroom for rent in a coach house. Sep. entrance, parking, kitchen, washroom, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.270.2677

### DANFORTH & EGLINTON

Upper level 2 bedrooms for rent. Close to all facilities. Avail. immediately.
Each room rent $350.
647.216.7326 / 416.289.0510

### MARKHAM & ELLESMERE

10 Tuxedo Court
2 அறைகள் கொண்ட Apt. இல் ஒரு அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. Close to TTC, school, shopping, தமிழ்கடைகள்.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.430.0140

### MIDLAND & EGLINTON

1 Bedroom for rent. Laundry, parking. Close to TTC, Kennedy Subway.பெண்கள் மட்டும் விரும்பத்தக்கது. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.402.5253

### KENNEDY & LAWRENCE

1 Room for rent. Attached washroom, 3 min. walk to Lawrence LRT. ஒருவர் விரும்பத்தக்கது.
Available immediately.
416.994.9635 / 416.757.9456

### MIDLAND & EGLINTON

1 Room for rent in 3 bedroom bungalow house. Close to all facilities. ஒருவர் விரும்பத்தக்கது. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.906.5013

### MARKHAM & STEELES

1 Room for rent. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.703.1343

### LAWRENCE & PHARMACY

**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt இல் சகல வசதிகளுடன் உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 416.288.0303

# ROOM RENT

### KENNEDY & LAWRENCE

Rooms available in main floor. Bsmt Apt. available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

### MARKHAM & SHEPPARD

சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
416.335.5242 /416.820.1999

### MCCOWAN & EGLINTON

2 Bedroon for rent. Close to all facilities.
Avail. Immediately.
416.792.2545 / 647.857.9773

### BIRCHMOUNT & MCNICOLL

Rooms for rent. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.293.6211

### NEILSON & FINCH
### MORNINGSIDE & FINCH

Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
647.361.9527 / 416.825.9717

# HOUSE FOR RENT

### SCAR. GOLF CLUB & LAWRENCE

Completely renovated. 3 Bedroom house for rent. Close to school, TTC.
Avail. March 01, 2012.
416.282.9235 / 416.627.6194

### MIDDLEFIELD & MCNICOLL

மேல்தளத்தில் 2 படுக்கை அறைகள் வாடகைக்கு உண்டு. Kitchen, livingroom, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.803.2587

### STEELES & 9THLINE

4 Bedroom house for rent. 4 Washrooms. Close to all facilities. 2 Bedroom bsmt also avail. Avail. February 01, 2012.
தொடர்புகளுக்கு: 416.931.3444

### MARKHAM & DENISON

4 Bedroom + 2 bedroom bsmt for rent. Close to all facilities. Avail. immediately.
905.599.1622 / 647.986.8622

### CONVENIENCE STORE FOR SALE

Convenience store for sale. Close to all facilities. 2 Rooms also avail.
தொடர்புகளுக்கு: 416.471.3622

# BUSINESS FOR SALE

### MCCOWAN & EGLINTON

Grocery Store ஒன்று விற்பனைக்கு உள்ளது.
1160 Sq.ft. Avail. immediately.
416.438.6959 / 416.278.5334

# இன்சுவை உணவுகள்

We can delivery your home. **அப்பம்,** தோசை, கொத்துரொட்டி, குழல்பிட்டு, பிரியாணி மற்றும் Shorteats, cake பலகார வகைகள் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்.
Birthday, ஒன்றுகூடுதல், விசேட நிகழ்வுகளுக்கு உங்கள் வீட்டில் வந்து special யாழ்ப்பாண அப்பம், தோசை சுடச்சுடச் செய்தரப்படும்.
Monthly சாப்பாடும் செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 647.522.7599

# காணி விற்பனை

யாழ்ப்பாணத்தில் இல. 48/1 பருத்தித்துறை வீதி 1 ஆம் ஒழுங்கையில் 7 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உள்ளது. தொடர்புகளுக்கு: சிட்னி அவுஸ்திரேலியா - : 61.29.742.5568

## காணி விற்பனைக்கு

டச் ரோட் (Road) மானிப்பாயில் 3 பரப்பு காணியும் முன்னால் 4 அறைகள் உள்ள வீடு ஒன்றும், அத்துடன் 11 பரப்பு வயலும் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 416.303.5706

# மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தில் A/L படித்து மருதநாமடம் 4ஆம் ஆண்டு இசைக்கல்லூரியில் சங்கீதம் படிக்கும் உயர்குல 25 வயதுடைய மணமகளுக்கு கனடாவில் வாழும் மணமகன் தேவை. தொடர்புகளுக்கு: 647.343.4983

# மணமகன் தேவை.

செவ்வாய் குற்றமுள்ள 29 வயதுடைய பல்கலைக்கழகம் முடித்து தற்போது நல்ல வேலையில் உள்ள மணமகளுக்கு பல்கலைக்கழகம் முடித்த நல்ல மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு: 647.852.3765

# மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட 2 இல் செவ்வாய் உள்ள 34 வயதுடைய B.A. பட்டதாரியான மணமகனுக்கு நல்ல குணமுடைய மணமகளை பெற்றோர் தேடுகின்றனர்.
தொடர்புகளுக்கு: 416.768.8105

## COMPUTER REPAIR

- கணனி திருத்தவேலைகள்
- கணனி தேவைகள்
- அடிப்படை கணனி பயிற்சி
- இலவச ஆலோசனைகள்



**ProWin Computers.**
2383 Eglinton Ave. East
(Wind Mobile Store) Kennedy & Eglinton
416 - 879 7489 / 647 - 340 5568

மேலும் பக்கங்கள் 24, 26

# BABY SITTING

### 10 TH LINE & MAIN STREET

1 ½ வயது ஆண் குழந்தையை பராமரிப்பதற்கு ஒரு பெண் தேவை.
தொடர்புகளுக்கு: 905.591.2780

# FREE FACIAL CLASSES

இலவசமாக முக ஒப்பனை பயிற்சி வகுப்பில் சேர விரும்புபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: 647.857.3027

### TUTORING (WEB DEVELOPMENT)

***By Experienced Graduate Tutor***
*Math 6 - 11, Physics - 11*
*Data Management - 12*
MS Word, MS Excel, MS Access programming with C, Java & Visual Basic. HTML, ASP, PHP & Mysql, Networking CCNA Prep.
Create web sites cheaply.
தொடர்புகளுக்கு: 416.706.1654

## இலங்கை கனேடிய சமூக சேவை நிலையம்

- *Settlement Service*
- *Domestic Violence*
- *Alcohol Counseling*
- *Other Social Service*

**தொடர்புகளுக்கு**
Main Office: Mississauga
Branch Office: Scarborough
***905.268.0259***

# CAR WANTED

Toyota camry 1995 - 1998. 4 Cylinder.
Any condition.
தொடர்புகளுக்கு: 416.832.1359

# SPACE FOR RENT

### MIDDLEFIELD & MARKHAM Road

1000 Sq.ft for storage including racking. Side door + Drive in door. 80 Nashdene Rd, Unit 10B.
416.321.2135 / 416.716.6893

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

# HOUSE FOR RENT

## MIDDLEFIELD & STEELES IN MARKHAM

*Newly renovated 4 bedroom house for rent. 2 full washrooms. Close to TTC, York transit, shoppers Drug Mart, banks, post office, super Markets, walmart. Enrgy certified. All floors are hardwood & laminated.*

***Contact: 416.857.9773***

# EATON ACADEMY

An Ontario Private School Registered with the Ministry of Education.

***ALL HIGH SCHOOL CREDIT COURSES OFFERED***

Courses Start in December, February, July and August

For Registration and Further Details Call

***Contact: 416.669.3101***


***80 Nashdene Road, Building D, Unit 220 (MARKHAM & NASHDENE)***

# மகா சிவராத்திரி

சைவசமயத்தின் பெருங்கடவுளாகிய உத்தமன் சிவபெருமான். இப்பெருமானை உள்ளன்போடு போற்றி மனவுறுதியோடு வழிபாடு செய்தால் பெருமகிழ்ச்சி மனத்தில் தானாகத்தோன்றும். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்றும் ஐந்தொழிலை செய்வதிலும் இறைவன் வல்லவர். உலகம் உய்ய சகல உயிர்களுக்கும் செய்யும் திருவருள் சூத்துக்கள் மிகப் பெரிதாகும். ஈசன் மக்களின் உள்ளத்தில் ஒளிவடிவினை நல்கி தனது திருவருளைக் காட்டும் திறன் அற்புதமானதாகும். 'முழுந்தழல் மேனி முதல்வன் கண்டாய்' என்றும் உலகெலாஞ் சோதியாய் நிறைந்தான்' என்றும் தேவாரத்தில் வரும் அடிகள் இதற்குச் சான்றாக உள்ளது. சகல உயிர்களுக்கும் முத்தியின்பத்தை நல்குவதில் மிக்க விழைவினைக் கொண்டவர். இதனால் இறைவன் நல்லார், உத்தமர், பெரியார், ஏகன், அநேகன் என்ற சிறப்பினையும் பெறுகின்றார். இவ்வுலகில் நாம் பெற்ற மனிதப்பிறவி அவன் அருளால் கிடைக்கப் பெற்றது ஒன்றாகும். இதற்குரிய பரிபக்குவ நிலையை பெறுவதற்கு மாசி மாதத்தில் வரும் மகாசிவராத்திரி விரதம் மெய்த்துணையாக உள்ளது. இம்மாதம் 19.02.2012 ஆம் திகதி ஞாயிற்கிழமை மகாசிவராத்திரி தினமாகும். அன்று உலகில் வாழும் சைவமக்கள் ஒவ்வொருவரும் இவ்விரதத்தை தூய்மையாக போற்றி இறைவன் திருநாமத்தை பகலும் இரவும் மறவாது போற்றினால் நிச்சயம் இப்பிறவியில் முத்தியின்பம் அவன் அருளால் கைகூடும். அன்று ஆலயங்கள் போல நமது இல்லங்களும் தூய்மை பெற்று திகழ வேண்டும். சிறப்பாக இத்தினத்தில் ஆலயங்களில் நடைபெறும் நான்கு சாமத்திலும் சிவலிங்க வழிபாட்டினை நேரில் கண்டு உவகை பெறுவதோடு அவன் புகழை பாடி ஆனந்தம் பெறுவதும் சாலச்சிறப்பாகும். இவ்விரதத்தின் மகிமையைப்பற்றி பல புராணக்கதைகள் உண்டு. இக்கதை நாம் அறியும் பொழுது மகாசிவராத்திரியின் மகிமையை பெருமையை நன்கு தெளியலாம்.

சிவபெருமானின் கண்ணைத் தன் திருக்கரத்தால் உமாதேவியார் விளையாட்டிற்காக மூடியபொழுது உலகெல்லாம் இருள் சூழ்ந்தது. விண்ணுலகத் தேவர்களும் அச்சம் கொண்டனர். இத்தினமே சிவராத்திரி ஆகும். தேவர்கள் பாற்கடலை கடைந்த பொழுது கொடிய நஞ்சு மேலெழுந்தது. இதனை இறைவன் உட்கொண்டு தேவர்களுக்கு நல்வாழ்வினை அளித்தார். இதனால் தேவர்கள் ஒன்று கூடி அன்று இரவு முழுவதும் இறைவனை நோக்கி வழிபாடு செய்தனர். இதுவே சிவராத்திரி என்பது மற்றோர் கதையாகும். பிரமனும் திருமாலும் ஆணவம் கொண்டு தாமே பெருங்கடவுள் என்று வாதாடிய வேளையில் இறைவன் அவர்கள் முன் ஆதியும் அந்தமும் இல்லாத ஆகும். பெருஞ்சோதியாகக் காட்சியளித்து, இச்சோதியின் அடிமுடியை யார் முதலில் காண்கின்றார்களோ அவர்களே 'பெரியவர்' என்று விண்ணில் அசரீரி தோன்றியது. இதனை கேட்டளவில் பிரமன் அன்னப்பறவை வடிவம் பெற்று முடியைத் தேடினார். திருமால் பன்றி வடிவில் அடியைத் தேடினார். இருவரும் தம் முயற்சியில் வெற்றி பெற இயலாத நிலையில் சோதியின் முன் நின்ற பொழுது இறைவன் சோதியில் சிவலிங்கவடிவம் காட்டி அவர்களின் ஆணவத்தை அடக்கினார். இத்தினமே சிவராத்திரி ஆகும். இது திருவண்ணாமலையில் நிகழ்ந்தது. இத்தலத்தை மனத்தால் நினைத்தால் முத்தியின்பம் கைகூடும். சிவராத்திரி தினத்தில் இத்தலத்தை தரிசனம் செய்தால் எல்லாச் செல்வமும் நிறைவு பெறும் என்பது மக்களின் நம்பிக்கையாகும். அண்ணாமலை தொழுவார் வினை வழுவாவண்ணம் அறுமே என்றும் ஞானத்தபோதரை வா என்று அழைக்கும் மலை அண்ணாமலை என்றும் ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெருஞ்சோதி என்றும் வரும் அடிகளால் இத்தலத்தின் சிறப்பினை நன்கு தெளியலாம்.

காட்டிற்கு வேட்டையாடச் சென்ற வேடன் பகற்பொழுது முழுவதும் மிருகங்கள் தென்படாது இருப்பதைக் கண்டு அதிசயப்பட்டான். இராப்பொழுதும் தொடங்கி விட்டது. இவ்வேளையில் தம் இல்லம் நாடுவது தமது உயிருக்கு ஆபத்து என்பதை உணர்ந்தான். இதனால் பக்கத்தில் உள்ள மரத்தின் மேலே ஏறி இரவு முழுவதும் விழித்து



**- அ. சிவானந்தன் -**

இருப்பதற்காக மரத்தின் இலைகளை ஒவ்வொன்றாகப் பறித்து கீழே போட்டுக் கொண்டு இருந்தான். அவ்விலைகள் யாவும் கீழே உள்ள சிவலிங்கத்தின் மீது விழுந்தன. அன்று சிவராத்திரி தினம் என்பது அவனுக்கு தெரியாது. அதிகாலையில் வேடன் மரத்தில் இருந்து கீழே இறங்கிய பொழுது, தான் பறித்த இலைகள் யாவும் சிவலிங்கம் மேலே இருப்பதைக் கண்டு ஆனந்தம் பெற்றான். அப்பொழுது இறைவன் வேடனுக்கு காட்சி அளித்து முத்தியின்பத்தை அளித்தார். இவ்வேடன் முற்பிறவியில் புண்ணிபலத்தினால் இப்பிறவியில் இத்தன்மையைப் பெற்றான். தான் ஏறிய மரம் வில்வம் மரம் என்பதையும் உணர்ந்தான். இறைவன் வில்வம் இலையால் பூசிப்பதை மிக்க விழைவோடு ஏற்றுக் கொள்ளும் பிரான். எனவே நாம் முற்பிறவியில் செய்த புண்ணியம் இப்பிறவியில் கைகூடுவதை மகாசிவராத்திரி தினத்தில் காணமுடிகின்றது. இத்தகைய நிகழ்வு தமிழகத்தில் உள்ள திருவைகாவூர் என்னும் தலத்தில் இடம் பெற்றுள்ளது. இதனால் இத்தினத்தில் பக்தர்கள் பெருந்திரளாகப் பங்கு கொண்டு அவன் அருளை பெறுவதை சிறப்பாகக் காணலாம். கும்பகோணம் சுவாமி மலைவழியாக நாடுகுடி சென்று அங்கிருந்து திருவைகாவூர் என்னும் தலத்தை அடையலாம். இது சிவராத்திரிக்குச் சிறப்புடைய தலமாகும். இக்கோயிலில் உள்ள மூலவர் சுயம்பு மூர்த்தி. இத்தலத்திற்கு 'வில்வவனம்' என்றும் பெயர் உண்டு. இறைவன் பெயர் வில்வ வளநாதர்.

மதுரை சொக்கலிங்கநாதர் மிக அற்புதமான செயல்களை பக்தர்களுக்காகச் செய்துள்ளார். இறைவன் அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் புரிந்த பெருமை வாய்ந்த தலம். மகாசிவராத்திரி தினத்தில் இறைவன் கால்மாறி ஆடிய அற்புதத்தலம் இதுவாகும். ராஜ சேகர பாண்டிய மன்னன் மதுரை வெள்ளியம்பலத்தில் எழுந்தருளியுள்ள ஆனந்த பெருமானுக்கு சிவராத்திரியில் நான்கு யாமப்பூசைகளை மிகத்தூய்மையாக செய்து அகம் மகிழ்ந்தார். இவ்வேளை இறைவனின் ஊன்றிய காலின் ஆடல் கலை கண்டு மனவேதனை அடைந்தான். இறைவனின் ஊன்றிய காலின் வேதனை கண்டு கால்மாறி ஆடும்படி மனமுருகி வேண்டுதல் செய்தார். இறைவன் மன்னனின் விருப்பத்தை நிறைவு செய்து எல்லோருக்கும் முக்தியின்பத்தை நல்கினார். எனவே நாமும் இத்தினத்தில் இறைவன் பால் ஆராத அன்பினைக் கொண்டு வேண்டுதல் செய்தால் அது அவன் அருளால் நிச்சயம் நிறைவு பெறும். மிகத்தூய்மையான உள்ளத்தோடு கண்ணீர் மல்க வேண்டுதல் செய்தால் அது அவன் அருளால் நிச்சயம் நிறைவு பெறும். அவன் அருளால் அவன் தாள் வணங்கும் பக்தர்களுக்கு இறையருள் மெய்த்துணையாக நிற்கும் என்பது நிச்சயம். சோழநாட்டில் உள்ள ஆரூரிலிருந்து நாகை செல்லும் வழியில் உள்ளது கீழ் வேளூர் என்னும் திருக்கோயில். இங்கு எழுந்தருளிய இறைவன் வலது காலைத் தூக்கி ஆடும் கோலத்தின் உள்ளான். இத்தலத்திலும் சிவராத்திரி விழா மிகச்சிறப்பாக நடைபெறுகின்றது.

கந்தபுராணம், இலிங்க புராணம், சிவமகாபுராணம், பிரம்மோத்திர காண்டம் முதலியவற்றில் இவ்விரத்தின் மகிமை இடம்பெற்றுள்ளது. சிவபெருமான்; திருநந்திதேவர், சூதபுராணிகர் முனிவர் இவ்விரத்தின் மகிமையை தம் மெய்யன்பர்களுக்கு வெளிப்படுத்தியுள்ளார். இவ்விரதத்தை புனிதமாக பின்பற்றி ஒழுகினால் அவன் அருளால் பல வரங்களை எளிதில் பெறலாம். மகாசிவராத்திரி தினத்தில் சைவமக்கள் ஒவ்வொருவரும் உள்ளன்போடு போற்றி ஆலயதரிசனம் செய்தால் மிக்க பயன் உண்டாகும்.

**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.

Classes available at **Scarborough & Stouffville**

**Contact: 647.340.9490 / 647.831.0363**

**BUY, SELL or LEASE**

**Dinesh Jeganathan**
**Sales Representative**



cell: 647-895-3466
email: jdinesh@live.ca
office: 416-298-3200
fax: 416-298-3440

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife Today Realty Ltd.**, Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, Ontario, M1P 4S6

*each office independently owned and operated
** Not intended to solicit Buyers/Sellers under representation agreement.

# இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

## அரிச்சந்திரன்

'பொய் கூறாது உண்மையை மட்டும் கூறும் மனிதர் இருக்கின்றனரா?' என்று மாணவன், ஆசிரியரை கேட்டார். 'அந்தக் கேள்வியை முனிவர் விசுவாமித்திரரும் கேட்டு இருக்கிறார். அந்தக் கதையை கூறலாமா?' என்று ஆசிரியரும் பதில் அளிக்காமல், கேள்வி கேட்டார். பிள்ளைகளும், ஆர்வத்துடன் 'கூறலாம்' என்றனர். 'ஒரு நாள், முனிவர் விசுவாமித்திரர், மனிதர் உண்மையை மட்டும் பேசி வாழலாமா என்று சோதிக்க விரும்பினார். அவர் சோழ மன்னன் அரிச்சந்திரனிடம் சென்றார். சோழ நாட்டு மன்னன் அரிச்சந்திரனுக்கு இரண்டு சிறந்த குணங்கள் இருந்தன. அவர் பொய் கூறமாட்டார் மற்றையது கூறிய வாக்கை காப்பாற்றுவார். முனிவர் சோழ நாட்டுக்கு ராஜாவை காண வந்தார். அவர் 'நான் என்ன கேட்டாலும் தருவீங்களா?' என்று கேட்டார். அரசன் சரி என்று கூறியவுடன், முனிவர் சோழ அரசைக் கேட்டார். 'முடியாவிட்டால் 'தரமாட்டேன்' என்று கூறு', என்றார். ஆனால் அரிச்சந்திரன், அவர் கொடுத்த சத்தியத்தை காப்பாற்ற 'சரி' என்று அரசை கொடுத்து விட்டு, குடும்பத்துடன் நாட்டை விட்டு சென்றார்.



இந்த நிலையிலும், முனிவர் அரிச்சந்திரனிடம் முன்பு ஒருமுறை கேட்ட பெரிய தொகை பணத்தை தரும்படி கேட்டார். முனிவர் 'ஏலாவிட்டால், நீங்கள் கேட்டதை தருவேன் என்று நான் கூறவில்லை' என்று ஒரு சிறிய பொய்யை கூறு' என்றார். முனிவர் 'நான் பணத்தையும் கேட்கமாட்டேன். அரசையும் திருப்பி அளிப்பேன்' என்றார். பொய் கூற விரும்பாத அரிச்சந்திரன் பணத்தை சம்பாதிக்க அரச குடும்பத்தை விற்றான். அரசியும், இளவரசனும் ஒரு பிராமணன் வீட்டில் வேலையாட்களாக விற்கப்பட்டனர். அரிச்சந்திரன் சுடலையில் காவலராக வேலைக்கு சேர்ந்தார்.

ஒரு நாள் பிராமணனின் பூசைக்கு பூப்பறிக்க சென்ற இளவரசன், பாம்பு தீண்டி இறந்தான். அரசியும் மகனின் உடலை சுடலைக்கு கொண்டு போனார். ஆனால் எரிக்கப்பணம் இல்லாததால், மகனை எரிக்க முடியவில்லை. மகனை விட்டு விட்டு அரசி பிராமணன் வீட்டுக்கு போய் திரும்பும் போது காட்டில் அந்நாட்டு இளவரசனின் உடலை கண்டாள். அதை தன்னுடைய மகன் என்று நினைத்து, மடியில் வைத்து அழத் தொடங்கினார். அப்போது அந்நாட்டு காவலர்கள், 'இவர்தான் எம் இளவரசரை கொன்று இருக்கிறார்,' என்று குற்றம் சாட்டி, அவளை கொல்ல வேண்டும் என்று சுடலைக்கு கொண்டு சென்றனர். மறுபடியும், விசுவாமித்திரர் பொய் சொன்னால் மகனை உயிர்ப்பித்து நாட்டை அளிப்பார் என்று கூறினார். அரிச்சந்திரன், 'பொய் கூறமாட்டேன்' என்றார்.

காவலர்கள் அரசியை கொல்ல வேண்டும் என்று அரிச்சந்திரனிடம் கட்டளையிட்டனர். அரிச்சந்திரன் கொல்லுவதற்காக கத்தியை தூக்கும் போது, அது மாலையாக மாறி அரசியின் கழுத்தில் விழுந்தது. முனிவர் வந்து அரசனுக்கு ஆட்சியையும், மகனையும் மீண்டும் அளித்தார். முனிவர் , மனிதன் உண்மையை மட்டும் பேசி வாழலாம் என்று அறிந்து கொண்டார்.

'உள்ளத்தால் பொய்யா தொழுகின் - உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்'
- திருக்குறள்

மனதாலும் பொய் கூறாத ஒருவர், எல்லோருடைய மனதிலும் வாழ்வார்.

**நீதி - வாய்மையே வெல்லும்.**



**ஞா. ஆரணி**
அகவை 13

மேலும் பக்கங்கள் 24, 25




**AYURVEDA**

**MASSAGE GOOD FOR HEALTH & PAINS**

Back, Leg, Shoulder, Cervical, Heel, Knee and Foot Pain Stiff Neck, Severe Headacke, Migraine, Insommia Weight Problems, Sciatica, Slipped - Prolapsed Disc, Solar Piexus, Disorders Of Joints, Bones And Muscles.

***Women For Women, Men For Men - 416.434.9251***

**MATH, SCIENCE & PHYSICS TUTORING**

Dedicated and excellent Classes for following Courses
- Math (G8-G11), Science (G9- G10), IB Maths
- Adcanced Function, Calculus and Vectors,
- Data Management, Physics (11,12)
- University Courses

Contact : Indran Master M.Sc , PhD 416 289 9359

**மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா**

**மகாஜனாவின் கணித, பொது அறிவுப் போட்டிகள் - 2012**

மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரால் வருடாந்தம் நடத்தப்படும் கணித, பொது அறிவுப் போட்டிகள், இவ்வருடம் மார்ச் மாதம் 4ஆம் திகதி (மார்ச் 04, 2012) ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு ரொறொன்ரோ (சேர்.ஜோன் மக்டோனால்ட் கல்லூரி) மேலும் மொண்ரியல் (முருகன் கோவில்) இலும் நடைபெற உள்ளது. மேலதிக விபரங்களுக்கும், பதிவுகளுக்கும் ***mahajanan.org*** என்ற இணையத் தளத்துக்குச் செல்லவும்.

தொலைபேசி : 416.705.1493 / 514.513.7940 / 647.989.6477
416.671.8742 / 416.451.8427

தலைவர் - நா. சாந்திநாதன் செயலாளர் - இ. இரவீந்திரன்

**சுவாமி விபுலானந்தர் கலைமன்றம் - கனடா**

**வருடாந்த பொதுக்கூட்டம்**

*Date: Saturday, February 25, 2012 Time: 3.00 pm*
*Place: York Civic Centre - #2700, Eglinton - West*
*(Keel & Eglinton)* நடைபெறவுள்ளது.

சகல அங்கத்தவர்களையும் இப்பொதுக்கூட்டத்தில் கலந்து நீங்களும் புதிய நிர்வாகத்தில் இணைந்து மன்றத்தின் வளர்ச்சிக்கும் அதன் நோக்கத்தையும் மேலும் சிறப்பாக எடுத்துச்செல்ல உங்கள் அனைவரின் ஒத்துழைப்பையும் நாடி நிற்கின்றோம். மேலும் இவ்வருட நிகழ்வுகளை சிறப்பாக நடத்திட புதியவர்களையும் உங்களுடன் அழைத்துவந்து மன்றத்துடன் இணைய உதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.

சி. உதயன் (செயலாளர்) **905.277.9440 / 647.224.8871 / 905.568.0551**

# பாலை நிலத்திற்குரிய தனிக்காட்சிகள்

## சங்க இலக்கியத்தில் காதல் காட்சிகள்

இலக்கியத்தில் காதலைப் பற்றிக் குறிப்பிடும் சுவாரசியம் மிக்க உரையாடல்கள் மனிதரின் உள்ளக் கிடக்கையைப் படம்பிடித்துக் காட்டுவன. சங்க இலக்கிப் படைப்பாளிகள் காதலுக்கும் வீரத்திற்கும் மிக உயர்ந்த இடத்தைக் கொடுத்துள்ளனர் என்பது அக்காலத்து இலக்கியங்கள் வாயிலாக அறியக் கிடக்கின்றது. காதல் கைகூடாவிட்டால் சாதல் என்பது இன்று நேற்றல்ல சங்ககாலத்திலும் நிலவியுள்ளது என்பதனைப் பல பாடல்கள் நினைவுறுத்துகின்றன.

தமது காதலை வெளிப்படுத்துவதற்கு பல்வேறுவிதமான முறைகளைக் கையாளும் தன்மை காதலர்களிடையே காணப்படுகின்றது. பெண்கள் தங்கள் காதலை வெளியே சொல்லமுடியாமல் தவிக்கும் காட்சிகளும் ஆண்கள் அதனை எப்படியாவது வெளிக்காட்டிவிடும் பாங்கும் மனித குலத்தின் பண்புபோலும். எந்த நிலத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் காதலுக்கு விதிவிலக்கில்லை என்பதனைக் காதலர்களின் காதல் உணர்வின் வெளிப்பாடு வெளிக்கொண்டு வந்து விடுகிறது.

பாலை நிலத்திற்குரிய பண்பும் ஒழுக்கமும் மற்றைய நிலங்களைவிட வேறுபாடானவை. பாலை நிலத்து ஆடவர் பொருள் தேடிச் செல்வதனால் தலைவன் தனது காதலியை விடுத்து வெகுதூரம் செல்வது வழமையாகவும், மரபாகவும் இருந்துள்ளது. இந்தப்பிரிவு தலைவியை வாட்டுகின்றது. தனது காதலனைப் பிரிந்து வாழும் நிலையை எண்ணி அவள் மனம் வேதனைக் கடலில் ஆழ்கின்றது. அவளுக்கு உற்ற துணை தோழிதானே. தோழியிடம் தனது உள்ளத்தைப் பகிர்ந்துகொள்கின்றாள். தனது தலைவி யின் ஆற்றாமையைக் கண்டு தோழி அவளைத் தேற்றுகின்றாள்.

உள்ளார்கொல்லோ தோழி! கள்வர்  
பொன் புனை பகழி செப்பம் கொண்மார்  
உகிர் நுதி புரட்டும் ஓசை போல,  
செங் காற் பல்லி தன் துணை பயிரும்  
அம் காற் கள்ளிஅம் காடு இறந்தாரே.  
- பாலை பாடிய கெருங்கடுங்கோ

தோழி! ஆறலை கள்ளர், இரும்பினாற் செய்யப்பட்ட தம் அம்பின் கூர்மையை அறியும் பொருட்டு அதனைத் தமது நகத்து நுனியில் உராய்சுவதனால் உண்டாகும் ஒலியைப்



- த. சிவபாலு -

போல, செம்மை நிறமுடைய கால்களை உடைய ஆண்பல்லியானது பெண் பல்லியை அழைப்பதற்குப் பொருத்தமான இடமாகிய பாலை நிலத்துக் கள்ளிமரங்களைக் கடந்து பொருள் ஈட்டுவதற்காகச் சென்ற எமது தலைவர் எங்களை எல்லாம் நினைக்காது இருப்பாரா? இல்லை அவர் தனது எண்ணம் எல்லாம் உன்னிடந்தான் வைத்திருப்பார். அத்தோடு அவர் தான் சென்ற பணியை நிறைவேற்றி மிக விரைவில் வந்துவிடுவார் என அவளை ஆற்றுப்படுத்துகின்றாள். இங்கே பாடுபாத்திருக்கும் தலைவிக்கு தலைவன் வரும் வேளை கேட்கும் ஒலி யின் குறிப்பை உணர்த்துவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

தோழி தன்னை ஆற்றுவதனை உணர்ந்து தலைவி, தான் தலைவன் பிரிந்து சென்றுள்ளான் என்பதனால் வருந்த வில்லை அவன் சென்ற வழி மிகுந்த கரடும் முரடுமான வழி, மேடும் பள்ளமும் நிறைந்தது, நீரும் சகதியும் உள்ளது, கொடிய ஆயுதங்களைக் கொண்டுள்ள வேடர்கள் வாழும் இடம், பொருளைக் கவரும் கள்வர் உடைய இடம் என்று அறிந்தோர் கூறுவர் என்பதனால் அவர் சென்ற வழியை நினைந்து கவலை யடைந்தேன் என்று தன்னைத் தாழ்த்திக் கொள்ளாமல் தோழிக்கு உரைப்பதாக உள்ளது பின்வரும் பாடல்

எறுப்பி அளையின் குறும் பல் களைய  
உரைக்கல் அன்ன பாறை ஏறி,  
கொடு வில் எயினர் பகழி மாய்க்கும்  
கவலைத்து என்ப அவர் தேர் சென்ற ஆறே,  
- ஓதலாந்தையார்.

தலைவன் சென்ற தேர் செல்லும் வழிகளில் உள்ள இடர்களை நினைந்துதான் நான் கவலையடைகின்றேன். அவரைப் பற்றி நான் கவலைப்படவில்லை எனத் தோழிக்குக் கூறுவதன் மறுபக்கம் அவருக்கு ஏதும் நிகழக்கூடாதே அவர் என்னிடம் ஆரோக்கியமாக திரும்பவும் வந்துசேரவேண்டும் என்பதுதானே பொருளாகக் கொள்ளமுடியும். தோழியும் சாதாரணமானவளா விடுவாளா. அவளும் மிக விநயமாகத் தனது கருத்துக்களைக் கூறி தலைவியைக் கவலைப்படாமல் சகசமாகத் தன்னோடு உரையாடவைக்க பல்வேறு வழிகளிலே அவன் சென்ற ஊர் பற்றிய வருணனைகளையும் எடுத்துரைக்கின்றாள். அவர் வந்துவிடுவார் விரைவில் வந்துவிடுவார் என்று அவள் கூறி ஆற்றுப்படுத்துவது பாலை நிலத்திற்கே உரிய தனிப் பண்பாகும்.

# இன்னொரு...

29ஆம் பக்கத்தொடர்ச்சி

பிரபஞ்சம் மாத்திரமே தெரிகின்றது, புலனாகின்றது. அது மாத்திரமல்ல, ஹபிளின் குமிழ்கள் போன்று 50 பில்லியன் ஒளியாண்டு தொலைவுகளில் வெவ்வேறு பிரபஞ்சங்கள் இருக்க வேண்டும் என்றில்லை. அருகருகே கூட இருக்கலாம். இன்னமும் சொல்லுவ தென்றால் ஒன்று இருக்குமிடத்திலேயே மற்றொன்றும் இருக்கலாம். ஆனாலும் பரி-மாண வேறுபாட்டால் அவை ஒன்றை ஒன்று குழப்பாமல், சிதைக்காமல் தத்தமது தனித்துவங்களுடன் காணப்படுகின்றன.' நல்லதொரு தேர்ந்தெடுக்கப்பட்ட விஞ்ஞானி போல் நாகராசன் கூறிக் கொண்டு போக, இன்பன் நாகராசனையே அவதானித்துக் கொண்டு கட்டிலில. அமர்ந்திருந்தான்.

இடையில் நிறுத்திய நாகராசன் செழியனையும், கார்த்திக்கையும் பார்த்தான். இவர்களுக்குத் தான் கூறுவது விளங்குகின்றதா எனப் பார்ப்பது போல இருந்தது.

'இந்தப் பிரபஞ்சத்தில் உள்ளது போலவே எல்லாப் பிரபஞ்சங்களிலும் அவற்றின் வயதுகளுக்கு ஏற்ப, கலக்சிகள், நட்சத்திரங்கள், உயிரினங்கள் கூட உள்ளன. அங்கேயும் அணுக்கள் உண்டாகத் தான் செய்கின்றன. இந்தப் பேரண்டத்தில் உள்ளது போல் 115 அணுக்கள்தான் இருக்கும் என இல்லை. குறைவாகவும் இருக்கலாம். அதற்குக் கூடவாகவும் இருக்க லாம். அந்த அணுக்களின் சேர்க்கையினால் நட்சத்திரங்கள், அவற்றின் கோள்கள் தோன்றவும் வாய்பிருக்குது. அப்பிடியே மனிதரை ஒத்த உயிரினங்கள் கூடத் தோன்றக் கூடிய நிலைகள் தோன்றி உயிரினங்களும் அப்பிரபஞ்சவெளிகளில் இருக்கலாம், இருக்கலாமென்ன இருக்கின் றன. சிலவற்றில் பகுத்தறிவு உயிரினங்கள் கூட உள்ளன. ஆனாலும் பொதுவாக உயிரினங்களுக்கு தத்தமது பிரபஞ்ச விடயங்களை மாத்திரமே கண்டு கொள்ள, உணர்ந்து கொள்ள முடியும். இது ஏனென்றால் பரிமாணங்களின் வித்தியாசம், இன்னமும் நல்லாய்ச் சொல்லுறதெண்டால் பரிமாண வேறுபாட்டால் ஆகும்.'

சிறிது இடைவெளி எடுத்துக் கொண்டவன், தொடர்ந்தான்.

'நாங்கள் ஒரு பிரபஞ்சத்தில் இருந்து கொண்டு இன்னொரு பிரபஞ்சத்தின் சக்திமட்டத்திற்கு ஏற்ப எங்களது புலன்களைச் சரிசெய்யப் பழகிக் கொள்வோமேயாயின் அந்தப் பிரபஞ்சத்தின் உடமைகளை, உயிரினங்களை எங்களால் பார்க்கமுடியும், ஏன் அவ்வுயிரினங்களுடன் தொடர்பு கொள்ளவும் கூட முடியும். ஆனால் புலன்களைப் பழக்கிக் கொள்வதென்பதுதான் சிக்கலான விடயம்'

செழியனும் கார்த்திக்கும் வியப்புடன் பார்த்துக் கொண்டிருக்க,

'சரி, இனி எங்களைப் பற்றில் சொல்லப் போகிறேன்' என இன்பன் கூற, திகைப்பு மாறாத நிலையிலேயே செழியனும் கார்த்திக்கும் பார்வையை இன்பனின் பக்கமாகத் திருப்ப, நாகராசன் சுவரண்டை சென்று சுவரில் சாய்ந்து கொண்டான்.


## "ஆறா வடு" நாவல் அறிமுக நிகழ்வு

**காலம்** - மார்ச் 4ஆம் தேதி, ஞாயிற்றுக் கிழமை, பிற்பகல் 4.00 மணிக்கு  
**இடம்** - கனடா சிறிசெல்வச்சந்நிதி முருகன் ஆலய கலாச்சார மண்டபம்,  
1 Golden Gate Court , Unit -1  
(***BRIMLEY & ELLESMERE*** சந்திப்புக்கு அருகாமையில்)

தற்போது சுவிசில் வாழ்ந்து வரும் சயந்தன் எழுதிய முதலாவது நாவலான 'ஆறா வடு' நடந்து முடிந்த சென்னை புத்தகக் கண்காட்சியில் பலரதும் வரவேற்பைப் பெற்றிருந்ததை ஊடகங்கள் வாயிலாக அனைவரும் அறிந்திருப்பீர்கள். இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியத் தலையீடு, அதற்குப் பின்னரான இலங்கை அரசின் சமாதானப் பேச்சுவார்த்தை போன்றவை நடைபெற்ற காலகட்டங்களில் நிகழ்ந்த விடயங்கள் இந்நாவலில் பேசப்படுகின்றன. அளம்பில் யுத்தத்தில் ஒரு காலை இழந்த போராளி இளைஞன் பின்னர் அரசியல் பிரிவுக்கு மாற்றப்பட்டு புலிகள்-ரணில் பேச்சுவார்த்தைக் காலகட்டத்தில் யாழ்பாணத்திற்கு அரசியல் வேலை செய்யப் போகின்றான். அங்கு அவன் காதலிக்கின்றான் அகிலா என்ற பெண்ணை. பின்னர் இயக்கத்தை விட்டு வெளியேறி நீர்கொழும்பிலிருந்து கடல் பயணம் மூலமாக இத்தாலி புறப்பட்டுச் செல்கிறான்.

இவற்றுக்கு இடையில் அவன் சந்தித்தவை, கண்டவை, நினைத்தவை என நகர்ந்து செல்கிறது இந் நாவல். இதில் வரும் மொழிபெயர்பாளர் 'நேரு ஐயா' என்ற பாத்திரம் யாழ்ப்பாணச் சமூகத்தின் மனோநிலைக்கு குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஓர் உதாரணம். அண்மைக்காலங்களில் இவ்வாறான பிரச்சினைகளை உள்ளடக்கும்விதமாக ஈழத்து எழுத்தாளர்கள் எவருமே நாவல் எதனையும் படைக்கவில்லை. அந்த வகையில் 'ஆறா வடு' முக்கியமான ஒரு நாவல்.

இலக்கிய ஆர்வலர்களை இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தொடர்புகளுக்கு - 647-237-3619

# இன்னொரு... ஆச்சி வீடு

**பாகம் - 3 பகுதி 34**

தொடர்கதை - பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கன் அனைத்தும் கற்பனையே இன்னொரு....வின் முதற்பகுதியில் பரபரப்பைப் பார்த்தீர்கள். இரண்டாம் பகுதியில் துலக்கப்படாத மர்மத்தின் ஊடாகச் சென்றீர்கள். இந்த மூன்றாம் பகுதியிலோ பல வியப்பான சம்பவங்களைக் காணப் போகின்றீர்கள்.

**◊ சி.வி. நாதன் ◊**

ஓமோம். அதை பிரபஞ்ச விபத்து என்றுதான் சொல்ல வேண்டும்' என்ற நாகராசன், இன்பனை இடைநிறுத்திவிட்டு தான் தொடர்ந்து கூறினான்.

'இந்தப் பிரபஞ்ச விபத்துப் பற்றி என்னவென்று முதலில் சொல்லிவிடுகிறேன்.' நாகராசன் பிரபஞ்ச விபத்துப் பற்றிக் கூறத் தொடங்கியதும் செழியனும், கார்த்திக்கும் ஆர்வமானார்கள். கதிரைகளை இழுத்து அமர்ந்து கொண்டார்கள். இன்பன் கட்டிலில் அமர்ந்து கொள்ள,

அடுத்த அறையிருந்த பக்கமாக திரும்பிப் பார்த்த நாகராசன் ஒரு விரிவுரையைச் செய்பவன் போன்ற தோரணைக்கு வந்தான்.

இன்னமும் அவர்களுக்குத் தெரியாமல் மறைவில்தான் நிற்கின்றோம் என்ற நினைப்புடனேயே இருந்த மணியன், சான், வில்லியம், எட்மன் ஆகியோரும் கூட காதுகளைத் தீட்டிக் கொண்டார்கள். மணியனைத் தவிர மற்ற மூவருக்கும் நாகராசன் சொல்லப் போவது என்னவென்று நேரடியாக விளங்கப் போவதில்லை. ஆனாலும் அவர்களது முகத்திலும் ஆர்வம் கொப்பளித்துக் கொண்டு இருந்தது.

'இந்தப் பூமியானது பிரபஞ்சத்தின் ஒரு சாதாரண நட்சத்திரமான சூரியனின் ஒரு சிறிய கோள். பிரபஞ்சத்தில் எப்பகுதியில் உள்ளது எனக் குறிப்பிட்டுக்கூடக் கூறமுடியாது. அவ்வளவு பெரியது இந்தப் பிரபஞ்சம். இது உங்களுக்குத் தெரிந்ததுதான். இந்தப் பிரபஞ்சம் போன்றே பல பிரபஞ்சங்கள் உள்ளன. இவற்றினைச் சமாந்தப் பிரபஞ்சங்கள் என்கின்றார்கள் சில விஞ்ஞானிகள். ஆனாலும் பலர் இந்தப் பல்பிரபஞ்சம் என்பதில் நம்பிக்கை யில்லாதவர்கள். அது ஒருபுறமாக இருக்கட்டும். ஒவ்வொரு பிரபஞ்சமும் வெவ்வேறு காலப்பகுதிகளில் தோன்றின. சில விஞ்ஞானிகள் எல்லாப் பிரபஞ்சங்களும் கிட்டத்தட்ட பதின்மூன்றரை பில்லியன் ஆண்டு முன்பாகத் தோன்றின எனக் கூறுகின்றார்கள். அவை ஒவ்வொன்றும் முன்னுரு வெற்றிடத்தில் இருந்து தனித்தனியாகத் தோன்றின என்கின்றனர் அவர்கள். அத்துடன் ஒவ்வொரு பிரபஞ்சங்களுக்கும் இடையில் 50 பில்லியன் ஒளியாண்டுகள் இடைவெளி உள்ளன எனவும் கூறுகின்றார்கள். அதற்கான எடுகோள்களையும் வடிவமைப்புகளையும் கூடத் தருகின்றார்கள். அவற்றில் ஒன்றுதான் 'ஹபிள் குமிழ்கள்' என்ற அமைப்பு எனக் கருதுகின்றேன்.'

சற்று நேரம் நாகராசன் இடைநிறுத்த,

'அடடா, மறை கழண்டவன் என நினைத்தோமே, இவ்வளவு புதிய விடயங்களை மிகச் சர்வசாதாரணமாகக் கூறுகின்றானே' கார்த்திக் மனதுக்குள் நினைக்க, நாகராசன் கார்த்திக்கைப் பார்த்துச் சிரித்தான்.

'ம் நாங்கள் நினைப்பதைக் கூடத் தெரிந்து கொள்ளுகின்றார்களே, இவர்கள்!'

'அட, இவர்கள் கபிழ் குமிழ்கள் பற்றியும் கூறுகின்றார்களே. இது பல்பேரண்டக் கொள்கையின் புதியதான எடுகோளாச்சுதே! இதன்படி, ஐம்பது பில்லியன் ஒளியாண்டு இடைத்தூரங்களில் 13.6 ஒளியாண்டு ஆரையுடைய பல குமிழிகளாக பல விரி-வடைந்து கொண்டிருக்கும் பிரபஞ்சங்கள் உள்ளன. அதில் ஒன்றுதான் எங்களது பிரபஞ்சம் என்பதும் ஒரு கருத்து. இவையெல்லாவற்றையும் எப்படி இவர்கள்' மிக அண்மையில்தான் தெரிந்து கொண்ட விடயங்கள் செழியனின் நினைவுகள் அந்த இடைவெளி நேரத்தில் ஓடின.

தொடர்ந்தான் நாகராசன்.

'எங்களைப் பொறுத்தளவில் பிரபஞ்சங்கள் வெவ்வேறு காலப்பகுதிகளில்தான் தோன்றின. அவை தோன்றுகையில் அவை கொண்ட சக்திமட்டங்கள் வேறுவேறான அளவுகளில் இருந்தன. அதனால் ஒவ்வொரு பிரபஞ்சமும் தத்தமக்கொன தனியான பௌதீக விதிகளை, பௌதீக இயல்பு களைக் கொண்டனவாக ஆகிவிட்டன. அதனால், அவற்றின் பிரபஞ்சவெளிகளின் பரிமாணங்களும் அவற்றின் உள்ளடக்கங்க ளும் பிரபஞ்சத்தகுப் பிரபஞ்சம் வித்தியாசப்பட்டுள்ளன. இந்த வித்தியாசமான பரிமாண அமைப்பினால் ஒருபிரபஞ்சத்தினை மற்றப் பிரபஞ்சம் பாதிப்பதுமில்லை, ஒரு பிரபஞ்சத்தின் செல்வாக்கு இன்னொரு பிரபஞ்சத்தினுள் நேரடியாக வருவதுமில்லை. அதனால்தான் எமக்கொல்லாம் நமது ஒரு

தொடர்ச்சி 28ஆம் பக்கம்




# போதைப் பொருட்களின் பாவனை: தற்காலிக சுவர்க்கம்

மனித வரலாறு எவ்வளவிற்கு மிகப் பழமையானதோ போதைப் பொருட்பாவனை யும் அந்தளவிற்குப் பழமையானது. மூலிகைச் செடிகளிலிருந்து தயாரிக்கப்பட்ட வெறியூட்டும் போதைப் பொருட்களை எப்படி மனித இனம் கண்டுபிடித்தது? அதனை எப்படியெல்லாம் பாவிக்கத் தொடங்கியது என்பதனை எவராலும் தெளிவாகக் கூறமுடியாது. எங்கேயோ தொடங்கப்பட்டு எங்கெல்லாம் பரவி இன்று போதைப் பொருட்கள் இல்லாத நாடுகளே இல்லாத அளவுக்கு பெருகி வந்துள்ளது.

வாழ்க்கையின் கசப்பான அனுபவங்களில் இருந்து விடுபட உள்ளக் கிளர்ச்சினைத் தூண்டும் போதைப்பொருட்கள் (Drugs) இன்று போலியானதொரு சுவர்க்கத்திற்கு தற்காலிகமாக எம்மைக் கொண்டு செல்ல உதவுகின்றன. ஆரம்பத்தில் மகிழ்ச்சியூட்டிய போதைப்பொருட்கள் இன்று இன்பக் கிளர்ச்சியைத் தோற்றுவிக்கின்றன. பல்வேறு நாடுகளில் பல்வேறு காரணங்களுக்காக இவை பயன்படுகின்றன. கடந்த சில ஆண்டுகளாக போதைப்பொருட்களின் உபயோகம் வியப்பூட்டும் வகையில் இளைஞர் யுவதிகளிடம் பரவியுள்ளது. உடல் உள சமூக நலத்திற்கும் பெரிதும் ஊறு விளைவிக்கும் நிலையில் உலகத் தலைவர்களும், மனநல மருத்துவர்களும், சமூகவியலாளர்களும் இப்பழக்கத்தினை தடுப்பதற்கு தீவிரமாக செயற்பட்டு வருகின்றன.

போதைப்பொருட்கள் மனிதனின் சிந்தனையை மாற்றி அவனது உடல் உள ஆரோக்கியத்தினை மாற்றும் வேளையில் அவனை அதற்கு அடிமையாக மாற்றி விடுகின்றன. ஒரு தடவை இப்பாவனைக்கு உட்பட்டவர் இதனை விட முடியாது மீண்டும் பயன்படுத்தித்தான் ஆகவேண்டும் என்று பரிதாப நிலைக்கு உள்ளாகின்றனர். கட்டுக்கடங்காத தீவிர விருப்பத்தினை ஏற்படுத்துவதில் மிகவும் சக்தி வாய்ந்த போதைப்பொருட்கள் நூற்றுக்கணக்கில் சந்தைக்கு வருகின்றன. இப்போதைப் பொருட்களின் குணாதியங்கள் மிகவும் வியப்பானவை. உள்ளக்கிளர்ச்சி, மனச்சார்பு நிலை, நடத்தைக்கோளாறு, உறுதியற்ற மனோநிலை ஏற்படுகின்றன.

போதைப்பொருட்கள் பாவனை சமூகத்தில் முக்கியத்துவம் பெற்ற காரணிகள் பல இருந்துள்ளன. முக்கியமாக சமூகப் பிரச்சினைகளிலிருந்து விடுபடல், புதிய ஈர்ப்புச்சக்தியுடன் கூடிய விருப்பநிலை, நாகரிகம் என்ற எண்ணம் சில கசப்பான எண்ணங்களை மறுக்கச் செய்தல் போன்றவை தூண்டுதலாக இருந்துள்ளன. எனினும் இவை அனைத்தும் நிரந்தரத் தீர்வுக்கு வழிவகுப்பதல்ல என்று எவரும் உணருவதில்லை. வேலையில்லா நிலைமை, வீடுகளில் ஏற்படும் பாதுகாப்பற்ற தன்மை போன்றனவும் அண்மையில் இளையோர் மத்தியில் போதைப் பொருட்கள் பாவனையை தூண்டியுள்ளது. கீழ் - நடுத்தர - மேல் வர்க்க வேறுபாடின்றியும், பால் வேறுபாடின்றியும், வயது வேறுபாடின்றியும் அனைவரையும் ஈர்ப்பதில் போதைப்பொருட்கள் வெற்றி பெற்றுள்ளன.



தற்போது ஏற்பட்டுள்ள 'குழு உணர்வு' போதைப் பொருட்களின் பாவனையை மேலும் தீவிரமாக்கியுள்ளது. 16 வயதிற்கு உட்பட்டவர்களைக் கூட இலகுவில் அடிமைப்படுத்தும் இப்பழக்கம் பாடசாலை களில் மிகவும் தீவிரமடைகின்றது. பயன்படுத்துபவர்கள் மட்டுமன்றி குடும்பம், சமுதாயம் பொருளாதாரநிலை அனைத்தை யும் இச்செயல் பாதிக்கின்றது.

இன்று முக்கியமான போதைப்பொருட்கள் பாவனையில் உள்ளன. அவற்றில் தீமைகளே அதிகம் என்பதில் சந்தேகமில்லை. அவற்றில் சிலவற்றை இங்கு குறிப்பிடலாம். மரிஜுவானா (Marijuana) காய்ந்த துண்டாடப்பட்ட Hemp தாவரத்தின் நீண்ட இலைகள் உள்ளடக்கிய இப்பொருட்கள் புகைத்தல், சுவைத்தல், தேநீர் போன்றவற்றுடன் கலந்து பாவிக்கப்படுகின்றன. ஐக்கிய அமெரிக்காவில் இப்பயிர் பல வைத்தியத் தேவைக்காக வளர்க்கப்படுகின்றது. வாதம், மனஅழுத்தம், உளச்சோர்வு, வாந்திபேதி போன்றவற்றிற்கு இது பாவிக்கப்படுகின்றது. மெக்சிக்கோவும் இதில் முன்னிலை வகிக்கின்றது. இதனைப் பாவிப்பதால் வேகமான நாடித்துடிப்பு, தண்ணீர் வேட்கை, கண்கள் சிவப்பாதல், கைகால் நடுக்கம், மற்றையோர் சொற்கேட்டல், தலைவலி, வாந்தி, உளச்சோர்வு, மரணவேதனை என்பன ஏற்படும். நீண்ட காலம் இதனைப் பாவிப்பவர்கள் இறுதியில் பயித்திய நிலைக்கே செல்வர். இன்று வீதியில் நடைபெறும் பல விபத்துக்களுக்கும், தற்செயலான விபத்துக்களுக்கும் இப்பாவனையே காரணமாகும். ஐக்கிய அமெரிக்காவில் Kandel என்ற அறிஞர் 1004 மாணவர்களிடம் செய்த ஆய்வில் பல உண்மைகள் வெளியாகின. இம்மாணவர் கள் விவாகரத்து செய்துள்ளனர். இளம் குடிகாரர் ஆகியுள்ளனர், மூளைக் கோளாறினால் பாதிக்கப்பட்டுள்ளனர். மருத்துவப்பாவனையில் உள்ள போதைப் பொருட்கள் சில: உஅவைஓப்பியம் (Opium), ஹெரோயின் (Heroin) கோடின் (Codeine) செயற்கையான பாபிச்சுரேட்ஸ் (Barbiturates) என்பனவாகும். ஓப்பியம் சுமேரிய நாகரிம் தோன்றிய கி.மு 7000 ஆண்டளவில் பாவனையில் இருந்துள்ளது. Opium Poppy என்ற தாவரத்திலிருந்து வந்த விதையில் இது தயாராகிறது. இதனுடன் சில இரசாயனங்களைக் கலந்து 1874 இல் ஹெரேயின் (Heroin) உருவானது. இது சூட்டினை உண்டாக்கி பேரானந்த நிலைக்கு உயர்த்தும் தன்மை கொண்டது. எனினும் பின்பு சில மணிநேரங்களில் தசைகளில் நோவு, தும்மல், வியர்த்தல், கொட்டாவி என்பன ஏற்படும். அதன் பின்பு இரத்த அழுத்தம் ஏற்படும். நித்திரை வராது. வாந்தி ஏற்படும். தற்போது செயற்கையான போதைப் பொருட்கள் உள்ளன. முக்கியமானது 'Barbiturates' ஆகும். 1903இல் உருவான இப்பொருள் ஆரம்பத்தில் ஓய்வு பெறுவோருக்கு வழங்கப்பட்டது. ஆனால் தற்போது இது துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது. மதுவுடன் கலந்து குடிக்கின்றனர்.

கோக்கெயின் (Cocaine) எனப்படும் போதைப்பொருள் 1844 கொக்கோ மரத்திலிருந்து உருவானது மயக்கும் பொருளாக பயன்பட்டது. சிக்மன்ட் பிராய்ட் என்ற உளவியலாளர் நோயாளிகளை மயக்க இதனை பாவித்தார். இதனை புகைத்தலுடன் சேர்க்கலாம். மெல்லலாம். ஊசிகளால் ஏற்றலாம். இதனால் இளவயதினர் தினசரி பாதிப்புக்கு, உள்ளாகின்றனர். 1943 இல் LSD என்ற மருந்தினை Albert Hofmann என்னும் சுவிஸ்நாட்டு மருத்துவர் பாவித்தார். இது பின்பு 'Hallucinogen' என்ற பெயரில் மாறியுள்ளது. இம்மருந்து கற்பனைத் தோற்றங்களை மனதில் உண்டு பண்ணுகின்றது. உலகில் இல்லாத பொருட்கள் மனதில் எழுவதால் மனக்கோளாறுகள் அதில் உண்மை யில்லை. 1985 இல் Ecstacy என்ற போதைப்பொருளும் பாவனைக்கு வந்துள்ளது. 1910 இல் MDA என்ற போதைப்பொருள் பழக்கத்தில் வந்துள்ளது. இதனால் சில தொடர்புமுறைகளுக்கு உதவி ஏற்பட்டாலும் தசை இறுக்கம், அடிக்கடி கண் நகர்வு, மயக்கம், வியர்த்தல், பதட்டம், தடுமாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு. பாதுகாப்பற்ற இப்பொருட்கள் சுகாதாரத்திற்கு அச்சுறுத்தலானவை. பல மரணங்கள் இவற்றினால் ஏற்பட்டுள்ளன. இதேவேளை யில் Amphetamines Narcotics ஆகியன நரம்புமண்டல அமைதிக்காக பயன்படுத்தப்படுகின்றன.


இன்று உலகெங்கும் போதைப்பொருள் பாவனையாளர்களை திருத்தும் முயற்சிகள் உள்ளன. முதலில் பாடசாலைகளில் இது பற்றிய ஆய்வுகள் உள்ளன. இதன் தீமைகள் பற்றிய கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெறுகின்றன. பெற்றோர், ஆசிரியர் சந்தித்துப் பேசுகின்றனர். அத்துடன் அனுமதியின்றி போதைப்பொருட்கள் விற்பவர்களை கண்டறிந்து சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மருத்துவரீதியிலும் பல ஆய்வுகள் உள்ளன. ஆரம்ப நிலையில் இவர்களுக்கு உதவ வேண்டும். தற்போது உளசிகிச்சையாளர், உளவியலாளர், மனநல உதவியாளர் மூலம் மட்டுமன்றி உடலியல் ரீதியிலும் தீர்வு காணவேண்டும்.



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

தொடர்ச்சி 31ஆம் பக்கம்

**ELECTRICAL WORKS**



***FRIDGE, WASHER, DRYER*** போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - ***416-286-2880***

# குவாண்ரம் பிறந்த கதை நுண்ணுலகியல் 28

இவ்வளவும் நன்றே அமைந்தன. நல்ல சுவாரசியமான நிகழ்வுகள், ஒளியினைப் பற்றிப் பார்த்தீர்கள். ஒருமுறை அவற்றினை ஆரம்பத்தில் இருந்து பார்ப்போம். சில முடிவுகளுக்கு அது விளக்கம் தரலாம். ஆரம்பத்தில் பார்த்தால், பேரண்டத்தின் பொருட்கள் தொடர்ச்சித் தன்மையானவற்றினால் ஆனவையா அல்லது தனித்தனிக கூறுகளினால் ஆனவையா என்ற கேள்வி இருந்தது. அது பின்னர் சக்தியின் ஒரு வடிவமான ஒளியிற்கும் கேட்கப்படலாயிற்று. நியூட்டன் ஒளியானது துணிக்கைகளினால் ஆனது என்றும் பல்லாயிரக்கணக்கான சின்னஞ் சிறிய ஒளித்துணிக்கைகள் நேர் கோட்டில் செல்வதாலேயே ஒளி செல்கிறது என்றும் கூறினார். அதேகாலத்தில், நியூட்டனைவிட வயதில் மூத்த ஐகனோ, 'ஒளியானது பேரண்டத்தில் நிரம்பியுள்ள ஈதர் என்ற ஊடகத்தில் தொடர்ச்சியான அலை வடிவில் பயணப்படுகின்றது' எனக் கூறினார். ஐகன் தனது கருத்துக்கான நிறுவல்களை புத்தகமாக எழுதியிருந்தாலும், அதனை உடனேயே வெளிவிடவில்லை. ஆனாலும் நியூட்டனின் துணிக்கைக் கொள்கையானது ஏற்றுக் கொள்ளப்பட்டது. பின்னர் 19ம் நூற்றாண்டில், 'யங்' தனது இருதுளைப் பரிசோதனையின் மூலமாக, ஒளியானது அலைவடிவினது என்பதனை வெற்றிகரமாக நிறுவி, நியூட்டனின் துணிக்கைக் கொள்கைக்கு முற்றுப் புள்ளி வைத்தார். இவரது முடிவினை வலுப்படுத்துவதாய் அமைந்தது மாக்ஸ்வெல்லின் மின்காந்த அலைகளின் சமன்பாடும், ஒளி மின்காந்த அலை என்ற நிரூபணமும். அதனால், ஒளியானது அலைவடிவினதுதான் என முற்றாகவே காட்டப்பட்டுவிட்டது. இந்நிலையில் பிளாங்கோ, இல்லை ஒளியானது சக்தியைக் காவுகின்ற துகள்களாக வருகின்றது என, சூடான பொருட்களில் இருந்து வெளிவருகிற, அல்லது கரும்பொருட் கதிர்வீச்சில் இருந்து வருகின்ற ஒளிக்கதிர்களில் இருந்து காட்டினார். அயன்ஸ்ரைனின் ஒளிமின் விளக்கமும் அதனை மிகச் சரியெனக் காட்டி, அதற்கு நோபல் பரிசையும் பெற்றுக் கொடுத்தது. அத்துகள்களுக்கு போட்டோன் எனப் பெயரும் இடப்பட்டு அத்துகள் காவுகின்ற சக்தியின் அளவும் குவாண்ரா எனப்பட்டு, $E = hf$ எனும் பிரபலமான சமன்பாட்டினால் அச்சக்தியின் அளவும் கணிக்கப்பட்டது.

அப்படியாயின் ஒளி தனித்தனி துணிக்கைகளினால் ஆனதா? அல்லது தொடர்ச்சியான அலை வடிவினதா? இரண்டுமே சரியானது என்று காட்டப்பட்டுள்ளனவே? இக் கேள்வி உங்களுக்குள் எழுந்திருக்கும் என்று நம்புகிறேன். இக்கேள்வியின் பதிலால்தான் குவாண்ரம் பிறந்தது. அதனையும் வெளிவுபடுத்தினார், அயன்ஸ்ரை. அயன்ஸ்ரைன் ஒளியிற்கு இரண்டு கோட்பாடுகளைக் கண்டார். ஒன்று ஒளியின் வீசற் கோட்பாடு (emission theory of light) இது கரும்பொருட் கதிர்வீச்சில் கண்டு கொண்டது. மற்றையது ஒளியின் அலைக் கோட்பாடு (wave theory of light) இங்கு வீசற் கோட்பாட்டில் ஒளியலையானது உருகச் சின்னச் சின்னத் துண்டு தண்டுகளாகச் செல்வது போலக் கண்டார். குவாண்ராக்கள் காவுகின்ற சக்தியின் அளவைக் கண்பதில் அலைகள் கொண்டுள்ள, அல்லது அலைகளின் பண்புகளில் ஒன்றான அதிர்வெண் உள்ளதல்லவா. எனவே அலையின் இயல்புகளையும் ஒளிச் சொட்டுகள் கொண்டிருக்க வேண்டும் என்பது வெட்ட வெளிச்சமாகின்றது. எனவே ஒளியினைப் பொறுத்தவரையில் இவ்விரு கேட்பாடுகளில் ஒன்றைத்தானும் தவிர்த்து விடமுடியாது என்பதை அயன்ஸ்ரைன் கண்டார். ஏனெனில் இரண்டுமே ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தன போலக் கண்டார். அத்துடன் இரண்டுமே ஒளியின் நடத்தைகளை காட்டுவதில் மிகவும் வலிமையானவையாக இருந்தன. முடிவில், அயன்ஸ்ரைன் ஒளியானது துணிக்கை 'அலைவடிவம்' என்னும் இருமை (particle – wave duality) வடிவினது என்றார். அதாவது பச்சோந்தி ஒன்று தன் சூழலுக்கு ஏற்ப நிறத்தினை மாற்றுவது போல ஒளியும் தன் நியைினுக்கு ஏற்ப, துணிக்கையாகவோ அல்லது அலைவடிவினதாகவோ நடந்து கொள்ளும். சக்தியைக் காவுகின்ற ஒளித் துணிக்கைகளுக்கு அதாவது போட்டோன்களுக்கு திணிவு இல்லை

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## பேரண்டம் - 102

என்பதனையும் குறிப்பிட்டார். ஏனெனில் அக்காலத்தில் துணிக்கைகள் திணிவுடையன என்று கருதப்பட்டன. அத்துடன் சடங்களே துணிக்கைகளாகக் காணப்படும் ஒன்பதும் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளபட்டும் இருந்தது. போட்மோன்களின் துணிக்கை இயல்பினை தெளிவாக அயன்ஸ்ரைனும் பிந்நாட்களில் வேறு விஞ்ஞானிகளும் எடுத்துக் காட்டினார்கள்.

ஒளியானது துணிக்கைகளாக, குவாண்ராக்களாக சூடான பொருட்களில் இருந்து வீசப்படுகின்றது என்பதனை எடுத்துக் காட்டிய பிளாங் அயன்ஸ்ரானின் விளக்கத்தைப் பாராட்டினாலும் முதலில் ஒளியின் இருமைத் தன்மையை அவ்வளவாக ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனாலும் ஒளியின் இருமைக் கோட்பாட்டினை நாள் செல்லச் செல்ல தள்ளி வைக்க முடியவில்லை. நாளுக்கு நாள் பரிசோதனைகளின் வாயிலாக, ஒளியின் இருமைக் கொள்கையானது வலிமை பெற்றுக் கொண்டே போனது. ஒளியின் இருமைக் கொள்கைதான் பெரும் மாற்றத்தினைக் கொண்டு வந்தது. துணிக்கையாக, அலையாகச் செல்லும் ஒளியின் இயக்கமே குவாண்ர இயக்கம் எனப்பட்டது. இதனைக் குவாண்ரம் கருதுகோள் என்றார்கள். இத்துடன் குவாண்ரம் நின்றுவிடவில்லை. இன்னமும் எண்ணிப் பார்க்க முடியாத இடங்களுக்கெல்லாம் பரவத் தொடங்கியது. என்னைப் பொறுத்தவரையில் குவாண்ரம் பிறந்த கதை இன்னமும் முடியவில்லை. வெறுமனே ஒளியின் இயக்கத்தினை குவாண்ரமாக கருதினால், இன்று நாம் கண்ட விஞ்ஞான வளர்ச்சியினை முழுதாகக் காணமுடியாது. எனவே தொடருகிறேன். அதற்காக, 20ம் நூற்றாண்டின் இன்னொரு வளர்ச்சியான அணுக் கொள்கை தேவை என்பதனால் ஒளியினை இவ்வளவில் விட்டு விட்டு. அணுக் கொள்கையின் வளர்ச்சிப் பாதையைப் பார்ப்போம்.

தொடர்ச்சியை அடுத்த தடவையில் பார்ப்போம்.


**– கனி –**
416.261.1348
leptons@hotmail.ca




# போதைப்...

30ஆம் பக்கத்தொடர்ச்சி

போதைப்பொருட்களுக்கு அடிமையாகும் பிள்ளைகளுக்கு பெற்றோர் அறிவுரை கூறுகின்றனர். நயந்து வேண்டுகின்றனர். ஏளனம் செய்து பேசுகின்றனர். இவ்வளவும் செய்தும் பலன் இல்லாமல் போவதற்கு காரணம் என்ன? காரணம் அவர்களுக்கு இது தீமை என்று தெரிந்தும் பழக்கத்திற்கு அடிமையாவதிலிருந்து விடுபடமுடியவில்லை. எனவேதான் உளநலவியலாளர் உதவி தேவைப்படுகிறது. போதைப் பொருட்களை விடமுடியாமல் இருப்பதற்கு காரணம், விட்டுவிட்டால் பயம், அமைதியின்மை, உடல் நடுக்கம், பயங்கரக்கனவு ஏற்படும். எனவே மீண்டும் உட்கொள்ளுகின்றனர். இந்த வேளையில் சில நஞ்சு இறக்க சிகிச்சை (Detoxication Treatment) உதவுகின்றது. 'Nalmafene' என்ற மருந்தினை சென்னையில் பயன்படுத்தி வெற்றிகண்டுள்ளனர். ஆசியானா, அப்பலோ மருத்துவமனைகளில் சிகிச்சை சிறப்பாக உள்ளது. கனடாவில் இதற்காக பல உள்ளக தங்குமிட வீடுகள் உள்ளன. ஐக்கிய அமெரிக்காவில் (Dayton Village, Phoenix House) மற்றும் மீள்திருத்த போதை தடுப்பு நிலையங்கள் உதவுகின்றன. பல்வேறு தடைகள் பிரச்சினைகள் இருந்தாலும் சிலரை திருத்த முயல்கின்றன. போதைப்பொருட்களின் பாவனை மனித இனத்தினை போலியான தற்காலிகமான சுவர்க்கத்திற்கு கொண்டு செல்வதோடு பிரச்சினைகளை தைரியமாக சந்திக்கும் மனவுறுதியையும் அழித்து விடுகிறது.




**பெப்ரவரி 06, 2012 தை பூசத்தை முன்னிட்டு**
**உங்கள் வீட்டிற்கு அருகாமையில் பரதநாட்டிய வகுப்புக்கள்**



*NIRUTHYA KALAKSHESTHIRA DANCE ACADEMY*

*Ajax (Taunton & Middlecote)
*Middlefield & Finch
*Markham & Elson
*Mclevin & Neilson
*14th Ave. & 9th Line
*9th Line & HooverPark
* Staines & Season Dr.

ஸ்ரீமதி செல்வானந்தி சுகுமார், பரதநாட்டிய கலைமணி, பரதகலாவித்தகி
(யாழ். நுண்கலைப்பீடம், வட இலங்கை சங்கீதசபை)
416.278.5345 / 416.754.9047




**யோகா சோதிடம்**

• கிரகப்பொருத்தம் பார்த்தல்
• சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல்
• சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

**வெளிவந்துவிட்டது!**



பலரால் ஆய்வு நிகழ்த்தப் பெற்ற
Dr. கோபால் அவர்களின்
**எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?**
**மருத்துவ கைநூல்.**
கிடைக்கும் இடம்: **விளம்பரம் பத்திரிகை அலுவலகம்**, *5215 Finch Ave. E, #201*

# ஈரானின் 'ஒரு விவாகரத்து'

ஈரான், முஸ்லீம் இவ்விரண்டும் இன்று பலமாக ஊடகங்களில் அடிபடும் பெயர்கள். முஸ்லீம் கலாச்சாரம், முஸ்லீம் பெண்கள் பற்றிய பல விடயங்களை மேற்கத்திய ஊடகங்கள் தகவல்களாகவும், ஆய்வுகளாக வும் தமது பாணியில் வெளிப்படுத்துகின்றன. இதற்கப்பால் பிரான்சில் முஸ்லீம் பெண்கள் முக்காடு போடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. கனடாவில் கனடிய குடியுரிமை பெறும் விழாவில் முக்காடு போடுவதற்கும் பல விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. மேற்கில் இவ்வாறான நடைமுறைகளும் ஊடகங்களின் பரப்புரைகளும் மேற்கில் வாழும் முஸ்லீம் பெண்கள் முக்காடு போட்டு தங்கள் மீதுள்ள ஒடுக்கு முறையின் எதிர்ப்பாகவும் வெளிப்படுத்துகின்றனர். அதே சமயம் முஸ்லீம் முற்போக்கு பெண்கள் மதத்தின் பெயரில் தங்கள் மீதான ஒடுக்கு முறைகளுக்கு எதிராக குரல் கொடுக்கின்ற னர். இதன் ஒரு பகுதியாக முற்காடு போடுவதை நிறுத்துகின்றனர். மேற்கில் முக்காடு போடும் பெண்கள் தம் மீதுள்ள அடக்கு முறையை அறியாதவர்கள் அல்ல.

மேற்கின் அடக்கு முறைகளுக்கு சாய்ந்து கொடுக்கும் வகையில் கலாச்சாரம் என்ற பெயரில் நடைபெறும் சம்பவங்கள் அதிர்ச்சியை அளிக்கின்றன. ஒன்ராரியோவின் கிச்சினர் நகரில் ஆப்கான் குடும்பத்தைச் சேர்ந்த நான்கு இளம் பெண்கள் படு கொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் குடும்ப நடைமுறைகளை பின்பற்றாமையும், ஆண் நண்பர்களை கொண்டிருந்தமையும் காரணங்களாக காட்டப்பட்டுள்ளது. இக் கொலைகளை திட்டமிட்டது அக்குடும்பத்தின் மூத்த புதல்வர். இவருக்கு வயது 21. இவர்களது தந்தை வளர்ப்புத் தாய் உட்பட்டோர் குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. கலாச்சாரத்தின் பெயரில் பல கொலைகளும் வன்முறைகளும் இந்திய, இலங்கை குடும்பங்களிலும் நடை-பெற்றுள்ளது. இவற்றின் மூலம் எமது தாய் நாடுகளின் வழிவந்துள்ளது என்பது உண்மையே. சாதியின் பெயரிலும், மதத்தின் பெயரிலும், மொழியின் பெயரிலும் நடை பெறும் கொடூரங்கள் நாமறியாதவையல்ல.

***Golshifteh Farahani*** ஈரானிய நடிகை ஆபாசமாக பிரான்சில் காட்சி கொடுத்தமைக்காக ஈரான் இவரை தனது நாட்டினுள் வர அனுமதிக்க முடியாது என அறிவித்துள்ளது. Marzieh Vafamehr, My Tehran for Sale என்ற படத்தில் தலையை காட்டி (முக்காடு போடாமல்) நடித்தமைக்காக கைது செய்யப்பட்டுள்ளார் இவருக்கு 60 கசையடிகள் என தீர்ப்பும் வழங்கப்பட்டுள்ளது. இஸ்லாமிய கலாச்சார அமைச்சில் திரைப்படத்தின் கதை சமர்ப்பிக்கப்பட்டு அவர்கள் அனுமதி கிடைத்த பின்னரே படங்கள் தயாரிக்கப்பட லாம். திரைப்படமெடுத்து முடித்த பின்னர் மீண்டும் அமைச்சு படம் பார்த்த பின்னரே திரையிட அனுமதிப்பார்கள். திரைப்பட விழாக்களில் பல பரிசுகளை பெற்ற பல படங்கள் ஈரானில் திரையிட அனுமதிக்கப்பட வில்லை. பெண்களின் உரிமைகளை வலியுறுத்தல், ஈரானிய வாழ்வியல், கலாச்சார கூறுகளை விமர்சித்தல், அதி-கரித்து வரும் தற்கொலைகளை வெளிக் காட்டுதல் போன்றவற்றை இப்படங்கள் கருவாக கொண்டிருத்தல் காரணமாக காட்டப்பட்டுள்ளது. புகழ் பெற்ற About Elly, Women Without Men, Taste of Cherry, Offside, The Circle, No One Knows About Persian Cats, Silence Between Two Thoughts போன்ற படங்கள் இவ்வாறு திரையிட அனுமதிக்காத படங்கள். இன்றும் பல படங்கள் அரசுக்குத் தெரியாமலேயே எடுக்கப்படுகின்றன.

This is Not a Film, J Jafar Panahi ன் 75 நிமிட விவரணத் திரைப்படம். ஒரு கேக்குனுள் வைக்கப்பட்டு ஈரானில் இருந்து கடத்தப்பட்டு கான்ஸ், ரொறொன்ரோ போன்ற பல திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்ட படமே 'இது படமல்ல'. ஜபார் முஸ்லீம் கலாச்சாரத்துக்கு எதிராக கருத்து தெரிவித் தமைக்காக 20 வருடங்கள் திரைப்படம் எடுப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆறு வருடங்கள் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. The White Balloon, The Circle, Crimson Gold போன்ற உலக தரமான படங்களை இயக்கியுள்ளார். Mojtaba Mirtahasebi என்ற இயக்குனர்



ஜபார் தண்டனையை எதிர்த்து மேன்முறையீடு செய்த காலத்தில் ஜபார் வசித்த மாடிக் கட்டிடத்தில் மிகவும் கவனத்துடன் எடுக்கப்பட்ட காட்சிகளை ஒரு யு.எஸ்.பியில் சேமித்து கேக்கினுள் வைத்து வெளிநாட்டிற்கு அனுப்பினார். ஈரானில் அமுக்கப்படும் ஊடக சுதந்திரத்துக்கு மேற்கூறியவை சில உதாரணங்கள்.

***A Separation*** – விவாகரத்து. ஒஸ்காரின் சிறந்த வெளிநாட்டு படத்துக்கான இறுதித் தேர்வுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது. பல திரைப்பட விழாக்களில் பாராட்டுக்களை குவித்துள்ள இப்படம் அண்மையில் சென்னை திரைப்பட விழாவில் பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. ரொறொன்ரோ சர்வதேச திரைப்பட விழாவில் இவ்வாண்டு திரையிடப்பட்டது. இஸ்லாமிய கலாச்சார அமைச்சிடம் முறையாக அனுமதி பெற்று எடுக்கப்பட்ட படம்.

படத்தின் ஆரம்பமே சுவாரசியமாக ஆரம்பிக்கின்றது. கணவன் மனைவி இருவரும் விவாகரத்து பெறுவதற்காக நீதிமன்றத்தில் உள்ளனர். நீதிபதி மனைவியைப் பார்த்து கேட்கின்றார். 'உனது கணவன் உன்னை கொடுமையாக நடத்தினாரா?' மனைவியின் பதில் 'இல்லை'.

'அவர் நல்லவர், அமைதியானவர்'

'அப்படியாயின் ஏன் விவாகரத்து கேட்கின்றாய்'

'நான் கடுமையாக போராடி வெளிநாடு செல்ல விசா பெற்றுள்ளேன். அவர் வருவதற்கு மறுக்கின்றார்'

'எனது தந்தைக்கு 'ஞாபகமறுதி' நோய். (Alzheimer) அவரை விட்டு வர முடியாது'

'அவருக்கு உன்னை தெரியாது'

'எனக்கு அவரைத் தெரியும்.'

இதன் பின்னர் விவாகரத்து கிடைக்கின்றது. இவர்களது மகள் தந்தையுடன் இருக்க வேண்டும் என தீர்ப்பளிக்கப்படுகின்றது. மகளின் நல்வாழ்வுக்கும், இன்றைய ஈரானில் இருத்தலியல் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ள தற்கும் எதிராகவே தாய் வெளிநாடு செல்ல தீர்மானித்துள்ளார். இது இன்றைய ஈரானில் மத்திய மேல் தட்டு வர்க்க மக்களிடையே பொதுவாக உள்ளது. ஷாவின் காலத்தில் இருந்தே படித்த மத்திய மேல் தட்டு மக்கள் புலம் பெயரத் தொடங்கிவிட்டனர். இது இலங்கை இந்தியா போன்ற நாடுகளிலும் காணப்பட்டது. இந்த படித்த மேல் தட்டு மக்களே முதலில் மேல் நாடுகளுக்கு புலம் பெயர்ந்தனர். பின்னரே வேலை வாய்ப்புக் களுக்கும், அரசியல் பிரச்சினைகளுக்குமாக மத்திய தர மற்றும் வறுமைக் கோட்டுடன் வாழும் மக்கள் புலம் பெயர்ந்தனர்.

தந்தை நடீர், மனைவி சிமின் வீட்டை விட்டு வெளியேறிய பின்னர் வீட்டு வேலைகளைப் பார்ப்பதற்காக ரசியா என்ற பெண்ணை வேலைக்கு அமர்த்துகின்றார். ஒரு நாள் நடீர் வேலை முடிந்து வீட்டுக்கு வந்த போது வீடு பூட்டிக் கிடக்கின்றது. வீட்டை திறந்து உள்ளே சென்ற போது நடீரின் தந்தை குளியறையில் நிலத்தில் வீழ்ந்து கிடக்கின்றார். கோபமுற்ற நடீர் ரசியா வீடு திரும்பும் பொழுது வீட்டை விட்டு வெளியேறுமாறு தள்ளி விடுகின்றார். வெளியே படியில் விழுந்த ரசியா மறுநாள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள தாக அறிகின்றார். ரசியா வின் வயிற்றில் வளரும் குழந்தையை நடீர் கொன்று விட்டதாக கைது செய்யப்படுகின்றார். விடுதலை செய்ய வேண்டுமெனில் Blood Money கட்ட வேண்டும். இரத்தப் பணம் என்பது கி.முற்பட்ட காலத்தில் இருந்தே நடைமுறையில் இருந்தது. ஒரு கொலையா-ளி தண்டனை பெறுவதற்கு பதிலாக அபராதமாக கட்டும் தொகையே இது. யப்பான், கொரியா போன்ற நாடுகளிலும் அரேபிய நாடுகளிலும் இந்த நடைமுறை இன்றும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. நடீர் அந்தத் தொகையை கட்ட மறுக்கின்றார். எனக்கு அப்பெண் கருவுற்றுள்ளார் என்பது தெரியாது என மறுக்கின்றார். முதலில் இவருக்கு சார்பாக சாட்சியமளிக்கும் மகளின் ஆசிரியை பின்னர் இவருக்கு ரசியா கருவுற்றது தெரியும் என்று தெரிந்தவுடன் தனது சாட்சியத்தை வாபஸ் பெறுகின்றார். ரசியாவின் கணவன் நடீரையும், நடீரின் மகளையும் மிரட்டுகின்றார். சிமின், நடீரை பிணையில் விடுவிக்கின்றார். ரசியாவின் கணவனுக்கு பணத்தை கொடுத்து வழக்கை வாபஸ் செய்ய ஏற்பாடு செய்கின்றார். முதலில் மறுக்கும் நடீர் பின்னர் ஒத்துக் கொள்கின்றார். பணத்தை கொடுக்க முன்னர் நடீர் ரசியாவை குர்-ஆனில் 'நடீர் தான் கருக்கொலைக்கு காரணம்' என சத்தியம் செய்யுமாறு கேட்கின்றார். ரசியா மறுத்து விடுகின்றார். உண்மையில் நடீரின் தந்தை ஒரு நாள் பத்திரிகை வாங்க வேண்டும் என வீதிக்கு வந்து விடுகின்றார். அவரைத் தேடி வீதிக்கு வந்த ரசியா ஒரு காரில் அடிபட்டே கருவை இழக்கின்றார். இதனால் சத்தியம் செய்ய மறுத்து விடுகின்றார். இறுதிக் காட்சி நடீரும் சிமனும் நீதிமன்றத்தில் உள்ளனர். நீதிபதி இவர்களின் மகளைப் பார்த்துக் கேட்கின்றார் 'நீ யாருடன் வாழ்வது என்று தீர்மானித்து விட்டாயா' எனக் கேட்கின்றார்.

## தூறல்

**வானரன்**

அல்லது முடிவு செய்யவில்லையா'? மகளின் பதில் 'நான் தீர்மானித்து விட்டேன்' 'இவர்களுக்கு முன்னால் என் பதிலைக் கூற விரும்பவில்லை' நீதிபதி அவர்களை வெளியில் அனுப்புகின்றார். காத்திருக்கும் அறையில் ஒரு தடுப்பின் ஒரு புறம் நடீர், மறுபுறம் சிமின். மகள் என்ன பதில் சொன்னார் நானும் காத்திருக்கின்றேன். இயக்குனர் பதிலை எங்களிடமே விட்டு விடுகின்றார்.


இப்படத்தை பல கோணங்களில் பார்வையாளர்கள் பார்க்கலாம். ஒரு மத்திய வர்க்க படித்த பெண் தனது குடும்பம் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் வாழ வேண்டும் எனவே வெளிநாடு செல்லதலே பாதுகாப்பு என நினைக்கின்றார். இஸ்லாமிய கடும் போக்கும் உலகின் அச்ச நிலையும் உள்ள ஈரானில் ஒவ்வொரு சாதாரண குடிமகனுக்கும் இந்த நினைப்பு வருவது தவிர்க்க முடியாது. நடீர் ஏன் வெளிநாடு செல்ல வேண்டும் என்ற கேள்விக்கு பதிலாக கூறுவது தனது தந்தையை விட்டு வரமுடியாது என்பதே. கீழைத்தேய பண்பாட்டின் முக்கிய அம்சமாக இது இங்கு ஒளிர்கின்றது. எங்கு நல்ல வாழ்வு என்று அல்லல் படும் பெற்றோரிடம் அவதிப்படும் ஒரு பண்டமாக உள்ளார் மகள். மதத்தின் வலிமையும் குறையையும் ஒருங்கே வெளிப்படுத்தும் ரசியா - நடீரின் தந்தை குளியறையில் தன்னையறியாமல் காற்சட்டை யில் சலம் விட்டு விடுகின்றார். அவரது காற்சட்டையை மாற்றுவது மதத்துக்கு எதிரானதா? என மதகுருவிடம் தொலைபேசியில் கேட்டு விட்டே உடையை மாற்றுகின்றார். கணவனின் கட்டாயத்துக்கு நடீரின் மீது குற்றம் சாட்டிய போதும், தான் பொய் சொல்வது குடும்பத்தை பாதித்து விடும். எனவே பொய் சொல்லக் கூடாது என சத்தியம் செய்ய மறுக்கின்றார் ரசியா. ஆனால் இவையெதைப் பற்றியும் கவலைப்படாமல் குற்ற உணர்ச்சியெதுவு மற்று தனது வெளிநாட்டு பயணத்திலேயே குறியாக இருக்கும் சமீன், பணத்திலேயே குறியாக இருக்கும் ரசியாவின் கணவன். வெள்ளைப் (பாதிப்பற்ற) பொய் அதாவது ஆங்கிலத்தில் White lies என்பார்கள். இது சாதாரணவாழ்வில் இயல்பாக கூறப்படுவது. இதற்காக கடவுள் எதுவும் செய்யமாட்டார் என நினைக்கும் நடீர். ஆனாலும் தனக்கான ஒரு கொள்கையை உடையவர். சமீன் காலத்திற்கு ஏற்ப மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்பவர். படத்தின் ஆரம்பத்தில் ஒரு பியானோ ஒன்றை சமீனின் இருப்பிடத்துக்கு கொண்டு வருகின்றார்கள். கொண்டு வருபவர்கள் இரண்டு மாடிக்கு மேல் கொண்டு வரமுடியாது. எங்களுக்கு இரண்டு மாடிகளுக்குத் தான் பணம் கொடுக்கப்பட்டுள் ளது என்கின்றார்கள். சமீன் மூன்றாவது மாடிக்கு கொண்டுவருவதற்கு அதிகமாக பணம் தருகின்றேன் கொண்டுவாருங்கள் என்கின்றார். இதே சமீன் பின்னர் கணவனை வழக்கிலிருந்து விடுவிப்பதற்கு பணம்

தொடர்ச்சி 37ஆம் பக்கம்

# கண்ணியம் மிக்க கைங்கரியம்!

ரேவதி ஒரு முதியபெண். தனியே மாடிக் குடியிருப்பில் வாழ்ந்து வருகிறார். உதவி வழங்கும் அமைப்பு ஒன்றிலிருந்து வீடு துப்பரவாக்க, குளிக்க வார்க்க, உணவு தயாரிக்க என வருவார்கள். குறிக்கப்பட்ட நேரத்துக்கு மேலதிகமாகத் தேவையாயின் அவர் பணங்கொடுக்க வேண்டும். பிள்ளைகள் மேற்குலக தனிக்குடும்ப வாழ்க்கையை மேற்கொண்டிருக்கிறனர். அவர்களுக்கு இரவிலும் கடமையாற்றும் தொழில் உண்டு. வைத்திய சாலைக்கு அழைத்துப்போவதற்கு, பெரிய அளவில் பொருட்கள் வாங்குவதற்கு எனின் அவர்களுள் யாரோ ஒருவர் அழைத்துச் செல்வார்.

ஒரு விசேட வைத்தியரைச் சந்திக்க வேண்டிய சந்தர்ப்பம் அடுத்தமாதம் இருந்தது. வைத்தியம் சம்பந்தமான தொடர்புகள் உள்ள மகள் ஒருத்தி, தான் வந்து அழைத்து செல்வதாக கூறியிருந்தார். அன்றைக்கு மகளது பிறந்த தினமும் ஆகும். டாக்டரோடு பேசும்போது மகளது பிறந்த நாள் என்று சொல்லவே, பரிவும் பாசமும் கொண்ட அந்த விசேட வைத்தியநிபுணர் மகளை வாழ்த்தியதோடு கைகொடுத்து நீர் கொடுத்து வைத்தவர். அம்மாவுக்கு சேவை செய்யும் வாய்ப்பு பிறந்த நாளன்றே வந்ததே! 'கஷ்டப்பட்டுக் கற்பித்த என் அம்மாவுக்கு ஒரு நாள் கூட வைத்தியம் பார்க்கவில்லை. பயிற்சி முடியுமுன்னரே அம்மா போயிற்றா' எனக் கவலைப்படுவேன். 'நீர் அதிஷ்டக்காரி. எல்லாத்துக்கும் கொடுப்பனை வேணும்' என்ற போது மகளின் முகம் சிவந்து மலர்ந்து தாயின் முகத்தைப் பார்த்து முறுவலிக்கிறார்.



தன் வீடு வந்ததும் மதிய உணவு முடித்துக் கொண்டு, 'நான் அவசரமாக அலுவலகம் போக வேணும். இன்று நின்று நாளைக்கு கொண்டே விடட்டுமா' என மகள் கேட்டார். 'அதற்கென்ன எனக்கும் களைப்பாய் இருக்கு. கொஞ்சநேரம் படுத்திருப்பம். மருமகன் எப்படியும் உனக்காக சாப்பாடு எடுப்பார். நான் நின்றால் சந்தோஷப்படுவார்.' என்று கூறினார். மகள் அலுவலகம் போய் சில அவசரவேலைகளை முடித்துக்கொண்டு 3 மணிக்கு வந்தாள்.

மகள் வேலையால் வந்திருப்பாரென இனசனங்களெல்லாம் பிறந்தநாள் வாழ்த்துக்கள் கூற அழைக்கத்தொடங்குகின்றனர். அதனை 'மைக்' இல் விட்டு பாத்திரங்கள் கழுவிக் கொண்டிருக்கிறாள். மருமகனின் சொந்தக்காரரின் வாழ்த்து தொடர்கிறது. மாமி ஒருத்தி வாழ்த்துகிறார். 'அட பாவமே பிறந்த நாளும் அதுவுமாய் ஆஸ்பத்திரிக்கா முதலில் போனீர். வேலைக்கோ, கோயிலுக்கல்லவோ போக வேணும். நாங்கள் உம்மைப் பற்றித்தான் கவலைப்படுகிறம். உண்மையில் பிள்ளைகளை தயார் செய்து, உணவு கட்டி பள்ளிக்கு அனுப்பி எங்கடை இவனும் துரும்பு கூட உதவி செய்யமாட்டான். சமைத்து இருவருக்கும் பொட்டலங்கட்டி, வேலையால் வந்ததும் உணவு சரிக்கட்டி, பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்து, பாத்திரம் பண்டம் தேய்த்து, இரவு வரும்படி அவசரச் செய்திவந்தால் தொழிலகம் ஓடிசென்று எவ்வளவு மன அழுத்தம். பற்றாததுக்கு அம்மாவின் கடமையும் நீரே செய்ய வேணும். மற்றப்பிள்ளைகள் எங்க போட்டினம். உம்மடை தலையில் கட்டியடிக்கினமோ. நாங்கள் எப்படி உதவிசெய்யுறது. அவனும் காசுப்பிசாசு. உதவிக்கு ஆள் வைப்பதற்கு விடவும் மாட்டான்'. இப்படி பெரிய இரக்கம் தொனிக்கும் சொற்பொழிவு. டாக்டரால் மலர்ந்த முகம், போலி வார்த்தைகளால் சோர்வு, வெறுப்பு, துக்கம் போன்றவை மின்னலடிக்கிறது. புட்டுக்காட்டியதால் ஏற்பட்ட சுயபச்சாத்தாபம் மேலிட்டு வெறித்த பார்வையொன்று தாய்மீது தாவுகிறது.

'உங்களுக்கு நித்திரை வராவிட்டால் பரவாயில்லை. வாருங்கோ படுக்க வைத்து விளக்கை அணைத்து விட்டுப் போறன். சரியான களைப்பாய் இருக்கு. படுக்க வேணும்'. குரலில் பழைய அரவணைப்பும் இல்லை. 'ஊரிலுள்ள மாமாக்கள் பற்றிய புதினங்களைச் சொல்லுங்கோ அம்மா. இந்த வேலை எல்லாம் முடிஞ்சாப் பிறகு கதைப்பம்' என்பதும் அந்த ஊசி ஏற்றலோடு முடிந்து விட்டது.

- குறமகள்-






Niru
நிரு
பிராண்ட்
BRAND
Niru
JACK
MACKEREL
IN BRINE
தொடர்பிற்கு தொலைபேசி.
காட்சிக்கு தொலைக்காட்சி.
இணையத்திற்கு கணனி.
உணவிற்கு நிரு பிராண்ட்.
BRAND
Niru

# பஷீர் : பூமியின் உரிமையாளர்

**கடந்த இதழ் தொடர்ச்சி...**

பஷீரின் பரந்த தரிசனத்தில் உயர்வு தாழ்வுகள் இல்லை. அவருடைய மனிதர்கள் எல்லாரும் சாதாரணர்கள். நன்மை தீமைகள் இல்லை. அவருடைய பாத்திரங்களில் பலரும் இருண்ட வாழ்க்கையைச் சிரித்துக் கொண்டு வாழ்பவர்கள். அவர்களுடைய கேள்விகள் புனிதமான சமூக நடைமுறையைக் குலைக்கின்றன. 'ஆனைவாரியும் பொன்குரிசும்' (யானை விழுங்கியும் பொற்சிலுவையும்) கதையில் திருடனான தோமா காவல் துறை அதிகாரியிடம் உரையாடும் காட்சி இதற்கு உதாரணம்.

**– சுகுமாரன் –**

'இன்ஸ்பெக்டர் கடுவா மாத்தன் கேட்டார்: "ஒரு மெய்யான கிறிஸ்தவனான நீ ஏன் இப்படிப்பட்ட இந்தப் பயங்கரப் பாவத்தைச் செய்தாய்? தங்கச் சிலுவையை நீ எதற்காகத் திருடினாய்?" தோமா சொன்னார்: "வேணும்னா எஜமான் என்னோட நாக்கில ஆணியடிச்சுக்குங்க. கர்த்தாவான யேசு மெசியாவை அறைஞ்சது மரச் சிலுவையிலேதான? தேவாலயத்துக்கு எதுக்குங்க தங்கச் சிலுவை?' இந்தப் பாத்திரம் நாயகனா? எதிர் நாயகனா? பஷீரின் உலகில் அந்த வேற்றுமை இல்லை. காரணம் அவரிடமே அந்தப் பிரிவினை இல்லை. பெரும்பான்மையான தருணங்களில் பஷீர் என்ற எழுத்தாளனும் பஷீர் என்ற மனிதனும் இருவரல்லர்.




அப்படியானால் பஷீர் இன்று கொண்டாடப்படுவது போல ஒரு சித்தனா? "நான் காய்கறியல்ல. வெண்டைக்காயல்ல. மனிதன்" என்று அவர் சொற்களால் அறைந்ததும் உண்டு. ஏற்றுக்கொண்டு முழுமையாக்கக் கடினமான பாத்திரம் மனிதனுடையதுதான் என்று ஒருமுறை பஷீர் குறிப்பிட்டிருந்தார். அது சொந்த வாழ்க்கையிலிருந்து அவர் கண்டடைந்த முடிவுங்கூட. பகத்சிங் மாதிரியான புரட்சிக்காரர், சந்நியாசி, பைத்தியக்காரர், பின்னர் சாதாரண மனிதர். ஒருவகையில் மட்டும் 'நான் ஞானியாக்கும். ஏனெனில் நான் திருமணமானவன். திருமணமாகாதவர்கள் எல்லாரும் அஞ்ஞானிகள்' என்பது பஷீரின் முத்தாய்ப்பு. இவற்றையெல்லாம் உள்ளடக்கிய எழுத்தாளனாக இருந்தார் என்பதே அவருடைய இருப்பின் நியாயம். மனிதர்கள் மீது கருணையும் நம்பிக்கையும் வைத்திருந்தார் என்பதே அவரது படைப்பாக்கத்தின் ஊற்றும் பெருக்கெடுப்பும். அப்படியான ஒரு கணத்தை பஷீரைச் சந்தித்த தருணத்தில் அனுபவித்திருக்கிறேன். இருபது வருடங்களுக்கு முந்தைய ஒரு இடவப்பாதி மழை நாளில் பஷீரைத் தேடிப் போயிருந்தேன். விட்டுவிட்டுப் பெய்கிற மழை காரணமாக வழக்கமாக உட்காரும் மரத்தடியை விட்டு வீட்டு முற்றத்தில் அமர்ந்திருந்தார். பேச்சு தொடர்வதற்கிடையில் அவர் வீட்டு உபசரிப்புப் பானமான சுலைமானி வந்தது. பால் கலக்காத அந்தத் தேநீரைப் பருகி முடித்துக் கண்ணாடித் தம்ளரை நிமிர்ந்த வாக்கில் தரையில் வைத்தேன். இருமலுக்கிடையில் அதைக் கவனித்த பஷீர் கொஞ்சம் எரிச்சலான குரலில் சொன்னார், "அதினே கமழ்த்தி வைக்கு".

தம்ளரைக் கவிழ்த்துவைத்தேன். அருகில் பஷீர் குடித்த தம்ளரும் கவிழ்ந்து நின்றிருந்தது. அவர் முகத்தில் மீண்டும் வெளிச்சம் படர்ந்தது. பேச்சு மறுபடியும் தொடர்ந்தது. முடிந்தது. விடைபெற்று இறங்கும்போது நாற்காலியிலிருந்து எழுந்து

தொடர்ச்சி 37ஆம் பக்கம்



# கத்தியின்றி யுத்தமின்றி ஞானப்படை நடத்துவாயா?




என் இனிய நண்பர்களே! வாழ்த்துக்கள். நலம் பெறப் பிரார்த்திக்கிறேன். இரண்டாம் உலகப்போரின் உக்கிரங்களை அறிந்திருப்பீர்கள். அதன் பாதிப்பின் பலனை இன்றும் மனித இனம் அனுபவித்துக் கொண்டுதான் இருக்கிறது. அந்தப் போருக்குப் பின்பு இன்னும் ஒரு போர் இந்தப் பூமிக்கு வேண்டாம் என்று வல்லரசுகள் முடிவெடுத்தன. இதனாலேயே யாராவது மூக்கைப்பிடித்தாலும், காலில் சுரண்டினாலும் கண்டு கொள்ளாமலும் பொறுத்துக் கொண்டும், சகித்துக் கொண்டும், அது தற்செயல், இது நினையாப்பிரகாரம் என்று சமாளித்துக் கொண்டும் இருக்கின்றன.

நண்பா! ஒரு காலத்தில் நமது ஊரிலே; பள்ளிப்பருவத்தில் இருவருக்குள் சண்டையை மூட்ட வேண்டுமென்றால் யாருடைய மூக்கை யார் முதலில் தொடுவது அல்லது பிடிப்பது என்று அவர்களுக்கு உருவேத்தி சண்டையை மூட்டிவிட்டு தெருச்சண்டை கண்ணுக்கு குளிர்ச்சி என்று குதூகலித்த பேதைமையை எண்ணிப்பார். மூக்கைப் பிடிக்கச் சொல்பவன் கொழுவல் போடுகிறான் என்று விளங்கிக்கொண்ட இளைஞர் கால் சட்டை சேட் கசங்காமல் வீட்டுக்குப் போவர். புத்திகெட்ட பேய்ப் பெடியன்கள் கால்சட்டை கிழிந்து, மேல்சட்டை கிழிந்து முதுகு தெரியவும் வீட்டுக்குப் போய் வீட்டிலும் அடிவாங்குவர். பின்னர் உண்மை தெளிந்து இனிச் சண்டை பிடிப்பதும் இல்லை, சட்டை கிழிப்பதும் இல்லை என்று சத்தியப் பிரமாணங்கள் எடுப்பர். இவ்வாறு தோளில் கைபோட்டு கன்னத்தில் முத்தமிட்டு அன்பை - இணைப்பை - பாசத்தை - பந்தத்தைப் பகிரங்கப்படுத்திய இளைஞர் இன்னல் தவிர்த்து இன்ப அன்பினராய் வாழ்ந்து குடும்பத்திற்கும் ஊருக்கும் நன்மை செய்பவர்களாய் மாறினர்.

இத்தகைய இயல்புள்ள இனங்களும் நாடுகளும் உண்டு தான். இவற்றிற்கும் மூக்கில் பிடிக்கச் சொல்பவர்களும் இருக்கிறர் தான். இதனாலேயே மாயப்படை வெல்ல பிரபஞ்சப் போர் விலக ஞானப்படை நடத்தச் சொன்னார் மாணிக்கவாசகர். நிற்க!

நண்பா!
இரண்டாம் உலகப் போரின்போதும் கண்மண் தெரியாமல் கண்டபடி குண்டுகளை வீசி மக்களைக் கொன்று குவித்த ஒரு இராணுவ வீரன் பின்பு ஒருகாலத்தில் தான் செய்த கொடூரச் செயலுக்காக துடியாய் துடித்த நிகழ்வு ஒன்று உண்டு. அவன் ஜேர்மனியைச் சேர்ந்தவன். போரின்போது மதவெறியாலும், மது வெறியாலும் மக்களைக் குண்டெறிந்து பதைபதைத்துச் சாகச் செய்தவன். அவர்களின் சாவை வானூர்தியிலிருந்து பார்த்தவன். ஓய்வுக்காலத்தில் அந்தக்



காட்சிகள் அவனுக்கு சனல் நான்குபோல அப்படியே மனக்கண்ணில் தெரிந்தது. தான் செய்த மகாபாதகச் செயலை அப்பாவி மனிதர்கள் அல்லல்பட்டு அழிந்த காட்சிகளை நினைத்ததும் அவனுக்கு நெஞ்சு கலங்கியது. நினைவுகள் தடுமாறின. மனஅழுத்தத்தால் இரவிலும் நித்திரை வராது திண்டாடித் திணறினான். தனது மனச்சாந்திக்காக உலகில் வெளியான சமயநூல்களையும், கடவுள் பற்றிய பாடல்களையும் தனது பணியாளர்கள் மூலம் பெற்றுப் படித்தானாம். பிறரையும் படிக்கச் சொல்லிக் கேட்டானாம்.

மனம் அமைதி பெறவில்லை. கவலைகள் கரையவில்லை. ஒரு அன்பர் மூலம் அவனுக்கு மாணிக்கவாசகரின் திருவாசகம் கிடைத்தது. G.U போப் என்ற பாதிரியார் மொழி பெயர்த்த ஆங்கிலப் பிரதி அது. அதிலே ஒரு திருவாசகம் 'கூறும் நாவே முதலாகக் கூறும் கரணம் எல்லாம் நீ' என்று தொடங்கி 'தேறும் வகை என் சிவலோகா திகைத்தால் தேற்ற வேண்டாவோ' என்று முடியும். இதனுடைய சுருக்கக் கருத்தை மட்டும் தருகிறேன்.

இறைவா! சிவலோகா! குண்டுபோடவும், தீமை பெருகவும், திகைக்க வைக்கவும், போர் நிகழவும், தேறும் வகை தெரியாமல் மக்கள் திணறவும் யார் காரணம்? நாடுகளும் தலைவர்களுமா காரணம்? இல்லை. நீ நினைத்திருந்தால் இதனை நிகழாமல் செய்திருக்கலாம். இந்த நிகழ்வால் நானும் கெட்டு திகைத்து, தேறுவதற்கு வழி தெரியாமல் திண்டாடுகிறேன். எல்லாவற்றிற்கும் காரணமான நீதான் என் திகைப்பை திண்டாட்டத்தை தேற்ற வேண்டும். நன்மை தீமை முழுதும் நீயே! வேறு ஒரு கதியும் இல்லை. உன்னைவிட்டால் நானோ பிறரோ பற்றிக் கொள்ள உயர்ந்த பொருள் வேறு ஒன்றும் இல்லை'

இந்தப் பொருளுடைய அந்தத் திருவாசகத்தை படிக்கக் கேட்ட அந்த இராணுவத்தின் மனம் அமைதி அடைந்ததாம். இதனாலேதான் மாணிக்க வாசகரின் ஞானப்படை பற்றிக் குறிப்பிட்டேன். திருவாசகத்தை ஞான அனுபவப் பனுவல் என்று அறிவுலகம் கொண்டாடுகிறது. எல்லாம் இழந்த பின்பு திருவாசகமே சாந்தியை சக்தியை நமக்குத் தந்து மீண்டும் உயிர்ப்புடன் இயங்க வைக்கும். இதனுடைய தேவை கருதியே மாணிக்கவாசகர் பாடப்பாடச் சிவபெருமான் தனது கையாலேயே எழுதி 'திருச்சிற்றம்பலம் உடையான்' என்று தனது கை எழுத்தையும் போட்டு வைத்தானாம். தனது தேவைக்காய் சிவபெருமான் எழுதி வைத்தது நமது தேவைக்கும் பயன்படுவது நமது பாக்கியமல்லவா?

மறைமலை அடிகளுக்கும் குன்றக்குடி அடிகளாருக்கும் திருவாசகம் பயன்பட்டதை நீ அறிவாய். நமது காலத்தில் நம்முடைய தேசத்தவரான பேராசிரியர் தயா சோமசுந்தரம் தான் தனிமையில் ஓய்வாக இருந்து வாசிக்க திருவாசகத்தை வைத்திருப்பதாகச் சொன்னார். இவர் 'இன்றைய உலகில் போர்கள் மக்களின் அழிவைதான் விரும்புகின்றன என்று ஒரு பேட்டியில் கூறியவர் அழிவை அகற்ற ஞானப்படை நடத்த விரும்புபவர். போர் காலத்தில் யாழ்ப்பாணத்திற்கு அருகில் உள்ள அல்லப்பிட்டி என்ற ஊரில் 'நவஜீவ இல்லம்' என்ற அமைப்பை உருவாக்கியவர். உளவியல் தொடர்பான கருத்தரங்குகளை நடத்தியவர். நண்பா! உரிமை வேட்கை வெந்து சாம்பராகியது. பயிர்களும் உடமைகளும் இழக்கப்பட்டு விட்டன. வாழ்ந்த நிலத்தையும் குடியிருந்த மண்ணையும் பறிகொடுக்கும் பயங்கரச் சூழ்நிலை உருவாகியிருக்கிறது. நீ திருவாசகம் கூறும் ஞானப்படைபற்றி எழுதுகிறாய் என்று என் மீது விசனம் கொள்ளுவது புரிகிறது. நம்முடைய நிலத்தில் நம்முடைய மண்ணில் நம்மவர்கள் இறந்தாலும் வாழ்ந்து கொண்டிருக்கிறனர். ஆவி உலகம் பற்றி நீ அறிந்திருப்பாய். இது கற்பனையல்ல. உண்மை அறுபது ஆண்டுகளுக்கு முன்பு மதுரை ஆதீனத்தில் குருமகா சந்நிதானமாய் வீற்றிருந்த சோமசுந்தரத் தம்பிரான் எழுதிய ஆவியுலக ஆராய்ச்சி நூலினைப் படித்திருப்பாய். அவற்றினை மீள்பார்வை செய்வாயாக. சியாட்டில் (Seattle) என்ற செவ்விந்தியன் எழுதிய குறிப்பும் நம்மால் நினைவு கூரப்பட வேண்டும். அவன் என்ன சொன்னான்?

'இந்த மண்ணின் ஒவ்வொரு கூறும் எமது மக்களால் ஒரு புனிதத்துகளாய் ஏற்றுப் போற்றப்படுவது. ஒவ்வொரு குன்றும் ஒவ்வொரு வெளியும், ஒவ்வொரு தோப்பும் ஒவ்வொரு பள்ளத்தாக்கும் என்றோ கழிந்த ஒரு நாளில் நேர்ந்த ஓர் இன்ப நிகழ்வினால் அல்லது துன்ப நிகழ்வினால் புடம் போடப்பட்டது. அமைதியில் உறையும் நீர் நிலையோரம் தகிக்கும் வெய்யிலில் மாண்டு மரத்தவை போல் தோன்றும். பாறைகள் கூட எம்மக்களின் வாழ்வுடன் ஒன்றி உணர்ச்சி பொங்கும் நிகழ்வுகளின் நினைவுகளால் பூரிப்பவை. இப்பொழுது நீ மிதிக்கும் புழுதிகூட உன் காலடிகளை விட என் மக்களின் காலடிகளையே அதிக வாஞ்சையுடன் எதிர்கொள்ளும்.



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)


தொடர்ச்சி 37ஆம் பக்கம்

YARL WINDOW
BLINDS & DRAPER

VENETIAN / VERTICAL / ROLLER
WOOD / FORM WOOD
BLINDS WOOD & VINYL SHUTTERS

WE ARE SPECIALIZED
IN CUSTOM MADE
Drapery & Blinds





Since 1991
Tel: 416.806.5397
905.201.7733

Call: selvam

We have experience
to make your home
more beautiful

# ஈரானின்...

32ஆம் பக்கத்தொடர்ச்சி

கொடுக்கின்றார். சூழலுக்கு ஏற்ப வளைந்து கொடுக்கும் தன்மை இங்கு வெளிப்படுகின்றது. இதனை இயக்குனர் ஒரு விமர்சனமாகவே முன்வைக்கின்றார். இரண்டு வர்க்கங்களுக்குமிடையில் பொருளாதார வேறுபாடுகள் மாத்திரமல்ல கலாச்சார வேறுபாடுகளும் உள்ளன. மத்திய தரவர்க்கத்தினர் நவீனத்துவத்தையும் மேற்கத்தியத்தையும் நோக்கி சாய்கின்றனர். இவ்வாறு பல சிக்கலான விடயங்களை - பாத்திரங்களை ஒருங்கே கொணர்ந்து விவாதிக்கின்றார் இயக்குனர். மதத்தை தாங்கிப் பிடிப்பவர்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களே. மத்திய மேல் தட்டு வர்க்க மக்கள் சட்டத்திற்காகவே மதத்தை கடைப்பிடிக்கின்றார்கள். மறுபுறம் ஈரானிய நீதிமன்றங்களில் வழக்கறிஞர்கள் இல்லை. நீதிபதி நேரடியாகவே சம்பந்தப்பட்டவர் களுடன் கதைக்கின்றார். அவரது தீர்ப்பே இறுதியானது

தனது வாழ்க்கையில் நடைபெற்ற சம்பவங்களே இப்படம் என இயக்குனர் ஒரு பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். இப் படத்தில் வரும் நடீரின் தந்தை போலவே எனது தாத்தாவும் அல்சைமர் நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். எனக்கும் ஒரு மகள் உண்டு. நானும் இதே போன்ற சம்பவங்களால் பாதிக்கப்பட்டுள்ளேன். எனவே இதனை படமாக்க இயக்குனர் பல உத்திகளை படமாக்கியுள்ளார். முதலாவது நடைமுறைக் காட்சிகளை படமாக்குவது போல் இயல்பாக படமாக்கியுள்ளார். இரண்டாவது கமாராவும் ஒரு பாத்திரமாக உள்ளது. குறிப்பாக பாத்திரங்களின் அருகில் கமரா உள்ளது. மூன்றாவதாக கமாராவின் திறனை படம் வெளிப்படுத்தாது. எனவே பார்வையாளர்கள் இதனை இயல்புக் காட்சி போல் உள்வாங்குவார்கள். இவற்றை இயக்குனரும் உறுதி செய்துள்ளார். படம் இறுதிக் காட்சியில் முடிவெதையும் கூறாமலேயே முடிந்து விடுகின்றது. இது பற்றி இயக்குனர் கூறிய கருத்துக்கள் முக்கியமானவை. மக்களிடம் கேள்விகள்தான் அதிகமாக உள்ளன. நான் பார்வையாளர்களிடமிருந்து விடைகளை மறைக்கவில்லை. எனக்கும் பதில் தெரியாது. அடுத்தாக நீங்கள் பதிலை கொடுத்து விட்டால் படம் அத்துடன் முடிந்து விடும். பதிலாக நீங்கள் கேள்விகளை பார்வையாளர்களிடம் விட்டு விட்டால் படம் அங்கிருந்து தான் ஆரம்பமாகின்றது. பார்வையாளர்களுக்கும் சிந்திக்க சந்தர்ப்பம் கிடைக்கின்றது. படமும் தொடர்ந்து



வாழ்கின்றது. இப் படத்துக்கு கிடைத்த பல விருதுகளுக்கும், பாராட்டுக்களுக்கும் இறுதி முடிவும் ஒரு காரணம். சிறந்த திரைக் கதையமைப்புடன், படம் எழுப்பும் பன்முக வெளிப்பாடு மிகச் சிறப்பாக உள்ளது. இப்படத்தில் யார் சிறந்த நடிகர் என்றால் விடை தேடுவது கடினம். இரண்டு மாத கடும் பயிற்சியின் பின்னரே படப்பிடிப்பை ஆரம்பித்தார் இயக்குனர்.

இப்படம் ஒஸ்காருக்கு உத்தியோகபூர்வமாக அனுப்பப்பட்ட படம். ஈரானில் இதுவரை வெளிவந்த படங்களில் அதிக வசூலை பெற்ற படம். இயக்குனரின் About Elly ஈரானிய அரசால் தடைசெய்யப்பட்ட படம்.

Director: Asghar Farhadi
இயக்கிய படங்கள்- Director (5 titles)
2011 - A Separation 2009 - About Elly
2006- Fireworks Wednesday
2004 -Beautiful City
2003- Dancing in the Dust
நடிகர்கள்- Nader - Peyman Maadi
Simin - Leila Hatami,
Razieh - Sareh Baya

இதே பாணியில் அரசியல் படமில்லாமல் அரசை விமர்சிக்கும் மற்றொரு படம். Circumstance. அதாவது சூழ்நிலை என்ற பெயரில் வெளிவந்துள்ள பேர்சிய மொழிப் படம். மேற்கின் தொழில்நுட்ப தாக்கத்தினாலும் (இன்ரநெற், சற்றலைட் தொலைக்காட்சி, முகநூல்) கீழைத் தேயத்தின் கலாச்சார ஒடுக்கு முறைகளாலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பதிவுசெய்துள்ளது. இதனை ஈரானிய படமென கூறவில்லை. இப் படம் லெபனான-ில் படமாக்கப்பட்டுள்ளது. ஈரானில் திரையிட முடியாது. பொதுவாக ரொரண்ரோவில் உள்ள ஈரானிய கடைகளில் சகல ஈரானிய படங்களையும் பெறலாம். இப்படம் பற்றி கேட்டபோது ஒரு கடை முகவர் நேரடியாகவே கூறினார் 'நாங்கள் இவ்வாறான படங்களை விற்பதில்லை'. அப்படி என்ன இப்படம் கூறுகின்றது. Atafeh, Shireen இரு பள்ளித் தோழிகள். நல்ல நண்பர்கள். Atafeh இன் தந்தை இசையில் நாட்ட முடைய பெற்றோர்கள். Shireen மாமாவுடனும், பாட்டியுடனும் வாழ்ந்து வருகின்றார். இவர்களுக்கு நகரில் உள்ள சகல மேற்கத்திய பாணியிலான பார்கள். நடன கிளப்புக்கள் அனைத்தும் தெரியும். இவை அனைத்தும் சட்டத்துக்கு புறம்பாக பண்டகசாலைகளில் மறைவாக நடைபெற்று வருகின்றன. இவர்களது நட்பு காதலாக மாறுகின்றது. Atafeh இன் அண்ணன் ஆரம்ப நாட்களில் வீட்டுக்கு வருவதில்லை. பின்னர் இஸ்லாமிய தீவிர பின்பற்றாளராக மாறிவிடுகின்றார். இவருக்கு தனது சகோதரியும், நண்பியும் செல்லும் இடங்கள் அனைத்தும் தெரிந்து விடுகின்றது. ஒரு தடவை இவர்களை பொலிஸ் பிடித்த பொழுதே பெற்றோருக்கு Atafeh, Shireen இருவரும் கன்னித் தன்மையை இழந்து விட்டார்கள் என்ற விடயம் தெரியவருகின்றது. Shireen, Atafeh இன் அண்ணன் பொலிசிடமிருந்து விடுவிக்கின்றான். அதன் பின்னர் Shireen ஐ திருமணம் செய்து கொள்கின்றான். ஒரே வீட்டில் தோழிகள் இருவரும் வாழ்கின்றனர். இவர்களது உறவு தொடர்கின்றது. தமையன் வீட்டில் சகல மூலை முடுக்கெல்லாம் கமாராக்கள் வைத்து இவர்களது உறவை நடமாட்டத்தை அறிந்து கொள்கின்றான். இக்கட்டான கட்டத்தில் Atafeh பாரிசுக்கு தப்பி ஓடி விடுகின்றார்.

இப்படம் இன்றைய ஈரானிய சூழலை வெகு அழகாக படம் பிடித்து காட்டுகின்றது. ஆப்கான் குடும்பத்தில் நடைபெற்ற கொலைகளை அவர்களது மூத்த மகன் திட்டமிட்டு குடும்பத்தின் காவலனாக திகழ்வது போல் இங்கும் மகனே மதத்தின் கலாச்சாரத்தின் காவலனாக திகழ்கின்றான். இது மற்றொரு வகை முக்கோணக் காதல் எனக்கூறமுடியாது. சகோதரியும், சகோதரனும் ஒரு பெண்ணை விரும்புகின்றனர். Atafeh, Shireen இருவரும் ஒருவரையொருவர் விரும்புகின்றனர். சகோதரனுக்கு காதல் இருந்த போதும் ஒரு நிர்ப்பந்தமும் ஏற்படுகின்றது. தான் சகோதரியின் காதலியை திருமணம் செய்தால் சகோதரியை இவ்வுறவில் இருந்து காப்பாற்றலாம். Shireen ன் பெற்றோர் அரசியல் எழுத்தாளர்கள், கொல்லப்பட்டு விட்டனர். பாட்டிக்கு வீட்டில் அதிகாரமில்லை. மாமா சொல்வதையே கேட்க வேண்டும். Atafeh இன் சகோதரனை திருமணம் செய்வதன் மூலம் பொருளாதார சுதந்திரத்துடன் காதலியும் கிடைத்துவிடுவார் என நினைக்கின்றார். இதனை இயக்குனர் ஒரு பேட்டியில் கூறியதன் மூலமே தெளிவாகின்றது. காட்சிகள் திருமணத்திற்கான இருவரது காரணங்களையும் தெளிவு படுத்தவில்லை. படம் பின்னணி இசை படமாக்கப்பட்ட முறை போன்ற பல விடயங்களை ஈரானிய பின்னணியையே வெளிப்படுத்துகின்றன.

இப் படத்தின் இயக்குனர் Maryam Keshavarz. இவர் நியுயோர்க் பல்கலைக்கழகத்தில் திரைப்படத் துறையில் இயக்குனர் பிரிவில் பட்டப்படிப்பை

தொடர்ச்சி 38ஆம் பக்கம்

# பஷீர் :...

35ஆம் பக்கத்தொடர்ச்சி

நின்றார். அவரது இரண்டு கைகளும் என் தோள்மீது பதிந்தன. மெல்ல இழுத்து அவருக்கு நேராக நிறுத்தித் தலைமேல் கைகளை வைத்து ஆசீர்வதித்தார். "மங்களம். நல்லது வரட்டே. சுபம்". நெகிழ்ச்சியுடன் நடந்தபோதும் தம்ளரைக் கீழே வைத்தபோது கிழவர் காட்டிய கடுப்புக்குக் காரணம் புரியாமலிருந்தது.

பஷீரைப் பற்றிய விவரணப் படம் எடுத்தவரான எம்.ஏ. ரஹ்மானின் கட்டுரையை அண்மையில் படித்துக் கொண்டிருந்தபோது காரணம் விளங்கியது. சர்க்கரை மிச்சமிருக்கிற டீத் தம்ளரை நிமிர்த்திவைத்தால் எறும்புகளும் சிறு ஜீவராசிகளும் அதில் விழுந்து சாகக் கூடும். அதனால் பஷீரின் முற்றத்தில் எச்சில் தம்ளர்கள் எப்போதும் கவிழ்த்தே வைக்கப்படும். பஷீர் எதனால் கொண்டாடப்படுகிறார் என்று புரிகிறது. எறும்புகளின் விசும்பல்கூடப் பிரபஞ்சத்தின் ஒலிதான் என்று அவர் புரிந்துகொண்டிருந்தார் என்று புரிகிறது. இந்தப் புரிதல் மனிதனைத் தவிர யாருக்கும் கைகூடாது என்று சொல்லும் பணிவு கலந்த கர்வம் கொண்டவைதாம் பஷீரின் படைப்புகளா?

குறிப்புகள்:

இதில் கொடுக்கப்பட்டுள்ள மேற்கோள்கள் 'பஷீர் - முழுமையான படைப்புகள்' (1994) தொகுதிகளிலிருந்து எடுத்து மொழிபெயர்க்கப்பட்டவை.

எம்.ஏ. ரஹ்மான் கட்டுரை 'அக்னியால் ஒரு சோத்ய சின்னம்' (நெருப்பால் ஒரு கேள்விக்குறி) - மாத்ருபூமி வார இதழ் 13-19 ஜனவரி 2008.

தலைப்பு-பஷீரின் 'பூமியுடெ அவகாசிகள்' (பூமியின் உரிமையாளர்கள்) சிறுகதையிலிருந்து எடுக்கப்பட்டது.

சிறப்புப் பகுதி: பஷீர்: பூமியின் உரிமையாளர்

# கத்தியின்றி...

36ஆம் பக்கத்தொடர்ச்சி

எமது மூதாதையரின் குருதியில் ஊறி வளம் கொழிக்கும் புழுதி அல்லவா அது. அது பரிவுடன் எம்மை வருடுவதை எமது வெற்றுப் பாதங்களே அறியும். எம்மை விட்டுப் பிரிந்த மறவர்கள், வாஞ்சை பொழிந்த அன்னையர் அகமகிழச்சி மிகுந்த கன்னியர் ஒரு குறுகிய காலம் இங்கு வாழ்ந்து மகிழ்ந்த சிறுவர்கள் அனைவரும் இம்மங்கிய ஏகாந்தச் சூழலை நேசிப்பவர்கள். மாலையில் நிழல் என மீளும் ஆவிகளை வரவேற்பவர்கள். செம்மக்கள் மாண்ட பின்னர் வெண் மக்களிடையே எம்மக்கள் பற்றிய நினைவு ஒரு கட்டுக்கதையாய் மாறிய பின்னர் என் குலத்து மக்களின் ஆவிகள் மீளவும் வந்து இந்த நீர் நிலைகளை மொய்க்கும் ஆதலால் உங்கள் பேரப்பிள்ளைகள் வயலிலோ, களஞ்சியத்திலோ, கடையிலோ, தெருவிலோ பாதையும் ஓசையும் அற்ற காட்டிலோ தனியே நடமாடுவதாக நினைத்தாலும் அவர்கள் தனியே நடமாடப்போவதில்லை. ஏகாந்தத்திற்கு ஈயப்பட்ட இடம் எதுவுமே பூமியில் இல்லை. பொழுது சாயும் தோறும் உங்கள் கிராமத்துத் தெருக்களும், நகரத் தெருக்களும் வெறிச்சோடி அமைதியில் மூழ்குவதாய் நீங்கள் நினைத்தாலும், ஒரு காலத்தில் இந்த அழகிய நிலத்தை மொய்ப்பர். எனவே வெண்மக்கள் என்றுமே இங்கு தனியே நடமாடப் போவதில்லை.

நண்பா!
சியாட்டில் தன் இனமக்கள், மண் குறித்துச் சொன்னவை நமக்கும் பொருந்தும் தானே. ஆவி உலகம், மறுபிறப்பு, என்பவற்றில் நம்பிக்கை இல்லாதவர்கள் கூட சியாட்டில் சொன்னதைக் கேட்டதும் எதையோ நினைத்துப் பெருமூச்சு விடுகிறார்கள். நமது மூச்சும் பேச்சும் உள்ளவரை உண்மையை நிஜத்தை யதார்த்தத்தை ஒப்புக்கொள்ளவே வேண்டும். இதற்குத் தான் கத்தியின்றி இரத்தமின்றி யுத்தம் ஞானப்படையால் நடைபெறவேண்டும். நடக்குமா? நடத்து வாயா? உனது பதிலை எதிர்பார்க்கிறேன்.

நகைச்சுவைத் தொடர் 240

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்





காதலிக்க வாவென்று நானுன்னை அழைக்கவில்லை
வாழ்க்கையொடு காதலிக்கவேயுன்னை அழைக்கின்றேன்.
- *கலலகலப்பு இதழில் 1974 இல் தீசன் எழுதிய வரிகளிலிருந்து*

காதலர்தினம்…பமிலி டே - குடும்பத்தவர் தினம்.
இரண்டும் ஒரே மாதத்தில் ஏழுநாள் இடைவெளியில் வருகிறது.




குடும்பத்தலைவன் குடும்பத்தலைவி
நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்
தனிக்குடித்தனம் கூட்டுக்குடும்பம்
குடும்பம் என்று சொல்லும்பொழுது அத்தனை
சொல்லுகளும் வந்து போகின்றன.



நித்திரை விழிக்க சிவராத்திரி.
(சிலருக்கு) நித்திரை கொள்ள அடுத்தநாள் பெப்ரவரி 20 பமிலி டே.
(விடுமுறைநாள் மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்)
பமிலி டே விடுமுறையில் என்ன மாற்றம்?
அதே கோவில் அதே கடைகளில் சொப்பிங் ரி.வி.யில் அதே (அழும் நாடகங்கள்)
ஆனால் ஒரு நிம்மதி. லைற் தண்ணி கேபிள் ரெலிபோன் பில் தபாலில் வராது.
கிறடிற்காட் பில் செலுத்தவில்லையென்று ரெலிபோன் கோல் வராது.

மோலுக்கு சென்று களைத்துப்போய் ஆட்டிலறி அன்னம்மாவும் செக்கண்ட்புளோர் செல்லம்மாவும் உலகரின் வீட்டுக்குள் வரும்பொழுது முருகேசரின் அறையை எட்டிப்பார்த்து விட்டுத்தான் வருவார்கள்.
சிலவேளை முருகேசர் நித்திரையாக இருந்தால் மனதில் பல விதமாக நினைத்துக் கொள்வார்கள். அதாவது மூச்சுவிடுகிறாரோ அல்லது ஒரேயடியாக மூச்சைவிட்டு விட்டிட்டாரோ என அபரீத கற்பனைகள் செய்துகொள்வார்கள். பிறந்தவர்கள் எல்லோரும் இறப்பது திண்ணம்.
முடிசார்ந்த மன்னரும் பிடிசாம்பல் ஆவது திண்ணம். ஆனால் இன்று பல வருத்தங்கள் சிகிச்சைகளும் பலனளிக்காத பட்சத்தில் நம்பியிருக்கும் மருத்துவரும் இறுதியில் இனி கடவுள்தான் காப்பாற்ற வேணுமென்று சொல்லி முடிப்பார்.

என் செயலாலாவது யாதொன்றுமில்லை -இனி தெய்வமே நின் செயலென்றுணரப்பெற்றேன். - பட்டினத்தார் பாடல். பலருக்கு காதில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. எம்மிடத்தில் பலர் இன்று அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பது இல்லையே…யாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம் என மேடைகளில் முழங்குவர். இவர்கள்கூட பொலிசார் தடியடி கண்ணீர்ப்புகை துப்பாக்கி போன்றவற்றைக் கண்டதும் பேச்சுமூச்சின்றி ஓடுவது மரணபயம். ஆனால் குடும்பத்தில் ஒருவருக்கு முன்னர் குறிப்பிட்டதுபோல மருத்துவர் கைவிட்டபின் இன்றோ நாளையோ ஒரு வாரமோ ஒருவருடமோ என சொன்னபின் அந்தக்குடும்பத்தவர் கணவனோ மனைவியோ பிள்ளைகளோ படும் அவஸ்தை வெளியில் சொல்ல முடியுமா?



முருகேசரைப் பொறுத்தமட்டில் ஆரம்பகாலத்து நண்பன் உலகர்.
இடைக்காலத்தில் பழகிய ராசம்மா ரூபன் ரூபி ஆட்டிலறி
அன்னம்மா செக்கண்ட்புளோர் தான் இன்றைய குடும்பம்.
முருகேசரின் மகனும் மகளும் எங்கிருக்கிறார்களோ தெரியாது.



பல உறவுகளை நினைத்துப்பார்த்தார்.
முதுமையடைந்து படுக்கையிலிருக்கும் பொழுதுதான்
பலருக்கு பிறந்த உறவுகளும் பிரிந்த உறவுகளும் ஞாபகம் வருகிறது.
நேரத்திற்கேற்ற பாடல் வானொலியில். யாரோ நொந்துபோன பெற்றோர்
விரும்பிக்கேட்ட பாடல் ஒலிபரப்பிக்கொண்டிருந்தது.
ஒரேயொரு ஊரிலே ஒரேயொரு ராஜா ஒரேயொரு ராஜாவுக்கு ஒரேயொரு ராணி
ஒரேயொரு ராணிபெத்தா ஒன்பது பிள்ளை அந்த ஒன்பதிலே ஒன்றுகூட உருப்படியில்லை…
…….. ……….. ……………. …………
நன்றிகெட்ட மகனைவிட நாய்கள் மேலடா

சிவராத்திரிக்கு எந்தக்கோவிலுக்குப் போறியள் உலகண்ணை என சோம்பல் முறித்தபடி கேட்டா செக்கணட் புளோர் செல்லம்மா. திரும்பிய பக்கம் ஆலயங்கள் உண்டு. விரும்பிச் செல்பவர்கள் தான் குறைவு.

FAMILY SPONCERSHIP குடும்ப ஒன்றிணைவு
இந்திய இலங்கை ராணுவ கொலைவெறி கொண்டாட்டங்களில் திண்டாடி
ஆப்பிட்ட திசைகளிலும் உறவினர் நண்பர்கள் கூப்பிட்ட திசைகளிலும் சென்று
அகதிநிலை கோரி நிரந்தரவதிவிட வாசியாகி குடும்ப
ஒன்றிணைவில் சந்தோசமாக வாழும் குடும்பங்களுக்கு
வாழ்த்துக்கள்.



வந்து சிறுபிரச்சினைகளைப் பெரிதாக்கி வீடு இரண்டுபட்ட
குடும்பங்கள் எத்தனை ?

சொல்லத்தான் நினைக்கிறேன்…

**மார்ச் 2012 ஞாபகம் வருகிறதா!**




19. சிவராத்திரி
20. ஒன்ராறியோ பமிலி டே
20. மலேசியா வாசுதேவன் நினைவு தினம்.
20. ஈழத்து பேராசிரியர் சு. வித்தியானந்தன் நினைவுதினம் (1989)
21. எம்.ஆர். ராதா வில்லன் நகைச்சுவை நடிகர் (எம். ஆர். ராதாவ-ின் ரத்தக்கண்ணீர் படம் அதன் பாடல்கள் வசனம் யாரும் இன்றுவரை மறக்கமாட்டார்கள்.
22. காதல் மன்னன் ஜெமினி கணேசன் நினைவு தினம். 2005 (அன்று கல்யாணப்பரிசு பாசமலர் இறுதிக்காலத்தில் ஔவை சண்முகி).
22. ஜோர்ஜ் வாஷிங்ரன் அமெரிக்க முதல் குடியரசுத்தலைவர் பிறந்த தினம்
26. செல்வி ஜெயலலிதா நடிகை முதலமைச்சர் பிறந்த தினம்
27. சுஜாதா பிரபல எழுத்தாளர் நினைவு தினம்



காதலர் தினத்திற்காக ஒரு வருடம் காத்திருந்து பரிசு வாங்குவார்கள் !
ஆனால் அன்னையர் தினம் மட்டும் நினைவில் இருக்காது !

# தாய்மொழியே தாய்மண்ணே

தாய் மண்ணே! தாய் மண்ணே!
என் உயிராம் தாய் மண்ணே!
தமிழீழ தாய் மண்ணே!
என் தாய் பிறந்த தாய் மண்ணே!
மகிழ்ந்திருந்த உன்னை
அழித்தார்களே
உலகம் கண்திறந்து பார்க்கவில்லையே
உனது வேதனையை?


தமிழ்த் தாயே! தமிழ்த் தாயே!
நீ ஈன்றெடுத்த வீரப்பிள்ளைகள்
எங்கே போனார்கள்?
தனிமரமாய் நீ
தரணியிலே நிற்பது ஏன்?

தாய்மொழியே! தாய்மொழியே!
எம் இனிய தமிழ்மொழியே!
உன்னைப் பேச
குவலயம் தனிலே
எவரும் இலரோ?

தமிழ் மகளே! தமிழ் மகளே!
உன் ஈழத்தாய்மண் எங்கே?
உன் மொழி எங்கே?
தமிழ்த்தாய் சென்றதெங்கே?

எல்லாம் இழந்து வாழ்கின்றோமே
இதற்கு ஓர் முடிவில்லையா?
வருவாரோ எம் தலைவர் மாமா?
வென்று தருவாரோ
தங்கத் தமிழையும்
தமிழீழ மண்ணையும்?

தலைவர் மாமா! தலைவர் மாமா!
காத்திருக்கின்றோம் உங்களுக்காக..
எப்போ நீங்கள் வருவீர்கள்?
ஈழமும் தமிழ்மொழியும்
மீட்டெமக்குத் தருவீர்கள்?
அதுவரை நாம் காத்திருப்போம்
விடியும் ஒருநாள் எங்களுக்கும்!



**திவ்யா பிரபாகரன்**
**அகவை 12**

# ஈரானின்…

**37ஆம் பக்கத்தொடர்ச்சி**

முடித்துள்ளார். பின்னர் மெக்சிக்கன் பல்கலைக் கழகத்தில் முதுமானிப் பட்டம் பெற்றுள்ளார். இன்றைய முன்னணி பெண் இயக்குனர்களில் குறிப்பிடத்தக்கவர். சில வருடங்களுக்கு முன்பாக இவர் The Colour of Love விவரணத் திரைப்படத்தை இயக்கியிருந்தார். இப்படம் இன்றைய ஈரானில் ஏற்பட்டுள்ள கலாச்சார மாற்றங்களை அதன் மூலங்களை ஆய்வு செய்கின்றது. அதன் தொடர்ச்சியே இப்படம் எனலாம். விவரணத்திரைப் படத்தில் உள்ள பல விடயங்கள் இப்படத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

இயக்குனர் ஒரு பேட்டியில் சமூக உறவுகளையும் பெண் உடல்களையும் அரசே கட்டுப்படுத்துகின்றது என விமர்சித்துள்ளார். இதன் விளக்கத்தை இப்படத்தில் காணலாம். சமூக, மத, கலாச்சார கூறுகளை அரசே கட்டுப்படுத்துகின்றது. இதனை அரசியல் படமில்லை எனக் கூறினும் அரசையே இப்படம் விமர்சிக்கின்றது.

Director: Maryam Keshavarz the third jihad
Writer: Maryam Keshavarz
Stars: Sarah Kazemy, Nikohl Boosheri and Reza Sixo Safai
http://www.takepart.com/circumstance
இவ்விரு படங்களில் A Separation ரொரண்ரோ திரையரங்குகளில் தற்சமயம் திரையிடப்படுகின்றன. Circumstance படத்தை அனைத்து வீடியோக் கடைகளிலும், ரொரண்ரோ பெரும்பாக நூலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

# எத்தனை...


என்று சொல்கிறார்களாம். உலகம் முழுமைக்குமான ஒரு பொது ரசனை உண்டாகப் போகிறது என்று தோன்றுகிறது. பொது வாழ்க்கை முறை ஒன்று உண்டாகப் போகிறது, உலகம் முழுவதும் ஒரே ஷாம்பு உபயோகிக்கிற மாதிரி. வணிகம் முதலில் பொருளாக வருகிறது. பிறகு அது கருத்தாக மாறுகிறது. மேற்கத்திய நாகரிகத்தின் தாக்கம் காரணமாக கலாச்சார அதிர்ச்சிகளையெல்லாம் இந்தியா சந்தித்துக் கொண்டிருக்கிறது. அப்படி நானே பாட்டெழுத வேண்டி வந்திருக்கிறது. சிகரெட்டுக்கு விரோதமானவன் நான். ஆனால், என் கொள்கையைத் தூக்கி எறிந்துவிட்டு, "என்னைப் பற்ற" வை என்று பாட்டெழுதியிருக்கிறேன். அந்தப் பாத்திரத்தின் குரலை நியாயப்படுத்தும் பாடல் என்கிற அடிப்படையில் அதை பாடலாசிரியனாக எழுதினேன்."

நீங்கள் இணைந்து வேலை செய்த இசையமைப்பாளர்களில் உங்கள் கவித்துவ ஊற்றைத் திறக்க பெரிதும் உதவிய இசையமைப்பாளர்கள் யார், யார்?

"இளையராஜாவைச் சொல்லுவேன், ஏ.ஆர்.ரகுமானைச் சொல்லுவேன். அதற்குக் காரணம் வேறொன்றுமில்லை. என் சுதந்திரத்தில் தலையிடாமல் பெரிதும் உதவி செய்தார்கள். இசையமைப்பாளருக்கும் மொழி அறிவும் மொழி ரசனையும் இருந்தால்தான் வேலை செய்வது எளிதாக இருக்கும். இவர்கள் இருவருக்கும் அந்த ரசனை நிறையவே உண்டு. இளையராஜா இசையில் எழுதிய 'பனிவிழும் மலர்வனம்' பாட்டு ஒரே தடவையில் ஓகே செய்யப்பட்டது. 'சின்னச் சின்ன ஆசை' பாடலில் ஆசை என்று வரவேண்டும் என்பதற்காக மெட்டில் திருத்தம் செய்துகொடுத்தார் ரகுமான். வரிகளில் இலக்கியம் குறைவாக இருந்தால் குறைவாக இருக்கிறது, இன்னும் கொஞ்சம் சேருங்கள் என்றும் அவர் சொல்வார்."

உங்கள் பாடல்கள் உங்களுக்கே மனநெகிழ்ச்சி தந்த வாழ்வின் சந்தர்ப்பங்கள் உண்டா?

"கனவுகாணும் வாழ்க்கை யாவும் கலைந்து போகும் காலங்கள்' என்கிற பாட்டு என் தாத்தா இறந்தபோது ஒலிபரப்பப்பட்டது. இவருக்காகவா இந்தப் பாடலை எழுதினேன். ஆனால், அப்போது இந்த நிமிடத்துக்காகவே எழுதினேன் என்று நினைத்தேன். அந்தப் பாடல் எனக்கு தந்தது, ஆறுதல் போல் ஒரு அழுகை. அழுகை போல் ஒரு ஆறுதல்."



ஒரு பாடலாசிரியரான நீங்கள் இசையமைப்பாளர், இயக்குநர் ஆகியோரோடு நட்பாக இருப்பது இயல்பு. அதையும் தாண்டி கமல், ரஜினி போன்ற நடிகர்களோடும் நட்பாக இருப்பது எப்படி?

"நடிகர்களுடன் பழகிப் பார்த்தபோது அவர்கள் மிகச் சிறந்த அறிவாளிகள் என்பது தெரிந்தது. அவர்களுடைய அனுபவம் பெரிது. ஒன்றுமே தெரியாதவன் நடிகனாக ஆனாலும் கூட காலம் அவனுக்குக் கற்பித்துக் கொண்டேயிருக்கிறது. நான் அடையாத அனுபவங்கள், எனக்குத் தெரியாத உலகம் பற்றியெல்லாம் அவர்கள் உணர்ந்து சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு மனிதரிடமும் நல்ல அம்சங்களையே நான் பார்க்கிறேன். கமல், ரஜினியிடம் நல்ல அம்சங்கள் நிறையவே இருக்கின்றன."

மக்கள் ரசனை காலத்துக்குக் காலம் மாறுபடும் என்பார்கள். இப்போது எப்படியிருக்கிறதென நீங்கள் நினைக்கிறீர்கள்?

"இப்போது தமிழ் சினிமா தொழில்நுட்பத்தின் உச்சத்தில் இருக்கிறது. கதை நுட்பத்தில் தளர்ந்துபோய் இருக்கிறது. தமிழ் சினிமா துண்டாப்பட்டுவிட்டது. பெண்களும் முதியவர்களும் தொலைக்காட்சி பார்க்க வீட்டில் அமர்ந்துவிட்டார்கள். கல்லூரி மாணவர்கள் சினிமா அல்லாத மிகப் பெரிய ஊடகங்களில் தங்கள் வாழ்க்கையைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது சினிமா பார்க்க வருகிறவர்கள் காதலர்களும் உழைக்கும் மக்களும்தாம். இவர்கள் இருவருடைய ரசனைக்காகத்தான் இன்றைக்கு சினிமா எடுக்கப்படுகிறது. காதலர்களுக்குக் காதல், பாட்டாளிகளுக்குச் சண்டை சினிமா என சினிமா சந்தை சுருங்கிப் போய்விட்டது. கதையை ரசிக்கும் கூட்டம், அழுவதற்கான கூட்டமெல்லாம் ஒதுங்கிவிட்டது."

போட்டி நிறைந்த இந்த உலகில் உங்கள் மகனோடும் போட்டிபோட வேண்டிய சூழலில் நீங்கள் இருக்கிறீர்கள். அது பற்றி?

"இங்கு யாருக்கும் யாரும் போட்டி இல்லை. அவரவர் களம் அவரவர்க்கு. எத்தனை கட்டு மரங்களும் மீன் பிடிக்கலாம் என்றால்தான் அது கடல். எத்தனை பேரும் இயங்கலாம் என்றால்தான் அது சினிமா."



# இயற்கை...

## 20ஆம் பக்கத்தொடர்ச்சி

சொல்கிறனர். எப்போது என்ன விலங்கு வரும் என்று தெரியாதாம். சில மான்கள் பகலிலேயே கண்ணில் தென்படுகின்றன. காட்டுப் பன்றியும் ஆங்காங்கு இருக்கிறது. இரவு தங்கியிருக்க நமக்கு தைரியமும் அதிர்ஷ்டமும் இருந்தால் நாம் மற்ற விலங்குகளையும் நேரடியாகவே



பார்க்கலாம். ஆனால், யானைகளைப் பார்க்க இரவு தங்கியிருக்க வேண்டிய அவசியமில்லை. வனத்துறையினர் ஆற்றோரமாகவே யானைச் சவாரியை நடத்தி வருகின்றனர். தண்ணீர் இல்லாத போது பந்திப்பூர் காட்டு பகுதியில் இருந்தும் யானைகள் இங்கே வருமாம். யானை கூட்டமாக இருந்தால் ஏதும் செய்யாதாம், தனியாக இருந்தால் ஜீப்பை உதைக்க வரும் என்கிறார்கள். பந்திப்பூர், முதுங்கா, முதுமலை ஆகிய மூன்று காடுகள் சந்திக்கும் இடம் என்பது முத்தங்கா சரணாலயத்தில் கூடுதல் சிறப்பு. ஆம் தமிழ்நாடு, கர்நாடகம், கேரளா ஆகிய மூன்று மாநிலங்களும் இங்கே சந்திக்கின்றது.

மானந்தவாடியிலிருந்து 20 கி.மீ. தூரத்தில் உள்ளது பேகர் வனவிலங்கு சரணாலயம். இங்கு பலவகையான வன விலங்குகளைப் பார்க்கலாம். இதேபோல மானந்தவாடியில் இருந்து சுமார் 40 கி.மீ. தொலைவில் உள்ள நாகர்ஹோல் வனவிலங்கு சரணாலயப் பகுதியிலும் பல வகை விலங்குகளின் நடமாட்டத்தைக் காண முடியும். அரிய வகைத் தாவரங்களும் இங்கு உண்டு. நாகர்ஹோல் வன விலங்கு சரணாலயம் அமைந்திருப்பது கர்நாடக மாநிலத்தில் என்றாலும், ஏறக்குறைய 64,339 சதுர கி.மீ. பரப்பளவுக்கு கேரள மாநிலத்தினுள்தான் ஊடுருவி இருக்கிறது. இயற்கை விரும்பிகளுக்கு நிச்சயம் இவை மறக்க முடியாத இடங்களாக, ஒரு அனுபவமாக இருக்கும்.

நீர்வீழ்ச்சி எப்போதும் சுகம்தான். அதுவும் வயநாட்டில் சென்ற பக்கமெல்லாம் நீர்வீழ்ச்சி தான். மேப்பாடிக்கு அருகில் இருக்கும் சிப்பாரா அருவி உண்மையில் இயற்கையின் கொடைதான் என்று சொல்லுமளவு இன்னும் கண்டுபிடிக்க வேண்டிய ஏராளமான செல்வங்களோடு விளங்குகிறது. வரிசைத் தொடரான அருவிகள் 100 அடி முதல் 300 அடி உயரத்திலிருந்து பாய்வது கண்களுக்குத் தனி விருந்து. காண்போரை பரவசப்படுத்துவதோடு ஆச்சரியப்படுத்தவும் வைக்கிறது. இவற்றில் தடாகத்தில் நீந்தலாம், குளிக்கலாம், சூச்சிப்பார பகுதியில் மரங்களின் மேல் அமைக்கப்பட்டுள்ள தங்கு குடில்களிலிருந்து மேற்குத் தொடர்ச்சி மலைப் பள்ளதாக்குகளையும் சுற்றுபுற வெள்ளி நீருற்றுகளையும் கண்டு பரவசப்படலாம். இந்த அருவி வயநாட்டுக்கே அழகு சேர்த்துக் கொண்டிருக்கிறது எனச் சொல்லலாம். சிப்பாரா அருவி போல மேப்பாடிக்கு அருகே வெள்ளரிமலா கிராமத்தில் அமைந்துள்ள சென்டினல் ராக் அருவியும் பிரபலமானது. மேப்பாடி பஞ்சாயத்திற்கு உட்பட்ட சூரல்மலாவின் வெள்ளரிமலா கிராமத்தில் இந்த அருவி அமைந்துள்ளது. மலைப் பகுதி என்பதால் நடை பயணித்திற்கும், மலையேற்றத்துக்கும் ஏற்ற இடமாகவும் இது இருக்கின்றது. இயற்கையின் அழகை 200 மீட்டர் உயரமுள்ள மலைப்பாதையிலிருந்து ரசிப்பதற்கென்றே எப்போதும் உள்ளூர் பயணிகளின் கூட்டம் இருக்கும்.

இந்த இரண்டு அருவிகளுக்கும் சற்று குறைவில்லாதது மீன்முட்டி அருவி. சுமார் 300 மீட்டர் உயரத்தில் இருந்து கொட்டிக் கொண்டிருக்கும் மீன்முட்டி அருவி, ஊட்டி மெயின் ரோட்டில் அமைந்துள்ளது. அழகும் ஆர்ப்பரிப்பும் மீன்முட்டி அருவியின் தனிச்சிறப்பு. விண்முட்டி நிற்கும் மீன்முட்டி அருவியின் அழகு, நம்மை கண்கொட்ட விடாமல் மீண்டும் மீண்டும் ரசிக்க வைக்கும்.

கல்பேட்டா நகரில் இருந்து சுமார் 20 கி.மீ. தொலைவில் இருக்கிறது சோச்சிப்பாரா நீர்வீழ்ச்சி. பாதையில் ஒரு வாகனம் மட்டுமே செல்ல முடியும். அதிலும் கடைசி 2.5 கி.மீ நடந்தேதான் செல்லவேண்டும். மலை நடுவிலே செல்ல நல்ல பாதை அமைத்து இருக்கிறார்கள். இந்த நீர்விழ்ச்சிக்கு செல்லும் பாதையில் இரண்டு பக்கமும் காபி தோட்டம் கண்ணுக்கு குளிர்ச்சியாக இருக்கிறது.

“காடுகள் என்றால் அருவி, சரணாலயம், காட்டாறுகள்தான் இருக்கும். இவற்றுடன் வரலாற்று சிறப்புமிக்க விடயங்கள், ஆன்மீகத் தலங்கள் ஆகியவையும் இருந்தால் சிறப்பாக இருக்குமே” என யோசிக்கிறீர்களா. கோயில் இல்லாமலா, வரலாற்று பெருமைகொண்ட வரம்பெற்ற மசூதி, இருளம் சீதாதேவி கோயில் போன்ற ஆன்மீகத் தலங்களும் வயநாட்டில் உள்ளது. எல்லாவற்றையும் விட முக்கியம், வயநாட்டின் சிறப்பான மரவீடுகள்... அவற்றை அடுத்த இதழில் பார்ப்போம்!





